வெளியீடு 26-10-98 Issued 26-10-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 31, 1998 – தொகுதி 41 – எண் 3

Tuesday the 31st March, 1998 – Volume 41 – No. 3

...மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...lative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

D.
V2!!, 31/III/98.
1998 41-3
216452

415/99

31-3-1998

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கல் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் திருமதி ஏ. ஜி. பத்மாவதி மறைவு | 269-270 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 270-303 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) கைத்தறி நெசவாளர்கள் திருப்பூர் நகரில் 23-3-1998 அன்று நடத்திய போராட்டத்தின்போது காவல் துறை தடியடி மேற்கொண்டது. | 304-312 |
| (ஆ) பேராசிரியர் பரமசிவம் 28-3-1998 அன்று மதுரையில் கொலை செய்யப்பட்டது. | 312-320 |
| **4. விதி 110-ன்கீழ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை—** | |
| தொழில் வரி சட்டத்தை மறு ஆய்வு செய்ய குழு நியமனம். | 321-322 |
| **5. தகவல் கோரல்—** | |
| புத்தன்தருவை பகுதியிலுள்ள குளங்களுக்கு நீர் வழங்குதல் | 323-329 |

பக்கங்கள்

6. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி ... 330-396

திரு. ப. ரங்கநாதன் ... 330-342

* மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி ... 334-335, 343-345, 378, 381, 392

* திரு. பெ.சு. திருவேங்கடம் ... 347-353

* திரு. ரா. சேதுநாதன் ... 353-358

திரு. ஆர்.ஆர். சேகரன் ... 359-364

* திரு. ஆர். சிவானந்தம் ... 364-369

* திரு. அ.வ. அப்துல் நாசர் ... 369-374

டாக்டர் காஞ்சனா கமலநாதன் ... 374-380

திரு. ஜி.கே. மணி ... 380-388

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் ... 388-394

திரு. மா. இராமச்சந்திரன் ... 394-396

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... 397-399

21452

D
V2M,31L98
N98.41.3

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 17, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மார்ச் 31, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

### 1. இரங்கல் குறிப்பு

**முன்னாள் உறுப்பினர் திருமதி ஏ.ஜி. பத்மாவதி மறைவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் குறிப்பு. மறைந்த தமிழக முன்னாள் அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களின் துணைவியாரும் இம்மன்றத்தின் உறுப்பினரான திரு. ஏ.ஜி. சம்பத் அவர்களின் தாயாரும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினருமான திருமதி ஏ.ஜி. பத்மாவதி அம்மாள் அவர்கள் 30-3-1998 அன்று மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி ஏ.ஜி. பத்மாவதி அம்மாள் அவர்கள் 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் அன்றைய தென்னாற்காடு மாவட்டம், முகையூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு முதன் முதலில் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை அத்தொகுதியிலிருந்து இரண்டாம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காத்தனர்)*

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள், வினா எண் 81, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**81—**

### பரிசுப் பொருட்கள் வழங்கியது

**3267*—**திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* டாமின் நிறுவனத்தின் பணியாளர்களுக்கு நிர்வாகமே விலை உயர்ந்த பரிசுப் பொருட்களை வழங்கியுள்ளது குறித்து அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், இந்தப் பரிசுப் பொருட்கள் எதற்காக வழங்கப்பட்டன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ)* ஆம்.

*(ஆ)* கடந்த 1992 ஆம் ஆண்டு சிவகங்கை இராபைட் தொழிற்சாலைக்கு சுரங்கப்பணி தொடங்கப்பட்டபோது, டாமின்



...வனத்தின் பணியாளர்களின் பணித்தன்மையை மெச்சுதல் என்ற ...ாரணங்களைக் காட்டி, டாமின் பணியாளர்களுக்கு ரூ.200 மதிப்புள்ள ...வர்சில்வர் குடமும், *1991-92, 1992-93, 1993-94* ஆம் ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஊழியருக்கும் முறையே *ரூ.521, ரூ.831,* மற்றும் *ரூ.993* மதிப்புள்ள தங்க ஆபரணம், *1993-94, 1994-95* மற்றும் *1995-96* ஆம் ஆண்டுகளில் முறையே *ரூ.11.48* இலட்சம், *ரூ.18.39* இலட்சம் மற்றும் *ரூ.22.47* இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. வேறு எந்த அரசு நிறுவனமும் இம்மாதிரியான பரிசுப் பொருட்களை வழங்கியதாகத் தகவல் இல்லை. டாமின் நிறுவனம் அரசின் நிறுவனமாக இருந்த போதிலும், அரசின் முன் அனுமதி பெறவில்லை.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அந்த ஆட்சியிலே வேலியே பயிரை மேய்ந்த கதையாகிவிட்டது. அன்றைக்கு யாருடைய அனுமதியும் பெறாமல், அரசினுடைய அனுமதியும் பெறாமல், அவர்கள் தங்கள் இஷ்டம்போல், தங்களுக்கு வேண்டியவர்களுக்கு - அந்தப் பணியாளர்களுக்கு-அவர்களை ஊக்குவிக்கிறோம் என்று சொல்லிவிட்டு, பரிசுத் தொகையை வழங்கினார்கள். அன்றைக்கு அந்த மாஜி முதலமைச்சருடைய உருவம் பொருத்திய கணையாழியைப் பரிசாக அளித்திருக்கிறார்கள். எங்கள் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், டாமின் நிறுவனத் தொழிலாளர்கள் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இதுபோன்ற பரிசுத் தொகையை வழங்கவில்லை என்று வருத்தப்படுகிறார்கள். ஆகவே, அருள்கூர்ந்து, கருணை உள்ளம் கொண்ட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசு அனுமதியோடு, அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு, முன்புபோல் இல்லாமல், ஏதாவது ஒரு சிறிய பொருளையாவது, அல்லது ஏதாவது ஒரு தொகையையாவது கொடுத்து, அவர்களைத் திருப்திபடுத்த வேண்டும். அவ்வாறு திருப்திபடுத்துவீர்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கடந்த கால அரசின் நல்ல காரியங்களைத்தான் இந்த அரசு தொடரும். இதுபோன்ற காரியங்களைத் தொடராது.

[1998 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 82, திரு. த. நடராஜன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**82—**

**துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்தல்**

*7703—**திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சியில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செஞ்சியில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சியிலுள்ள இந்த காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிடுவார்களா? அதேநேரத்தில் இந்த டி.எஸ்.பி. அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடம் ஏற்கெனவே ஆளும் கட்சிக்காரர் ஒருவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்கூட நேரிலே பார்வையிட்டுள்ளார்கள். அதனால் அந்த இடத்தை மீட்டு, அதே இடத்தில் டி.எஸ்.பி. அலுவலகம் கட்டித் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிடுவாரா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அது பற்றி அரசு ஆலோசித்து, கவனிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைவது அவசியம் என்று காவல் துறையின் பரிந்துரையோடு அரசுக்கு வந்துள்ள



1998 மார்ச் 31]

அறிக்கையின் அடிப்படையில் குடவாசலில் ஒரு துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் இந்த ஆண்டு அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி தேவைப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாட்டில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு அதைத் தொடங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதுபோன்ற கேள்விகளை ஒரே தொகுப்பாக வழங்கினால், ஒரே நாளில் இவற்றிற்கு எல்லாம் பதில் சொல்ல இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 83, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**83—**

**நூலகங்களின் சிறப்புச் செயல்பாடு**

*2508—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொது நூலகம், பள்ளி நூலகம், பல்கலைக்கழக நூலகம் முதலான யாவும் சிறப்பாகப் பயன்படத்தக்க வகையில் மாற்ற அரசு வழிவகைகளைச் செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் பொது நூலகம் அத்துறை இயக்குநர் மூலம், பொது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வண்ணமும், பொது மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றும் இயங்குகிறது. பள்ளி நூலகங்கள், கல்லூரி நூலகங்கள், அவை ஒவ்வொன்றின் நிலைக்கு ஏற்ப அவற்றினுடைய

[1998 மார்ச் 31

மாணவர்கள் தருகிற கட்டணம் என்ற அந்த அடிப்படையில் முதல்வர் அல்லது பள்ளித் தலைமை ஆசிரியருடைய ஆலோசனையின் பேரில் சீராக இயங்கி வருகின்றன. பல்கலைக் கழக நூலகங்கள், அந்தந்தப் பல்கலைக்கழகம் ஒதுக்கும் நிதிக்கு ஏற்ப துணை வேந்தருடைய ஆலோசனையோடு உயர்நிலை நூலகமாகச் செயல்பட்டு வருகின்றன.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மை எப்பொழுதுமே ஏமாற்றாத நல்ல நண்பன் புத்தகம் என்று சொல்வார்கள். அந்தப் புத்தகங்கள் பெரும்பாலும் நூலகங்களிலே அடிக்கடி காணாமல் போய்விடுகின்றன, களவாடப்படுகின்றன. அத்தகைய நூல்களை மீண்டும் அந்த நூலகங்களிலே கொண்டுவருவதற்கு, வாங்குவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா? ஒவ்வொரு பல்கலைக்கழக நூலகத்திலும் மேலை நாடுகளிலே ஆராய்ச்சிகளின் தலைப்புகள் எல்லாம் தொகுக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல் நம்முடைய பல்கலைக்கழகத்திலேயும் ஒவ்வொரு துறை சம்பந்தமான தலைப்புகள், விவரப்பட்டியல்களைத் தொகுத்து வைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை பல்கலைக்கழக நூலகங்களைப் பொறுத்தவரையில் அங்கேயுள்ள ஆட்சிக் குழு, சிண்டிகேட்டினுடைய ஆலோசனையின்படி பெருமளவிற்கு நிறைவேற்றப்படுகிறது. புதிய பல்கலைக்கழகத்திற்கு பல்கலைக்கழக மானியக் குழுவும் சில வகையில் உதவி செய்கிறது. புதிய இண்டர்நெட் போன்ற வசதிகள், அவர்களுடைய பொருளாதார வசதிகளுக்கு ஏற்ப தொடங்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பொதுவாக அந்த நூலகத்திலே கிடைக்கக்கூடிய புத்தகங்கள் மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு பயன்படத்தக்க வகையில், ஒரு பட்டியல்—ஒரு முறையான பட்டியல் வைக்கப்பட்டிருக்கிறது என்றுதான் நான் அறிகிறேன். புத்தகங்கள் திருடுபோவதைப் பொறுத்தவரையில், அதற்குத் திட்டவட்டமான காரணம் சொல்லமுடியாது. அதிகம் படிக்கிற ஆசை உள்ளவர்களும் திருடுகிறார்கள்; படிக்காதவர்களும் திருடுகிறார்கள்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல பள்ளி நூலகங்கள், கல்லூரி நூலகங்களில் தந்தை



1998 மார்ச் 31]

பெரியார், அண்ணா ஆகியோர்களுடைய புத்தகங்கள் எல்லாம் இடம் பெறவில்லை. ஆகவே, பகுத்தறிவுக் கருத்துக்களை ஏற்றிருக்கிற தந்தை பெரியாருடைய புத்தகங்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய புத்தகங்கள், நம்முடைய முதல்வர் அவர்களுடைய புத்தகங்கள் எல்லாம் அப்படிப்பட்ட பள்ளி நூலகங்களிலும், கல்லூரிகளிலும் வைப்பதற்கு நூலகத் துறை இயக்குநர் மூலமாக அரசு ஆலோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, பள்ளிகளில் உள்ள நூலகங்கள், கல்லூரிகளில் உள்ள நூலகங்கள் நூலகத் துறையினுடைய தொடர்போடு இயங்குவன அல்ல. பள்ளிக் கல்வித் துறை, கல்லூரிக் கல்வித் துறையினுடைய தொடர்போடுதான் அவை இயங்குகின்றன. ஒவ்வொரு பள்ளியிலேயும், கல்லூரியிலேயும் எப்படிப்பட்ட புத்தகங்கள் வாங்க வேண்டும் என்பதை அவர்களேதான் தீர்மானித்துக் கூறுகிறார்கள். இன்னும் ஒரு வகையிலே குறிப்பிடுவதாக இருந்தால் மாணவர்கள் தருகின்ற கட்டணம் மிகக் குறைந்த கட்டணம். ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் கட்டணம் அளவுதான் செலுத்துகிறார்கள். அதைச் சற்று உயர்த்தினால் பள்ளிக்கூடங்களிலே, கல்லூரிகளிலே அதிக அளவிற்குப் புத்தகங்கள் வாங்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும். பெரியார் அவர்களுடைய புத்தகங்கள், அண்ணா அவர்களுடைய புத்தகங்கள் தடுக்கப்படவில்லை. அவைகளுக்கு எந்தத் தடையும் இல்லை. அங்கேயுள்ள ஆசிரியர்களுடைய ஆர்வத்திற்கேற்ப அந்தப் புத்தகங்கள் இடம் பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டப் பேரவையில் இருக்கிற நூலகம் எப்போது முன்போல இயங்கத் துவங்கும், அது எப்போது கணினிமயமாக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னவராக இருந்தாலும்கூட, இது போன்ற கேள்விக்குத் தனியாக கேள்வி போட்டால்தான் தகுந்த விடையை அறிந்து சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புத்தகம் என்பது மனிதனுடைய புத்தியைக் கூர்மைப் படுத்துவதற்குரிய மிகச் சிறந்த சாணைக்கல்லாகத்தான் இருக்கிறது.

[1998 மார்ச் 31

ஆனால், இன்றைய தமிழகத்தின் அனுபவம், சமூக வாழ்வில் மனிதர்கள் ஒன்றுபட வேண்டும் என்பதற்குப் பதிலாக சாதி, மதங்களின் பெயரால் வேறுபடுகின்ற நிகழ்ச்சிதான் வாழ்வாக நிகழ்ந்துகொண்டு வருகிறது. இவற்றிற்குக் காரணமாக இருப்பதே அவர்களுடைய சிந்தனைகளில் ஆதிக்கம் செலுத்துகின்ற கருத்துதான். எனவே, மாநில அரசு இதை ஒரு முதலீடாகக் கருதி, ஒவ்வொரு ஒன்றியத்திலேயும், ஒவ்வொரு பஞ்சாயத்திலேயும், ஒரு நூலகம் என்ற முறையில் ஏற்படுத்தி, அவற்றில் உலகளாவிய பகுத்தறிவாளர்களின் கருத்துக்களையும், அறிவியல்பூர்வமான சிந்தனையைத் தூண்டுகின்ற கருத்துக்களையும் கொண்ட புத்தகங்களைச் சேமித்து வைக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் நூலகங்களை வைக்க வேண்டும் என்பது. உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிந்ததற்குப் பின்னர் அந்தந்த உள்ளாட்சி மன்றங்கள் அவர்களுடைய விருப்பப்படி செய்வதற்கு எல்லா வாய்ப்பும் இருப்பதாக நான் அறிகிறேன். தமிழ்நாடு முழுவதும் தொடர்புடையதாக இயங்குகின்ற நூலகத் துறையினுடைய கிளைகள் ஏறத்தாழ 1,400 அல்லது 1,500 கிளைகள்தான் இன்றைக்கு இருக்கின்றன. ஒரு ஆண்டுக்கு 100, 200 கிளைகள் அதிகமானாலும்கூட அந்தக் கிளை நூலகங்கள் முழு அளவிற்கு விரிவுபடுத்தப்படுவது என்பது இயலாது. ஏனென்றால் பத்தாயிரம் ஊராட்சி மன்றங்களுக்கு மேல் இந்தத் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் விரும்பினால் அப்படி அமைக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட நூலகங்களில் உலகம் தழுவிய மேதைகளுடைய கருத்துக்களை எல்லாம் கொண்ட புத்தகங்களை வைத்தால், எடுத்துப் படிக்க ஆள் இருக்கமாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 84, திரு. எஸ்.வி. கிருஷ்ணன். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**84—**

### பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைத்தல்

*7970—**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 31]

(அ) நாங்குநேரி தொகுதியில் பல்தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஆகையால், பல் தொழில் நுட்பப் பயிலகம் அமைக்க அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைவிட அந்தத் தொகுதியையே முன்னேற்றி விடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 85, திரு. ஜி.பி. வெங்கிடு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**85—**

### கோழி எச்சத்தில் மின் உற்பத்தி

*9980—**திரு. ஜி.பி. வெங்கிடு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோழி எச்சத்தை எரிபொருளாகக் கொண்டு மின் உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

[1998 மார்ச் 31

முற்பகல் 9-45

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி எச்சத்தை எரிபொருளாகக் கொண்டு மின்சாரம் தயாரிக்கலாம் என்பதும், அது மற்றவகையான மின்சாரம் தயாரிப்பதைக்காட்டிலும் செலவு குறைவானது என்ற கருத்தும் இருக்கிறது. அதன்படி கோழி எச்சத்தை எரிபொருளாகக் கொண்டு மின்சாரம் தயாரிக்கிற திட்டத்தை அரசு கடைப்பிடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோழி எச்சத்தை எரிபொருளாகக் கொண்டு மின் உற்பத்தி செய்ய உரிய நடவடிக்கை அரசு எடுத்து வருகிறது. கோழி எச்சத்தை எரித்தல் (incineration) மற்றும் நொதித்தல் (fermentation) மூலம் எரிபொருளாக்கி மின் உற்பத்தி செய்யலாம். கோழி எச்சத்தை எரித்து எரிபொருளாக்குவதால் அதன் உரக் கழிவுகள் தரம் குறைந்துவிடுகிறது. ஆனால் நொதித்து எரிபொருளாக்குவதால் உரக் கழிவுகள் மேம்படுத்தப்பட்டதாகவும், சர்வதேச அளவில் தரம் மிக்கதாகவும் இருக்கும். எனவே, இது தொடர்பாக தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து சேலத்தில் உள்ள அவர்களது கோழிப் பண்ணையில் மாதிரி கலன் ஒன்றை அமைத்து ஆராய்ச்சி நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்து வருகிறது. ஆனால், இப்படிக் கோழி எச்சத்தின் மூலமெல்லாம் மின்சாரத்தைத் தயாரிக்க முயற்சி எடுக்கலாமே தவிர, அதனால் எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்று பார்த்தால், ஆண்டு ஒன்றுக்கு 5 அல்லது 10 மெகாவாட் மின்சாரம் கிடைக்கக் கூடும். இருந்தாலும், சிறுதுளி பெரு வெள்ளம் என்பதைப்போல அதையும் நாம் வீணாக்கக் கூடாது என்பதற்காக அரசு இந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**86—**

## சித்த மருத்துவப் பிரிவு தொடங்குதல்

*10802—**திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 மார்ச் 31]

(அ) செங்கம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செங்கம் அரசு மருத்துவமனை உள்பட 46 தாலுகா அரசு மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்க அரசாணை (நிலை) எண் 558, மக்கள் நல்வாழ்வுத் துறை நாள் 13-11-1997-ல் அரசின் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தால் மறைந்துவிட்ட தமிழ் மருத்துவம் என்று சொல்லப்பட்ட சித்த மருத்துவம் கலைஞரின் அரசு எடுத்துக் கொண்ட பெரு முயற்சியில் மிகுந்த வளர்ச்சி அடைந்து வருகின்றது. இந்த காலகட்டத்தில் செங்கம் அரசு பொது மருத்துவமனையில் அலோபதி மருத்துவத்தோடு சித்த மருத்துவப் பிரிவும் தொடங்கினால் மொத்த நோய்களையும் தீர்க்க வழி பிறக்கும். ஆகவே, செங்கம் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவையும் தொடங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்று தங்கள் மூலம் அறிந்துகொண்டேன். அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. நயினா முகமது.

**திரு. கோ. நயினா முகமது:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூரில் 1989-90 ஆம் ஆண்டில் நமது அரசால் சித்த மருத்துவமனைக் கட்டடம் கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டு, பொதுப்பணித் துறையிடம் சித்த மருத்துவமனை கட்ட ஒப்படைக்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் நிதிஒதுக்கி கடையநல்லூரில் சித்த மருத்துவமனை கட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிதி நிலையை அரசு கருத்தில் கொண்டு எங்கெல்லாம் தாலுகா மருத்துவமனைகள் ஏற்கெனவே இயங்கி வருகின்றனவோ அந்த வளாகத்திற்குள்ளேதான் சித்த மருத்துவமனையும் இயங்கிக் கொண்டிருக்கிறது. நிதி தாராளமாக

கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுமானால் சித்த மருத்துவத்திற்கு என்று தனியாக மருத்துவமனை கட்டலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியில் வைகையின் தென் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய பாலகங்காபுரம் அரசு மருத்துவமனையில் சற்றேறக்குறைய 1,100 பேருக்கு மேல் புறநோயாளிகள் வந்து செல்கின்றனர். அந்த மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஆரம்பிப்பதற்கான கோரிக்கைகள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதைப் பரிசீலனை செய்து அங்கே ஒரு சித்த மருத்துவமனைப் பிரிவு ஆரம்பிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் 24-லும் தாலுகா மருத்துவமனைகள் 158-லும் தாலுகா அல்லாத மருத்துவமனைகள் 10-லும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் 286-லும், அரசு மருந்தகங்கள் 11-லும், அரசு ஊரக மருந்தகங்கள் 21-லும், மலைவாழ் திட்ட மருந்தகங்கள் 7-லும் சித்த மருத்துவப் பிரிவுகள் இப்போது இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த மருத்துவமனையிலும் சித்த பிரிவு தொடங்க வேண்டிய அவசியம் இருந்தால் நிச்சயம் இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவப் பிரிவு எல்லா ஆஸ்பத்திரிகளிலும் தொடங்கப்பட்டிருக்கிறது என்பது உண்மைதான். டாக்டர் போட்டிருக்கிறீர்களா? சித்த மருத்துவர்கள் அங்கே இருக்கிறார்களா? அப்படி எத்தனை டாக்டர்கள் இருக்கிறார்கள் என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசால் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்ற எல்லா மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்னும் ஏறக்குறைய 300 மருத்துவர்கள்





வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வேண்டும் என்றும் அதேநேரத்தில் தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் சித்த மருத்துவப் பிரிவு தொடங்கவேண்டும் என்றும் அந்த மருத்துவர்கள் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப அவர்களுடைய தேவையை நிறைவேற்றிக்கொண்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உலகத்தையே பயமுறுத்திக்கொண்டு வருகின்ற கொடிய நோய் எய்ட்ஸ். இந்த நோயை குணப்படுத்துவதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ அலோபதி முறையில் மருந்துகள் இல்லையென்று கூறப்படுகிறது. ஆனால் சித்த வைத்திய முறையில் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும், குணப்படுத்தமுடியும் என்று மருத்துவர்களால் கூறப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் இந்த சித்த மருத்துவத்தை ஊக்கப்படுத்துகின்ற வகையிலும், பரவலாக அத்துணை மக்களுக்கும் அது கிடைக்கின்ற வகையிலும் இந்த சித்த மருத்துவத் துறையில் பயிற்சிப் பெற்ற டாக்டர்களை தமிழ்நாட்டில் உள்ள 1,420 ஆரம்ப சுகாதார நிலையங்களில் படிப்படியாக பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலோபதி மருத்துவத்திலே டாக்டர் பட்டம் பெற்ற டாக்டர் ஞானசேகரன் அவர்களே அலோபதியில் இதற்கான மருந்துகள் இல்லையென்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சித்த மருத்துவத்திலே இதற்கு மருந்துகள் இருப்பதாகவும், அந்த மருந்துகளைக் கொண்டு தாம்பரத்திலுள்ள டி.பி. சானடோரியம் மருத்துவமனையில் ஏறக்குறைய 400-க்கு மேற்பட்ட நோயாளிகள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு சித்த மருத்துவத்தின் மூலம் மருந்துகள் வழங்கப்பட்டு, ஏறக்குறைய 200-க்கு மேற்பட்டவர்கள் குணமாகி வீட்டுக்குச் சென்றிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் சித்த மருத்துவத்தின் மூலம் எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இருந்தாலும் விஞ்ஞான ரீதியாக அது இன்னும் நிரூபிக்கப்படவில்லை. எனவே, அது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவேண்டுமென்று இலாக்காவை வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். அதற்கு 50 இலட்சம் ரூபாய் நிதி

[1998 மார்ச் 31

வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் வழங்க அரசு உரிய ஆணையை பிறப்பித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்திற்கு தமிழகத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கூட மிகக் கவர்ச்சியாகவே இருக்கிறார்கள். சித்த மருந்துகளை அதிகமாக பொது நலன் கருதி பயன்படுத்துகிறார்களோ என்று கருதுகிறேன். அப்படிப் பொதுவாகப் பயன்படுத்தி உடல் நலத்திற்கு பயன் தரக்கூடிய அந்த மருந்துகளை நமது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தில் மிக நல்ல மருந்துகள் இருக்கின்றன. எப்படி நம்முடைய அலோபதியில் விட்டமின் மருந்துகள் இருக்கிறதோ அதைப்போல சித்த மருத்துவத்தில் அரைக்கீரை போன்ற கீரைகளை மாத்திரைகளாக்கி வினியோகித்துக் கொண்டிருக்கிறார்கள். கீரை சாப்பிட இயலாத சூழ்நிலை ஏற்படுகின்ற நேரத்தில் அந்த மாத்திரைகளை வாங்கி தினந்தோறும் 2 சாப்பிடுவார்களானால் அவர்கள் உடல் மிக நன்றாக இருக்கும். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்கூட பொலிவோடு இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தை நடைமுறைப்படுத்தி வருவதைப்போல பொதுவாக வாத நோய், தோல் நோய் இவைகளுக்கு எல்லாம் நல்ல மருத்துவமாக இருக்கின்ற ஆயுர்வேதத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். அது பல்வேறு விதமான நோய்களைக் குணப்படுத்துகின்ற வகையில் மாநிலத்தினுடைய மையத்தில் பரிட்சார்த்தமாக ஒரு ஆயுர்வேத மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்திற்கு இந்த அரசு கொடுக்கின்ற முக்கியத்துவத்தைப்போல ஆயுர்வேதம், யுனானி, போன்ற இந்திய மருத்துவத்திற்கும் உரிய முக்கியத்துவம் தந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 87, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**87—**

**துணை வட்டாட்சியர் அலுவலகம் அமைத்தல்**

*10795—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், அந்தியூர், சத்தியமங்கலம், தாளவாடி ஆகிய ஒன்றியங்களில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க, பருகூர், தாளவாடி, கடம்பூர் ஆகிய இடங்களில் தனித் துணை வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-55

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், தாளவாடி ஒன்றியத்திலும், சத்தியமங்கலம் ஒன்றியத்திலுள்ள கடம்பூரிலும், டி.என். பாளையம் ஒன்றியத்திலுள்ள குன்றியிலும், அந்தியூர் ஒன்றியத்திலேயுள்ள பர்கூரிலும், அந்தப் பகுதிகளிலே அதிகமாக வாழக்கூடிய மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும், அந்தச் சுற்று வட்டாரப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களெல்லாம் சான்றுகள் பெறுவதற்கு, இறப்புச் சான்றுகளாக இருந்தாலும், வருமானச் சான்றுகளாக இருந்தாலும், கல்விச் சான்றுகளாக இருந்தாலும், எதுவாகயிருந்தாலும், தாளவாடியிலேயிருந்து சத்தியமங்கலம் வரக்கூடிய சூழ்நிலையும், பர்கூரிலேயிருந்து அந்தியூர், பவானிக்கு வரக்கூடிய சூழ்நிலையும், ஏற்படுவதோடு மாத்திரம் அல்லாமல் அதிகாரிகள் இல்லாத நேரத்தில் அங்கேயே இரண்டு நாட்கள் தங்கியிருக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. இன்னிலை மாற்ற மலைவாழ் மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு உதவிகரமாக இருக்கக்கூடிய வகையில்,

[1998 மார்ச் 31

ஆங்காங்கே துணை ஆட்சியர் அலுவலகத்தை அமைக்க வேண்டும்; அப்படியில்லை என்று சொன்னாலும்கூட வாரம் இரண்டு முறை அங்கே துணை ஆட்சியர் சென்று, தேவையான சான்றுகளைப் வழங்குவதோடு, அத்தியாவசியப் பொருட்கள் ஒழுங்காக வழங்கப்படுகின்றனவா என்பதையும் அதன் மூலமாக அரசு கண்காணிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? நீங்கள் ஒரு சொற்பொழிவே ஆற்றியிருக்கிறீர்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** பேரவைத் தலைவரவர்களே, நான் எனது பதிலில் இப்பொருள் குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று குறிப்பிட்டேன். நிதிநிலை காரணமாக அடுத்த ஒரு ஆண்டில் புதிய வட்டங்கள் மற்றும் புதிய வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்குவது இல்லை என்று 20-6-1997-இல் அரசு முடிவெடுத்துள்ளது. ஆனால் உணர்ச்சியோடும், உற்சாகத்தோடும், ஆசையோடும், ஆர்வத்தோடும் உறுப்பினர் கேட்ட காரணத்திற்காக அவருக்குச் சொல்லுகிறேன், உறுப்பினரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலித்து உரிய நடவடிக்கையை, தக்க சமயத்தில் எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 88, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**88—**

**சமுதாய நலக்கூடம் அமைத்தல்**

*6156—**திரு. அ.வ. அப்துல் நாசர் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பின்னலூரில் சமுதாய நலக்கூடம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1998 மார்ச் 31]

**மாண்புமிகு திரு.கோ.சி.மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்னலூர் கிராமம் என்பது மிகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் அதிகமாக வாழக்கூடிய ஒரு பகுதி, ஆகவே, அந்தப் பகுதி மக்கள் மிக நீண்ட நாட்களாகவே சமுதாய நலக்கூடம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களின் நிலையைக் கருத்திற்கொண்டு, பின்னலூர் கிராமத்தில் சமுதாய நலக்கூடம் அமைக்க அரசு இனிமேலாவது ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தில் புவனகிரி தொகுதியில், 1994-95 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தலா 2.50 இலட்சம் செலவில் கத்தாழை, சித்தேரி, வீரமுடியாநத்தம், நீராளூர், அகர ஆலப்பாடி ஆகிய பஞ்சாயத்தில் இப்படிப்பட்ட சமுதாய நலக் கூடங்கள் அமைக்கப்பட்டன. குறிப்பாக, தமிழ்நாட்டிலே சமுதாய நலக்கூடம் எதற்காக, எங்கெங்கே அமைக்கப்படுகிறது என்பதையெல்லாம் அறியாமல், தவறுதலாக முந்தைய அரசு அந்தத் திட்டங்களை அறிவித்து அதற்கு முறைகேடுகள் நடைபெற்று, அதில் பாதி வேலை நடக்காமல், இப்பொழுது நடக்க ஆரம்பித்திருக்கிறது. இந்நிலையில் கட்டிய இடங்களில் எல்லாம் அது சரியான பயனும் பெறவில்லை. எனவே, இப்படிக் கட்டியிருக்கிற அந்த ஒன்றியத்தில் உள்ள இந்தக் கட்டடங்கள் பயன்பெறுகிறதா என்பதை ஆராய்ந்து பிற்பகுதியிலே அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**89—**

**பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்துதல்**

*10320—**திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 மார்ச் 31

சீர்காழி தொகுதியிலுள்ள வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சி ஏறக்குறைய இருபதாயிரம் மக்கள் தொகையை உள்ளடக்கியது; 15 வார்டுகள் உள்ளன. ஆண்டுதோறும் ஆண்டு வருவாயாக ஏறக்குறைய பத்து இலட்சத்திலிருந்து 15 இலட்சம் வரை வருமானம் கிடைக்கிறது. வைத்தீஸ்வரன்கோயில் ஒரு புகழ் பெற்ற கோயிலாக விளங்கிக்கொண்டிருப்பதால் நாள்தோறும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தப் பேரூராட்சியினுடைய தரத்தை உயர்த்தும் வகையில், மறுபரிசீலனை செய்து நகராட்சியாக மாற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள இந்த வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியின் மக்கள் தொகை 1991 ஆண்டுக் கணக்குப்படி 6,490. தற்போது வேண்டுமானால் அது 7,500 ஆக இருக்கலாம். வருமானமே 10 இலட்சத்து 30,000 ரூபாய்தான். அவர் சொல்லுவது அத்தனையும் உண்மை. அது ஒரு பெரிய புனித ஸ்தலம். அங்கே மக்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்த 10 இலட்சத்து 30,000 ரூபாய் இப்போது இருக்கிற நிர்வாகச் செலவுகளுக்கே போதவில்லை. அதை நகராட்சியாக ஆக்கி ஏன் அந்த ஊரைக் கெடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. அதை நகராட்சி ஆக்கினால், பணியாளர்களுக்குச் சம்பளம்தான் கொடுக்கமுடியுமே தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாது. இன்னும் இதைவிட வேடிக்கை என்னவென்றால், அந்தப் பேரூராட்சியை நாங்கள் மேஜர் பஞ்சாயத்தாக ஆக்குகிறோம், எங்களுக்கு இந்த டவுன் பஞ்சாயத்தே வேண்டாம் என்று தீர்மானம் நிறைவேற்றி அரசு வேண்டுகோளுக்கிணங்க அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலிப்பதா, இதைப் பரிசீலிப்பதா என்பதை உறுப்பினர்தான் தெரிவிக்க வேண்டும்.



1998 மார்ச் 31]

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 90. டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**90—**

**தோட்டக்கலைக் கல்லூரி அமைத்தல்**

*6398—**டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் சட்டமன்றத் தொகுதி, பேச்சிப்பாறையில் செயல்பட்டு வரும் தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தில் தோட்டக்கலைக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

**டாக்டர் வே. ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம் பேச்சிப்பாறை பகுதியில் தோட்டக் கலை ஆராய்ச்சி மையம் ஒன்று 1989-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அன்று, அந்தத் தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தின் தொடக்க விழாவிற்கு வருகை தந்த அன்றைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், படிப்படியாக அந்தத் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் தோட்டக்கலைக் கல்லூரியாக மாற்றப்படும் என்று உறுதியளித்திருந்தார்கள். ஆனால். அது நடைபெறாமல் போனது. அந்தத் தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தின் பக்கத்தில் நீர்வளம் மிகவும் கொண்ட பல ஏக்கர் அரசு நிலம் இருக்கின்றது. எனவே, அங்கு ஒரு தோட்டக்கலைக் கல்லூரியை அமைத்து அந்த மக்களின் குறையைப் போக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1998 மார்ச் 31

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு இதுபோன்ற ஒரு கல்லூரியை அமைப்பதாக முன்னாள் அமைச்சர் சொன்னதாகத் தகவல் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. இப்போது அங்கு வேளாண்மைத் துறையின் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. ஒரு தோட்டக்கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமானால் அதற்கு 20 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். இன்றைக்குள்ள நிதிநிலை சூழ்நிலையில் அப்படி தனியாகக் கல்லூரி ஒன்றை அமைக்கத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, திரு. கோ. தளபதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**91—**

### ஆனைகஜம் அணைக்கட்டுத் திட்டம்

*6488—**திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம், சேடப்பட்டி தொகுதி, ஆனைகஜம் அணைக்கட்டுத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி மாவட்டம், சேடப்பட்டி தொகுதியில் ஆனைகஜம் அணைக்கட்டுத் திட்டம் குறித்த நீரியல் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. விவரங்கள் கிடைத்த பின்னர் இதன்மீது ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3,000 ஏழை விவசாயக் குடும்பங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையைக் கருத்திலே கொண்டு இந்தத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்றித் தர வேண்டும் என்பதையும், என்னுடைய தொகுதியிலே எந்தவித அணைக்கட்டுத் திட்டமும் இல்லையென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேராப்பாறை அணைக்கட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியின்படி இந்த ஆண்டு தேராப்பாறை திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைகஜம் நீர்த் தேக்கத் திட்டம் பாசனத்திற்குரிய ஒன்றல்ல. சேடப்பட்டியிலே இருக்கிற பேரூராட்சிகள், ஊராட்சிகளுக்கெல்லாம் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க வேண்டும் என்று குடிநீர் வடிகால் வாரியம், வைகை ஆற்றினுடைய துணை நதியான மூங்கிலாற்றில், மயிலாடும்பாறைக்கு அருகிலுள்ள கருப்பையாபுரத்திற்குப் பக்கத்தில் ஆனைகஜம் என்ற இடத்தில் ஒரு சிறு நீர்த் தேக்கம் கட்டப்படுமா, ஆய்ந்து சொல்லுங்கள் என்று எங்களைக் கேட்டிருக்கின்றது. ஆனால், அது குறித்து நாங்கள் பார்க்கும்போது அதனுடைய catchment area, water spread area இரண்டும் வனப் பகுதிக்குள் வருகின்றன. ஆகையினாலே அது குறித்து ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல் அதைப் பாசனத்திற்குரிய ஒரு நீர்த் தேக்கமாகக் கட்ட முடியாது. காரணம் அது வைகை ஆற்றினுடைய உபநதி, அதைக் கட்டினால் கீழேயிருக்கிற இராமநாதபுரத்துக்காரர்கள், ஏற்கெனவே இருக்கிற சண்டையோடு இதையும் சேர்த்துக் கேட்பார்கள். ஆகையினாலே, வீண்வம்பை அரசு விலைக்கு வாங்குவதற்குத் தயாராக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 92, திரு. பி. வெங்கடசாமி, மற்றும் திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**92—**

### LAYING OF FOUR WAY ROADS

*6525—**Thiru B. Venkatasamy:**

**Thiru D. Sudarsanam:**

Will the Hon. the Minister for Highways be pleased to state—

(a) Whether there is any proposal to lay 4 way roads in NH 7 from Athipally to Krishnagiri and Krishnagiri to Chennai in the interest of development of Industries and Communication; and

(b) If so, the details there of ?

[1998 மார்ச் 31

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அத்திப்பள்ளியிலிருந்து கிருஷ்ணகிரி வரையிலும் உள்ள சாலை மற்றும் கிருஷ்ணகிரியிலிருந்து சென்னை வரையுள்ள சாலையை நான்கு வழிப்பாதையாக ஆக்குவதற்கு, செயற்குறிப்பு ரூபாய் 800 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

முற்பகல் 10-05

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, I am very thankful to the Hon. Chief Minister and the Hon. Minister for Highways for sanctioning Rs. 254 crores for laying the road from Athipally to Krishnagiri. I want to know whether there is any possibility to have a 4 way roads from Krishnagiri to Chennai because last time when the Hon. Chief Minister in his reply to the Budget was telling that there is a great need to lay 4 way roads from Krishnagiri to Chennai in the interest of developing industries and commercial aspects from Karnataka to Tamil Nadu. May I know from the Hon. Minister whether priority will be given to lay 4 way roads from Krishnagiri to Chennai, Sir?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரமாக செய்திகளைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சாலை மூன்று தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கின்றது. சென்னையிலிருந்து இராணிப்பேட்டை வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 4, இராணிப்பேட்டையிலிருந்து கிருஷ்ணகிரி வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 46, கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூர் வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7. இதில் கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூர் வரையுள்ள 60.985 கி.மீ. தூரத்திற்கு இப்போது மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதன் ஆய்வு முடிவுறும் நிலையில் உள்ளது. விரைவில் அது அனுமதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதைப்போல, இராணிப்பேட்டையிலிருந்து கிருஷ்ணகிரி வரையுள்ள பகுதிகளுக்கும், சென்னையிலிருந்து இராணிப்பேட்டை வரையுள்ள பகுதிகளுக்கும், சேர்த்துத்தான் 800 கோடி ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு



1998 மார்ச் 31]

மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்திய அரசினுடைய அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையிலிருந்து சென்னைக்கு போக்குவரத்து அதிகமாக இருக்கின்ற காரணத்தால், எஸ்டிமேட் 800 கோடி ரூபாய்க்கு தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருந்தாலும்கூட, உடனடியாக அந்தச் சாலையை 4 வழிப்பாதையாக ஆக்கவேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, நாம் மத்திய அரசுக்கு அனுப்பி, அதன்பிறகு அவர்கள் அதற்கு ஒப்புதலளித்து அனுப்புவதற்கு நீண்ட காலம் ஆகும். இப்படி தள்ளிக்கொண்டே இருப்பதைவிட, வெகு விரைவிலே சென்னையிலிருந்து இராணிப்பேட்டை வரையுள்ள பகுதிக்காவது வேறு ஏதாவது வழியிலே ஏற்பாடு செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலைகள் முழுமையாக தேசிய நெடுஞ்சாலைகளாக இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசினுடைய நிதியையும் மத்திய அரசினுடைய ஒப்புதலையும் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதற்கிடையில் நம்முடைய மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்தின்படி பூந்தமல்லியிலிருந்து போரூர் வரை 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன் (குறுக்கிடு) திரு. ப. மோகன் கந்தசாமி, மூலக் கேள்வி தர்மபுரி மாவட்டத்தைப் பற்றியது. கோவை மாவட்டத்துக்கும் இந்தச் சாலைக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் உட்காருங்கள். திரு. பி.வி.எஸ். வெங்கடேசன், கேளுங்கள்

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திப்பள்ளியிலிருந்து கிருஷ்ணகிரி வரையுள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7-லே நான்கு வழிப்பாதை அமைப்பதைப்போல கிருஷ்ணகிரியிலிருந்து சேலம் வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 7-லும் நான்கு வழிப்பாதை அமைக்கும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலுள்ள எல்லா முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளையும் மேம்படுத்துகின்ற முயற்சியில் நம்முடைய அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கிருஷ்ணகிரியிலிருந்து சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையை விரிவுபடுத்துகின்ற முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, போரூரிலிருந்து பூந்தமல்லி வரையுள்ள சாலைக்கு 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேலை நடந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதை கத்திப்பாரா நேரு சிலையிலிருந்து போரூர் வரைக்கும் நீட்டித்து நான்கு வழிப்பாதையாக அமைப்பதற்கு - இதுகுறித்து கடந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டது - ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கிறது. நான் முதலில் போரூரிலிருந்து பூந்தமல்லி வரை என்று சொன்னேன். கத்திப்பாராவிலிருந்து பூந்தமல்லி வரை அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ரூ. 800 கோடி மதிப்பீட்டிலான சென்னையிலிருந்து அத்திப்பள்ளி வரை சாலை அமைப்பதற்கான முன்மொழிவு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதிலே 10 கோடி ரூபாய் போரூரிலிருந்து சென்னை வரை சாலை அமைப்பதற்கு கிடைத்துவிட்டது. N.H. 46 and NH 4 ஆகிய இரண்டு சாலைகள் அமைப்பதற்கும் நம்முடைய தமிழக அரசு மத்தியிலே இருக்கின்ற அரசுக்கு எந்தத் தேதியில் கடிதம் எழுதியிருக்கிறது? அதற்கு ஏதாவது பதில் கடிதம் வந்திருக்கிறதா? நடப்பாண்டில் அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் ஏதாவது இருக்கின்றதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கத்திப்பாராவிலிருந்து பூந்தமல்லி வரை சாலை அமைப்பதற்கான அந்தத் திட்டம் நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து செய்யப்பட்டு வருகிறது. எந்தத் தேதியில் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது என்கின்ற விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவைப்பட்டால் பின்னாலே தெரிவிக்கிறேன். விரைவில் இந்த அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர்.

**93—**

### அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் பழுதுபார்த்தல்

***11395—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், செந்தலை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திருக்கோயிலில் குடமுழுக்கு நடைபெற்று சற்றேறக்குறைய 100 ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்பதால், இத்திருக்கோயிலில் ரூ. 18,25,000/- மதிப்பீட்டில் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு துறையின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பாண்டி மண்டலத்தில் அமைந்துள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் போல, சோழ மண்டலத்தில் அமைந்துள்ள இந்தத் திருக்கோயில் மிகவும் பிரசித்திபெற்றது. தற்போது மிகவும் இடிந்து, பாழடைந்த நிலையிலிருக்கிறது. ஏராளமான கல்வெட்டுக்கள் இருக்கின்றன. எனவே அரசு எப்போது அந்தத் திருக்கோயிலின் திருப்பணியைச் செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே 30-3-1998 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான திருப்பணிக் குழு அமைக்கப்பட்டவுடன் மூன்று வகையான நிதியினுடைய் ஒதுக்கீட்டின் அடிப்படையில்—பொது நல நிதியின் எதிர்பார்ப்பு, அரசு மானியம் எதிர்பார்ப்பு, பொது மக்கள் நன்கொடை ஆகிய மூன்றும் திரட்டப்பட்டு—வெகு விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற கோயில்களைச் சீரமைப்பதற்கு ரூ.25,000/ வரை அரசு வழங்கலாம் என்கின்ற விதி இருக்கிறது. அது ஒவ்வொரு ஆண்டும் எத்தனை ஆலயங்களுக்கு வழங்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல்வேறு கோயில்கள் கிராமப்புறங்களில் நலிவடைந்த நிலையில் இருக்கின்றன. ஆனால் அந்தக் கோயில்களினுடைய வருமானம் சில நேரம் ரூ.200 ஆக இருக்கலாம் அல்லது ரூ. 1,000 ஆக இருக்கலாம். ஆனால் திருப்பணி செய்கின்றபோது பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவாகிறது. எனவே, இரண்டு கோணத்தில் கிராமப்புறங்களில் உள்ள கோயில்களை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. கலைச்சிறப்பு பொருந்திய மிகப் பெரிய கோயில்கள்; ஆனால் பாழடைந்த நிலையில் இருக்கின்ற கோயில்கள்; அதற்காக தனி நிதி ஒதுக்கி, பல இலட்சக்கணக்கிலே செலவிட்டால்தான் சீர்திருத்த முடியும். அதே நேரத்தில்





கிராமப்புறங்களில் நலிவடைந்த நிலையில் இருக்கிற சிறிய கோயில்களுக்கு ரூ.25,000/- வழங்கப்படுகிறது. ஏற்கெனவே ஆயிரம் கோயில்களுக்கு மேல் இப்படி வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் அது தொடரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, திரு. இரா. ஆவுடையப்பன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**94—**

## குடும்ப அட்டை வழங்குதல்

*4018—**திரு. இரா. ஆவுடையப்பன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

• அம்பாசமுத்திரம் தொகுதியில் குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில் தகுதி உள்ளவர்களுக்குக் குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பாசமுத்திரம் தொகுதியில் குடும்ப அட்டை கோரி 31-8-1996 வரை 6,320 மனுக்கள் வரப்பெற்றன. அவற்றில் 1,552 புதிய அட்டைகள் வழங்கப்பட்டன. 671 மனுக்கள் தகுதியற்றவை எனத் தள்ளுபடி செய்யப்பட்டன. மீதமிருக்கின்ற 4,097 மனுக்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதற்கிடையில் இவ்வாண்டு புதிய குடும்ப அட்டைகள் வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதால் மீதமுள்ள மனுக்கள்மீது மேல் நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

[1998 மார்ச் 31

95—

## REVIVAL OF AGRICULTURAL CO-OPERATIVE SOCIETY

*4167—**THIRU S. RAJAREDDY:**

Will the Hon. the Minister for Food, Public Distribution System and Co-operation be pleased to state—

Whether the Government will do the needful either for the functioning of the Vanaganapalli Agricultural Co-operative Society, Thally Constituency, Dharmapuri District that has been closed or to affiliate the same with the Balathottanapalli Society?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கலைக்கப்பட்ட வனகனப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் உள்ள அத்தனை கிராமங்களும் பாலதொட்டனப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைத்து மேற்படி கிராம மக்களுக்கு சேவை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**Thiru S. Rajareddy:** Honourable Speaker, Sir, What are the norms for bifurcation of a primary Agricultural Co-operative Society?

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வங்கியிலிருந்து மற்றொரு வங்கியைப் பிரிக்க வேண்டுமென்றால், அந்த வங்கிக்கு உட்பட்ட எல்லை அதிகமாக இருந்தால் அதைப் பிரிக்கலாம். அது ஒன்று. மற்றொன்று, கூடுதலாக வைப்புநிதி ஏற்பட்டு விவசாயிகளுக்கு இலாபம், அதிகமாக வந்தாலும் அதைப்பிரிக்கலாம். ஆனால், சம்பந்தப்பட்ட வங்கியில் நஷ்டம் வந்த காரணத்தால், அது மூடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் அதே இடத்தில் அந்த 'வங்கியைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால், புதியதாக உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கும்போது வையபிலாக இருக்குமா என்பதை அறிந்து, புதிய வங்கி தொடங்குவதற்கு இந்த அரசு அனுமதி அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, திரு. செ. இராமலிங்கம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

96—

## பயிற்சிக் காலத்தில் உதவித் தொகை அளிக்கும் திட்டம்

*7989—**திரு. செ. இராமலிங்கம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டம் படிக்கும் மாணவர்கள் படிப்பு முடிந்து ஒரு வருடம், 15 வருட அனுபவமுள்ள ஒரு வழக்கறிஞரிடம் பயிற்சி பெறும் காலத்திற்கு உதவித் தொகை அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இந்தக் கேள்வி எழவில்லை.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களே ஒரு மூத்த சிறந்த வழக்கறிஞர். ஒரு காலத்தில் மூத்த வழக்கறிஞர்களிடத்தில் இளநிலை வழக்கறிஞர்களாகப் பணியாற்றுவோருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையினை அந்த சீனியர் அட்வகேட்ஸ் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். தற்போது அந்த நிலையே கிடையாது. எனவே, பயிற்சியாளர்களாகப் பணிபுரிவோருக்கு ஒரு குறைந்தபட்சத் தொகையையாவது அரசின் மூலமாகக் கொடுக்க தமிழக அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி பெறுகின்ற எந்த வழக்கறிஞருக்கும் இதுவரை அரசின் சார்பில் உதவித் தொகை கொடுக்கப்படவில்லை.

[1998 மார்ச் 31

இனியும் கொடுக்கின்ற உத்தேசம் இல்லை. இது தொடர்பாக ஏற்கெனவே உச்சநீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. மாநில நீதிமன்றங்களிலேகூட, மாணவர்களெல்லாம் தங்களுக்குப் பயிற்சி வேண்டாம் என்றும், உதவித் தொகை வேண்டுமென்றும் சென்னை உயர்நீதிமன்றத்திலும், இன்னும் கேரளா, டெல்லி, பஞ்சாப், குஜராத் போன்ற மாநிலங்களிலுள்ள தலைமை நீதிமன்றங்களிலும் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். அதை எதிர்த்து Bar Council of India - ஒரு வழக்கைத் தொடர்ந்து, இந்த வழக்குகளையெல்லாம் விசாரிக்கக் கூடாது; இதிலே இறுதி முடிவு தெரிகின்ற வரை இந்த விசாரணையை நிறுத்த வேண்டும்; இந்த வழக்குகளையெல்லாம் உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். இதிலே தடையாணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை பற்றி இப்போது பேசுவது Sub-Judice -ஆக இருக்கும். இது. விசாரணையில் இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 97, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**97—**

### சுயவேலைவாய்ப்புக் கடன் முறையை எளிதாக்குதல்

*7033—**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பு தேடிக்கொள்ள வசதியாக சுய வேலைவாய்ப்புக் கடன் வழங்கும் முறையை எளிதாக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைஞர்கள் பாரதப் பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் சுயவேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள சுயவேலைவாய்ப்புக் கடன் வழங்கும் முறையை எளிதாக்க வங்கி மற்றும் பயனாளிகள் தேர்வுக் குழுவுடன் (Task Force Committee) கலந்து தேவையான நடவடிக்கையைத் தொழில் வணிக இயக்குநரகம் மேற்கொண்டு வருகிறது.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.எம்.ஆர்.ஒய். என்ற இந்த ஸ்கீமிலே, படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்கள் கடன்பெற மனு செய்கின்றபோது அவர்களுக்கு ஆயிரத்தெட்டுப் பிரச்சினைகள் உருவாகின்றன. அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் தேவை என்று சொன்னால், District Industrial Centre-லிருந்து பணத்தை ஒதுக்குகின்றபோது, அவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது அந்த மனுக்கள் சரிபார்க்கப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்படும்போது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அந்தப் பணத்தை அவர்களுக்குச் சரியாகக் கொடுப்பதில்லை. எனவே, மனு போடுகின்றவர்கள் நடந்து, நடந்து கால்கள் தேய்ந்து போகின்றனவே தவிர, அந்தத் திட்டம் சரியான முறையிலே நடைபெறவில்லை என்பதை அரசு அறியுமா? அந்தத் திட்டத்தைச் சரியான முறையிலே நடத்துவதற்கு இந்த அரசு என்ன மாற்றுத் திட்டம் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், பிரதமர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்திலே இருந்த பல்வேறு குறைபாடுகளைக் களைந்திருக்கிறோம். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் முன்னாலே எல்லாம் திட்ட மதிப்பீட்டை மாவட்டத் தொழில் மையத்திலே கடன் வாங்க வருகின்ற வேலை இல்லாத இளைஞர்கள் தயாரித்துக் கொடுக்க வேண்டும். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், திட்ட மதிப்பீட்டை மாவட்டத் தொழில் மையமே தயார் செய்கின்றது. அதேபோல, இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால், தொழில் மையத்திலே தங்களுடைய சான்றிதழ்களை ஒப்படைக்க வேண்டும், மனு செய்யும்பொழுதே. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், கடன் வாங்கும்போது, அவர்கள் சான்றிதழ்களை வங்கியிலே கொடுத்தால் மட்டும் போதும் என்று மாற்றியிருக்கிறது.

முற்பகல் 10-20

இதேபோல் Collateral Security கொடுக்க வேண்டுமென்று வங்கிகள் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததைக் கருத்தில் கொண்டு, 356 வட்டாரக் கூட்டங்களை நடத்தி, மாநில அளவில் 3 கூட்டங்கள் நடத்தி, ரிசர்வ் வங்கியிலே இருக்கக்கூடிய அதிகாரிகளை அழைத்துப் பேசி, எந்த வங்கியும் பிணையத் தொகை பெறக்கூடாது என்று இந்த அரசு கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கிறது. மேலும் No Objection Certificate

பெற வேண்டுமென்று முன்பிருந்த முறையில் இருந்தது. ஒரு வங்கியிலே இருந்து கடன் பெறவேண்டும் என்றால், அந்த வங்கியிலேயிருந்து அந்த வட்டாரத்திற்குள் இருக்கக்கூடிய இன்னொரு வங்கியிலே அவர்கள் தடையின்மைச் சான்றிதழ் வாங்க வேண்டும். ஒரு மாதத்திற்குள் அவர்கள் தடையின்மைச் சான்றிதழ் வாங்கவில்லை என்றால், அதனை வாங்கியதாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த அரசு மாற்றி, வங்கிகளுக்கு அறிவித்திருக்கிறது. அதனை வங்கியே பெற்றுக்கொள்ள வேண்டும். கடன்பெற வருகின்றவர்கள் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. இதைத் தவிர, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல கடன்பெற வருகின்றவர்கள் வங்கிக்கு அனுப்பிய மனுக்களைப் பெரும்பாலும் நிராகரித்து விடுகிறார்கள்; தள்ளுபடி செய்து விடுகிறார்கள் என்பது போன்ற அனைத்துப் புகார்களையும் ஏற்றுக் கொண்டு, இந்த அரசு, கடன் வாங்க விரும்புகிறவர்களின் மனுக்களை வங்கிக்கு அனுப்புவதற்கு முன்பே, அந்த மனுக்களில் ஏதாவது குறைபாடு இருக்குமானால், அதனை மாவட்டத் தொழில் மையமே நீக்கி, அனைத்து இளைஞர்களும் அதைப் பெறுவதற்கு, உரிய வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. மேலும் விளக்க வேண்டுமென்றால், நீண்டநேரம் தேவைப்படும். எனவே, சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்தியாவிலே, தமிழகம்தான், பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திலே, 1996-97-ஆம் ஆண்டிலே 80 சதவிகிதம் இதிலே achieve செய்து, நிறைவேற்றி, முதல் மாநிலமாகத் திகழ வைத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 98, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**98—**

### பீங்கான் தொழிற்சாலை அமைத்தல்

*8536—**திரு. அ. மாரிமுத்து :**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியிலுள்ள டி. பரங்கனி மற்றும் குமலம்பட்டு ஆகிய இடங்களில் கிடைக்கும் வெள்ளை மணலைக் கொண்டு, பீங்கான் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியிலுள்ள குமலம்பட்டு என்ற இடத்தில், பீங்கான் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும், தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. தனியார் எவரேனும் மேற்படி பீங்கான் தொழிற்சாலை அமைக்க முன்வந்தால், அவர்களுக்கு அத்தொழிற்சாலை அமைக்க இவ்வரசு அனைத்து ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கும். டி. பரங்கனி பகுதியில் வெள்ளைக் களிமண் கண்டறியப்படவில்லை. எனவே, இங்கு பீங்கான் தொழிற்சாலை அமைக்கும் வாய்ப்பு இல்லை.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதி. 1989-90-இல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதே கேள்விக்குப் பதில் அளிக்கையில், ஆவன செய்யப்படும்; பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, தயவுகூர்ந்து, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியாக என் தொகுதி இருப்பதாலும், வேலையில்லாத் திண்டாட்டம் அங்கே தலைவிரித்து ஆடுவதாலும், அரசாங்கத்திற்கு அதனால் பெருவாரியான வருவாய் வருகின்ற ஒரு நிலை இருப்பதாலும், மூலப் பொருள் அங்கே மிகுதியாக இருந்து; அங்கேயிருந்து மற்ற பகுதிகளுக்கு அவை ஏற்றுமதி செய்யப்பட்டு, கண்ணாடித் தொழிற்சாலை, பீங்கான் தொழிற்சாலை ஆகியவை நடைபெறுவதாலும், நாம் சுதந்திரம் பெற்று ஐம்பதாண்டு காலம் ஆகியும் ஒரு தொழிற்சாலைகூட எங்கள் பகுதியில் இல்லாத காரணத்தினாலும், கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்கி, அந்த மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க முன்வருவார்களா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, குமலம்பட்டுப் பகுதியிலே, ஏற்கெனவே, இரண்டு தனியார் நபர்களுக்கு, அங்கே பீங்கான் உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அவர்கள் அதனைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை இருக்கிறது. காரணம் என்னவென்றால், அங்கே குறைந்த அளவிலேதான் அதற்குத் தேவையான 'கயோலின்' என்ற ஒருவகைக் களிமண் அங்கே கிடைக்கின்றது மேற்பரப்பிலே 56 ஆயிரம் டன்தான் ஒரு ஏக்கர் நிலப்பரப்பிலே இருக்கும். எனவே, அங்கே போதுமானதாக மூலப்பொருள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்று அறிந்துதான்,

தனியார்கள் அதைக் கைவிட்டு, அந்தத் தொழிற்சாலை இன்று மூடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**99—**

**பெண்கள் விடுதிக்குப் புதிய கட்டடம்**

*4255—**திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலுள்ள ஆதிதிராவிடர் பெண்கள் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திருத்துறைப்பூண்டியிலுள்ள ஆதிதிராவிடர் பெண்களுக்கான புதிய விடுதிக் கட்டடம் கட்ட, அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 100, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**100—**

**ஆரம்பப் பள்ளி துவக்குதல்**

*5156—**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல், எரியோடு பேரூராட்சி மீனாட்சிபுரத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஆரம்பப் பள்ளி துவக்க, அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில் எரியோடு பேரூராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலமாக ஆரம்பப் பள்ளி துவக்கப்படுமா, அதற்கு அமைச்சர் அவர்கள் உதவ முன்வருவார்களா? அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கல்வித் துறை மூலமாகத்தான் ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. அப்படி தொடங்கப்படுகிற நேரத்திலே 18% ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற பகுதியிலே தொடங்கவேண்டும் என்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. மேலும் கடந்த ஆண்டுகூட 168 பள்ளிகள் கல்வித் துறை மூலமாக தொடங்கப்பட்ட நேரத்தில் 14 பள்ளிகள் ஆதிதிராவிட குடியிருப்புகளில் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே 1998-99-ஆம் ஆண்டில் அந்தப் பகுதிக்கு அவசியம் பள்ளிக்கூடம் தேவையென்றால் அந்தச் சட்டமன்ற உறுப்பினர் மூலமாக கருத்துரு பெறப்பட்டு, தகுந்த முறையில் ஆலோசிக்கப்பட்டு, அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) கைத்தறி நெசவாளர்கள் திருப்பூர் நகரில் 23-3-1998 அன்று நடத்திய போராட்டத்தின்போது காவல் துறை தடியடி மேற்கொண்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திருப்பூர் நகரத்தில் நடைபெற்ற கைத்தறி நெசவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டோர்மீது காவல் துறையினர் தடியடி நடத்தியது மற்றும் வழக்குகள் பதிவு செய்தது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. மோகன் கந்தசாமி, திரு. ச. அழகிரி, திரு. கே. சுப்பராயன், திரு. ப. ரங்கநாதன், திரு. பா. அருண்குமார், டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியவர்களும், கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும், ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன் ஆகியவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. ச. அழகிரி அவர்களை முதலிலே பேச அழைக்கின்றேன். மிகச் சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23-ஆம் தேதி கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் குறிப்பாக உடுமலை, பழனி, காங்கேயம், மதுரை, ஈரோடு, புவனகிரி, குறிஞ்சிப்பாடி, ஸ்ரீமுஷ்ணம், திருப்பூர் மற்றும் பல இடங்களில் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். போராட்டங்கள் நடத்தியதற்குக் காரணம் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் பல இலட்சம் ரூபாய்க்கான கைத்தறித் துணிகள் தேங்கியிருப்பதுதான். இந்தப் பிரச்சினைக்குக் காரணம் இந்தியா முழுவதும் ஜவுளித் துறையில் ஏற்பட்டுள்ள ஒரு தேக்கமும், குறிப்பாக தமிழகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கான தள்ளுபடி அதாவது ரிபேட் தொகையை வழங்காததும்தான் காரணம் என்று நெசவாளர் சங்கங்கள் கூறிவருகின்றன. மூன்றாவதாக கைத்தறிக்கு ஒதுக்கிய துணியை விசைத்தறி நெசவாளர்கள் நெய்வதும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. எனவே, இவைகளை அரசாங்கம் உணர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கான அதாவது 1994-95, 1995-96-ஆம் ஆண்டு வழங்கப்படாத தள்ளுபடித் தொகையை உடனடியாக சங்கங்களுக்கு வழங்கினால் நெசவாளர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படும் என்று நெசவாளர்கள் சங்கங்கள் கூறுகின்றன.

அந்த இரண்டு ஆண்டுகளுக்கான தள்ளுபடித் தொகையைத் தராததற்குக் காரணம் சென்ற ஆட்சியிலே பல கூட்டுறவுச் சங்கங்களில் பல முறைகேடுகள் நடந்தன. எனவே, அதனால்தான்





கொடுக்கப்படவில்லை எனத் துறை தெரிவிக்கிறது. முறைகேடு நடந்தது உண்மைதான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. தவறு செய்தவர்கள் தப்பித்து விட்டார்கள். ஆனால், தற்போது நெசவாளர்கள் தண்டிக்கப்படுவதுதான் வேதனையாக இருக்கிறது. பழி ஒரு பக்கம், பாவம் ஒரு பக்கம் என்று சொல்வார்கள். எனவே, இன்றைக்கு நெசவாளர்கள் பாவப்பட்ட ஜென்மமாக இருக்கிறார்கள். எனவே அரசு இதை உணர்ந்து உடனடியாக இரண்டு ஆண்டுகளுக்கான பாக்கித் தொகையைத் தரவேண்டும். தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், இதுதான் கைத்தறி நெசவாளர்களின் கோரிக்கை. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரைவில் உரையை முடிக்க வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை அமைச்சர் தன்னுடைய துறையை நன்றாக ஆராய்ந்து வைத்திருக்கிறார். ஆனாலும்கூட அந்த இரண்டு ஆண்டுகளுக்கான தள்ளுபடித் தொகை ரூ. 33 கோடி என்று கருதுகிறேன். அதை நெசவாளர்களுக்கு தந்துவிட்டால், நெசவாளர்கள் சங்கங்களுக்கு கொடுத்துவிட்டால், தேங்கிக் கிடக்கின்ற பல கோடிக்கணக்கான ரூபாய்களுக்கான துணிகள் உடனடியாக விற்பனைக்கு வரும். எனவே, அரசாங்கம் அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். திருப்பூரைப் பொறுத்தவரை 23-ஆம் தேதி 2 இலட்சம் தொழிலாளர்கள் தங்களுடைய பேரணியைத் துவக்கியிருக்கிறார்கள். பேரணி ஆரம்பத்திலே அமைதியாக நடந்திருக்கிறது. ஆனால் இடையிலே பல சமூக விரோத சக்திகளும், பாதிக்கப்பட்ட நெசவாளர்களும் உணர்ச்சி மிகுதியின் காரணமாக ஓரளவிற்கு வன்முறையில் இறங்கியிருக்கிறார்கள். வன்முறை இல்லை என்று சொல்லமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சுருக்கமாகப் பேச வேண்டும் என்று நான் சொன்னால், தலையை அசைத்துவிட்டு, எழுதி வந்ததைப் பூராவும் படித்துக் கொண்டேயிருந்தால் எப்படி? இன்னும் உங்கள் பின்னாலே 6 பேர் பேச வேண்டும். தயவு செய்து சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக போராட்டம் நடத்துகிறவர்கள் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுதான் இருப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களுக்கே தெரியும், அவர் தலைமை ஏற்று போராட்டங்களை நடத்தி இருக்கிறார். போராட்டம் நடத்துகிறபோது உணர்ச்சிவசப்படுவது என்பது எளிது. எனவே உணர்ச்சிவசப்பட்ட கைத்தறி நெசவாளர்கள்மீது அரசாங்கம் எடுத்திருக்கிற கடுமையான நடவடிக்கையைத் தவிர்த்து, சிறையிலே வைத்திருக்கிற கைத்தறி நெசவாளர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். அவர்களுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

*** திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை சார்ந்த நெருக்கடிகள் குறித்து ஆராய்வதற்கு ஒரு கமிட்டி போடப்பட்டிருக்கின்ற காரணத்தால் நான் அந்த விவரங்களுக்குள்ளே இப்போது போக விரும்பவில்லை. அது பொருத்தமாக இருக்காது.

நான் ஒரே ஒரு விஷயத்தைத்தான் இந்த நிகழ்வின் மூலம் தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன் வைக்க விரும்புகிறேன். இந்த விஷயத்தை கொஞ்சம் நிதானமாக அணுகவேண்டும் என்று நான் கருதுகின்றேன். ஏனென்றால் நெசவாளர்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்களில் ஏறத்தாழ 4, 5 ஆயிரம் பேர் ஊர்வலமாகப் போய் இருக்கிறார்கள்; போய் பொதுக்கூட்டம் நடத்த முயற்சித்திருக்கிறார்கள். அதில் மாநில அரசுக்கு நெசவாளர்கள் மத்தியில் ஒரு கெட்ட பெயரை உருவாக்க வேண்டும் என்கிற உள்நோக்கத்தோடு கூடிய ஒரு சில விஷமிகள் ஊடுருவி இருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தங்களுடைய குறைகளை வெளிபடுத்துவதற்குரிய ஜனநாயக வடிவம் என்கிற முறையிலே அந்த ஊர்வலத்தை நெசவாளர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். நெசவாளர்களுக்கும் மாநில அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு மோதலைத் தோற்றுவிக்க வேண்டும் என்கிற வஞ்சகமான உள்நோக்கத்தோடு கூடிய ஒரு சில தீய சக்திகள் ஊடுருவி மாநில அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்துவதற்காக அந்த வழக்கைப் பதிய வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.



நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஏறத்தாழ 10 நாட்களாகத்தான் அவர்கள் சிறையில் இருக்கிறார்கள். அவர்கள் மூலந்துறை மற்றும் மேட்டுப்பாளையத்தின் ஒரு சில பகுதிகளிலிருந்து வந்தவர்கள். அந்தப் பகுதிகளில் இப்பொழுது நெசவுத் தொழிலை நிறுத்திவிட்டு, எப்போது தங்கள் பிள்ளை வீடு திரும்பும் என்று அவர்கள் வேதனையோடு காத்திருக்கிறார்கள். ஒரு பெரிய விஷயம் அங்கே நடந்துவிடவில்லை. ஆகவே இந்த நிகழ்வில் நான் மன்றாடிக் கேட்டுக்கொள்ள விரும்புவது, அந்த வழக்கை வாபஸ் பெற்று அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்று, மாநில முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று ஆவலோடுதான் அவர்கள் காலையிலேயிருந்து பல போன்கால்கள் மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே அத்தகைய அறிவிப்பை அறிவிக்க வேண்டும் என்று வேண்டி கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. அருண்குமார்.

**திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23-ஆம் தேதி திருப்பூரிலே நடைபெற்ற கைத்தறி நெசவாளர்களுடைய பேரணியிலே நடந்தச் சம்பவங்களைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். இது முற்றிலுமாக கழக அரசுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்தச் சம்பவமே நடைபெற்றிருக்கிறது. ஆகவே நடந்த சம்பவம் விரும்பத்தகாத சம்பவமாக இருந்தாலும், இதிலே கைதாகியிருக்கக்கூடிய நெசவாளர் பெருங்குடி மக்கள் 51 பேர்களிலே 48 பேர்கள் என் தொகுதியைச் சார்ந்த மக்கள். ஆகவே இப்போது அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நெசவாளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபடாமல் இன்றைக்கு சங்கடத்தில் இருக்கிறார்கள். பொதுவாக நெசவாளப் பெருமக்கள் இம்மாதிரி சம்பவங்களில் ஈடுபட மாட்டார்கள். ஆகவே அவர்களை விடுவித்து வழக்குகளை வாபஸ் பெற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் கோவை, ஈரோடு, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சங்க சார்பில் 9 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து அமைதியான முறையில் ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். இந்த ஊர்வலத்தில் சில

விஷமிகள் ஊடுருவி கலாட்டாவை உருவாக்கி காலித்தனம் செய்திருக்கிறார்கள். ஆனால் காவல்துறை அதிகாரிகள் அந்த விஷமிகளைப் பிடிக்காமல் அமைதியாகச் சென்ற ஊர்வலத்தின்மீது ஒரு கண்ணீர்ப் புகையைக்கூட வீசாமல், தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள். தடியடிப் பிரயோகம் நடத்தியதற்காக அந்தப் பகுதியில் உள்ள காவல்துறை அதிகாரி டி.எஸ்.பி. என்ன செய்திருக்கிறார் என்று சொன்னால்-தடியடிப் பிரயோகம் நடத்தியதற்காக 5 போலீஸ்காரர்களுக்கு காயம் ஏற்பட்டுவிட்டதாம். எப்படி காயம் வரும்? காயத்தை இவர்களே உண்டுபண்ணிக்கொண்டு ஆஸ்பத்திரியில் போய் படுத்துக்கொள்வது. எல்லா இடங்களிலும் இப்படித்தான் செய்கிறார்கள்; படுத்துக் கொண்ட அவர்களுக்கு - ஆயிரம், ஆயிரம் ரூபாய் டி.எஸ்.பி.யும், எஸ்.பி.-யும் கொடுத்திருக்கிறார்கள். இது என்ன நியாயம்? அதுமட்டுமல்லாமல் 51 பேர்களை கைது பண்ணியிருக்கிறார்கள். இந்த 51 பேர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை அரசு வாபஸ் வாங்க வேண்டும். அநாகரிகமாக நடந்து கொண்ட காவல்துறை அதிகாரிகள்மீது அரசு நடவடிக்கை எடுத்து சஸ்பெண்ட் பண்ணினால்தான் அவர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கும். அந்த ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்களே அதைத் திரும்ப வாங்க வேண்டும். அவர்கள் எல்லாம் போலியாக ஆஸ்பத்திரியில் போய் படுத்துக்கொண்டார்கள். இதையெல்லாம் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த நேரத்தில் கூறிக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

*முற்பகல் 10-35*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன்' என்று பழமொழி உண்டு. அதற்கேற்ப அரை மனிதனை முழு மனிதனாக ஆக்கிய தொழில் கைத்தறி நெசவுத் தொழில். அப்படிப்பட்ட பண்டைய தொழில் இப்போது பெரிய பாதிப்புக்கு உள்ளாகி, இலட்சக்கணக்கான மக்கள் பட்டினி கிடக்கக்கூடிய நிலையில், அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சில மாதங்களாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அதனுடைய ஒரு பகுதியாக கடந்த 23-ஆம் தேதி அன்று திருப்பூரிலே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் ஊர்வலமாகச் சென்றார்கள். தமிழக அரசு உடனடியாக ஐந்தாயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டுமென்றும், கைத்தறிக்கு ஒதுக்கப்படுகின்ற இரகங்கள் விசைத்தறிக்கு





ஒதுக்கப்படக்கூடாது என்றும், 1985-ஆம் ஆண்டு மத்திய அரசு போட்ட சட்டத்தை அமலாக்க வேண்டுமென்றும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அந்த அமைதியான ஊர்வலத்தின்போது, பேரணியின்போது, தேவை இல்லாமல் தடியடியும், பலப்பிரயோகமும் செய்யப்பட்டிருக்கிறது. ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அரசு அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கவும், கைது செய்யப்பட்டவர்களை உடனடியாக விடுதலை செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

• **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. அழகிரி அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. அருண்குமார் அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு. தாமரைக்கனி அவர்களும் கலந்துகொண்டு, தங்களுடைய கருத்துக்களையும், அரசு உடனடியாகச் செய்யவேண்டிய நிலை பற்றிய கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள்.

கைத்தறியாளர்களுடைய துன்ப துயரங்களைப் பற்றி, ஆளுநர் உரையின் மீது நடைபெற்ற பொது விவாதத்தில், இந்த மாமன்றத்திலே, உறுப்பினர்கள் பலரும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள்.

*18-3-1998* அன்று ஆளுநர் அவர்கள், இந்த அரசின் சார்பில் ஆற்றிய உரையிலேயே கைத்தறியாளர்களுடைய கஷ்டங்களைத் தீர்ப்பதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு, அந்தக் குழுவினருடைய பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. கைத்தறியாளர்களுடைய நிலையை அறிந்து அவர்களுக்குத் துணை புரியவேண்டும், உதவி செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு 18-ஆம் தேதி இப்படிப்பட்ட ஒரு குழு அமைக்கப்பட்ட பிறகும்கூட, அதை மேலும் வலியுறுத்துகின்ற நல்ல எண்ணத்தோடோ அல்லது வேறு காரணத்தாலோ, எனக்குத் தெரியாது, திருப்பூரிலே கோவை மாவட்டத்தின் பல பகுதிகளிலே இருக்கும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நெசவாளர்கள் கலந்துகொண்ட ஊர்வலம் ஒன்று நகரின் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு, தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்திய அத்தகைய முழக்கங்களோடு சென்றது.

பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்தாயிரம் ரூபாய் வீதம் தமிழக அரசு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கை உள்ளிட்ட 9 அம்சக் கோரிக்கைகளை அவர்கள் வெளியிட்டு, அந்த அடிப்படையிலே ஊர்வலத்தை நடத்தினார்கள். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்தாயிரம் ரூபாய் வழங்கக்கூடிய அளவுக்கு அரசின் நிதி ஆதாரம் இடம் தருகிறதா என்பது வேறு விஷயம். இருந்தாலும்கூட ஊர்வலத்தினர் அந்த கோஷத்தை முன்வைத்து நடத்தினார்கள். அதிலே பங்குகொண்டவர்களில் நான்கில் மூன்று பகுதியினர் இரவு 7½ மணிக்குக் கூட்டம் நடைபெறும் இடத்தை அடைந்தார்கள். ஊர்வலத்தினுடைய பிற்பகுதியில் கலந்துகொண்டவர்களில் சிலர் அரசுக்கு எதிர்ப்பான முழக்கங்களை எழுப்பியதோடு, மோட்டார் சைக்கிள்களிலும், ஸ்கூட்டர்களிலும் வந்தவர்கள் மீதும், காவல் துறையினர் மீதும் கல் வீசித் தாக்கியிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-40*

நம்முடைய திரு. அழகிரி அவர்கள் பேசும்போது குறைந்தளவு வன்முறை நடைபெற்றது என்பதை ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும்போது அங்கே காலித்தனம் நடைபெற்றது என்று அந்தச் சொல்லையே பயன்படுத்தி அந்த நிகழ்ச்சியை வருணித்திருக்கின்றார்கள். அசம்பாவிதம் நடைபெற்றது உண்மை என்பதை திரு. சுப்பராயன் அவர்களும் மற்றும் இங்கே பேசிய உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். எனவேதான், அந்தச் சம்பவத்தில் காவல் துறையினர் தலையிட்டு அமைதிப்படுத்த முற்பட்டபோது 5 காவலர்கள் காயம் அடைந்திருக்கின்றார்கள். அவர்கள் ஏதோ தங்கள் உடலிலே ஒரு காயத்தை ஏற்படுத்திக்கொண்டு சிகிச்சை பெற்றார்கள் என்று திரு. தாமரைக்கனி இங்கே குறிப்பிட்டார். அப்படிப்பட்ட நாடகங்கள் அரசியலிலே நடைபெறுவது உண்டு. நான் மறுக்கவில்லை. காயம்படாதவர்கள் காயம்பட்டதைப்போலக் காட்டிக்கொள்கின்ற காரியங்கள் எல்லாம் அரசியலிலே நடைபெறுவது உண்டு. நாம் ஒரு சம்பவத்திலே அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்று பணியாற்றுகின்ற காவலர்கள் காயம் அடைந்ததைக் கேலிக்குரிய ஒன்றாக ஆக்கிவிடக் கூடாது. ஏனென்றால் காவலர்களையே தொடர்ந்து நாம் தூற்றிக் கொண்டிருப்பது, கேலி செய்து கொண்டிருப்பது என்று வந்துவிடுமேயானால் அவர்களும் மனிதர்கள்தான் என்பதை அவர்கள் உணரவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படும்.



காவலர்கள் என்பது தனி ஜாதி அல்ல. அவர்களும் இந்த அரசில் பணியாற்றுகின்ற அரசுப் பணியாளர்களைப் போன்று அரசு ஊழியர்கள்தான். அரசு ஊழியர்கள் என்றால் மக்களுடைய ஊழியர்கள்தான். அவர்களை கேலி செய்வது நம்மையே நாம் கேலி செய்து கொள்வதுபோல என்பதையும் மறந்துவிடக் கூடாது. எல்லாக் காவலர்களும் அல்ல, ஒரு சில காவலர்கள் தவறு செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். நான் இல்லை என்று மறுக்கவில்லை. இந்த அவையிலேயே நான் அதைப் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன்.

எனவே, 7-30 மணிக்குத் தொடங்கி 9-00 மணிக்கு அந்தப் பொதுக்கூட்டம் முடிவுற்று இருக்கின்றது. இதற்கிடையிலேதான் ஊர்வலத்திலே வந்தவர்கள் கலவரத்திலே ஈடுபட்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கூட்டத்தில் நெசவாளர் சங்கத்தினுடைய மாநிலத் தலைவர் திரு. சுந்தரமூர்த்தி, திரு. சிவசாமி, திரு. பழனிச்சாமி, திரு. நடராஜன், திரு. கோவிந்தசாமி ஆகியோர் உரையாற்றுகின்றபோது அந்த ஊர்வலத்திலே வந்த ஒரு பகுதியினர் ஏற்படுத்திய கலவரத்திற்கும் குழப்பத்திற்கும் வருத்தம் தெரிவித்தே பேசியிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது அவர்களே அந்தச் சம்பவத்தை ஏற்றுக்கொள்ளவில்லை; அவர்களையும் மீறிய ஒரு சம்பவமாக நடைபெற்றிருக்கின்றது என்பது மிக மிகத் தெளிவாக நம்மால் உணரக்கூடிய ஒன்றாகும்.

இந்தச் சம்பவத்திலே 51 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் குற்ற எண் 281/98, இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 147, 332, 353, 437 ஆகியவற்றின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட 51 நபர்களில் 48 பேர் தள்ளாடிய நிலையிலே இருந்ததாக எனக்குத் தரப்பட்டுள்ள அறிக்கை குறிப்பிடுகிறது. நான் அதை அப்பட்டமாகச் சொல்ல விரும்பவில்லை.

இந்தப் பிரச்சினைக் குறித்துச் செய்திகள் வெளிவந்தவுடன் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு நிலைமைகளை அறிந்து கொண்டோம். அப்போது இதுகுறித்த வழக்கு நேற்றையதினம் வந்தபோது ஜாமீன் மறுக்கப்பட்டு விட்டதாகவும், எனினும் இன்றையதினம் மீண்டும் வழக்கு நீதிமன்றத்திலே வர இருப்பதாகவும் தெரிவித்தார்கள். அப்படி வருகின்ற நேரத்திலே அவர்ளுக்கு ஜாமீன் வழங்கப்படக் கூடாது என்று அரசின் சார்பில் தெரிவிக்காமல் அவர்கள் விடுதலைப் பெற ஏற்பாடு செய்வதாகவும் மாவட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். ஒரு வேளை அப்படி அவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் — மாண்புமிகு

உறுப்பினர்கள், இங்கே நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் 'மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார், அப்படிப்பட்ட வார்த்தைகள் எல்லாம் என்னைப் பொறுத்தவரையிலே தேவையில்லை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும், ஒருவேளை இந்த மன்றத்திலே சொல்கிற காரணத்தால் அவர் மன்றாடிச் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியவில்லை, இருந்தாலும் — அனுதாபத்தோடு இந்தப் பிரச்சினை கவனிக்கப்படும் என்பதையும், கைத்தறியாளர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு உங்கள் அத்தனை பேருடைய ஒத்துழைப்போடு எல்லா வகையான நடவடிக்கைகளையும் இந்த அரசு குழுவினுடைய கருத்தைப் பெற்ற பிறகு எடுக்கும் என்பதையும் தெரிவித்து அமைகின்றேன்.

## (ஆ) பேராசிரியர் பரமசிவம் 28-3-1998 அன்று மதுரையில் கொலை செய்யப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மதுரையில் பேராசிரியர் பரமசிவம் கொலை செய்யப்பட்டது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன், திரு. தீரன், திரு. ஜி.கே. மணி, ஆகியோரும், கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள திரு. சந்தானம், திரு. தாமரைக்கனி ஆகியோரும் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள திரு. ரங்கநாதன், திரு. ஞானசேகரன், திரு. தெய்வநாயகம் ஆகியோரும் அறிவிப்புக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. தெய்வநாயகம் அவர்களை முதலிலே பேசுமாறு அழைக்கின்றேன்.

*முற்பகல் 10-45*

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-3-1998 ஆம் தேதியன்று இரவு 8.00 மணி அளவில், மதுரை மாநகரத்தில் செனாய் நகர் பகுதியில் வாழ்ந்து கொண்டிருந்த மதுரை கல்லூரி பேராசிரியர் திரு. பரமசிவம் அவர்கள் சமூக விரோதிகள் சிலரால் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தக் கொலை என்ன காரணத்தினால் நடந்தது, ஏன் நடந்தது என்பதை எல்லாம் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்பதற்காக இந்த அறிவிப்பினை நாங்கள் கொடுத்திருக்கின்றோம்.

என்னைப் பொறுத்தவரையில், அவர் இந்து முன்னணியைச் சேர்ந்தவர். மதுரையிலுள்ள மதுரைக் கல்லூரியிலே பணியாற்றிய வணிகவியல் பேராசிரியர்; நல்ல பயிற்சி மிக்க பேராசிரியர். யாருக்கும், எந்தத் தீங்கும் செய்யாத ஒருவர் என்பதை அறிந்தவன். அவருக்கு



இப்படிப்பட்ட கதி நேர்ந்திருக்கிறது என்றால், அந்தக் கொலைக்குப் பின்னணியில் யார் இருக்கின்றார்கள்? அந்தக் கொலையைச் செய்தவர்கள் யார்? எதற்காகச் செய்தார்கள்? நல்லவருக்கு இந்த மாதிரி இடர்ப்பாடு வந்ததே என்பதைத்தான் அங்குள்ள மக்கள் எல்லோரும் பேசிக் கொள்கின்றார்கள்.

இந்தத் தருணத்திலே, காவல் துறை, கிட்டத்தட்ட 50 பேர்களை விசாரணை செய்து, இன்று அவர்களிலே 4, 5 பேர்களை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றவர்களை விடுதலை செய்திருக்கிறது. இதிலே உள்ள உண்மை நிலவரம் என்ன என்பதை விளக்க வேண்டும். எங்களுக்கெல்லாம் ஒரு சந்தேகம். நமது தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில், இப்படி மதுரையிலே ஒரு கொடூரமான நிகழ்ச்சி நடைபெற்று, இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதே என்றுதான் கவலையாக இருக்கிறது. அந்தப் பேராசிரியர் நமது சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியிலே வாழ்ந்து கொண்டிருந்தவர். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். அப்படிப்பட்ட நல்ல மனிதர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். இந்தக் கொடூரச் செயலை யார் செய்தார்கள்; என்ன காரணத்திற்காகச் செய்தார்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரியவில்லை. அதைத் தெரியப்படுத்துவது இந்த நாட்டு மக்களுக்கு இந்த அரசு செய்யக்கூடிய ஒரு நல்ல செய்கையாக இருக்கும்.

இன்றைக்கு மதுரை மாநகரத்திலே இஸ்லாமிய சமுதாயம்தான் இதைச் செய்தது என்று ஒரு சாரார் சொல்கின்றார்கள். இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அப்பாவி மக்கள். அவர்கள் இதிலே ஈடுபடவில்லை என்று அந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஊர்வலம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். இப்படி ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை மதுரையிலே இருந்து கொண்டிருக்கிறது. அதை அமைதிப்படுத்துவதற்கு அமைதிக் குழு ஒன்றை ஏற்படுத்தி, டாக்டர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கொலைக்குச் சம்பந்தப்பட்டவர்களைக் கடுமையாக, தயவு தாட்சண்யமின்றித் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பேராசிரியரை இழந்து தவிக்கும் அந்தக் குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் ஐந்து இலட்சம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இச்சம்பவம் பற்றி விசாரிக்க நீதி விசாரணை வைத்தால்கூட நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், மதுரை மாநகரம் ஓர் அமைதிப் பூங்காவாக ஆக

வேண்டும். அதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த அவையை ஒத்திவைத்து இச்சம்பவம் பற்றி விவாதித்தால்கூட நன்றாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்து, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *28-3-1998* சனிக்கிழமையன்று இரவு, மதுரைக் கல்லூரிப் பேராசிரியர் திருஆர்.கே. பரமசிவம் அவர்கள் கொடூரமான முறையிலே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவரை, சுமார் 6 பேர்கள் கொண்ட கும்பல் ஒன்று அரிவாளால் வெட்டி வீழ்த்தியிருக்கிறார்கள். அதுவும், குறிப்பாக, பாரதப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் பதவி ஏற்கக்கூடிய அந்த நாளிலே, இந்தச் சம்பவம் நடந்தது மிகவும் துரதிருஷ்டவசமானது. அதுவும், தமிழ்நாட்டிலே நடந்திருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு செய்தி என்பதைச் சொல்லிக் கொள்வதோடு, நம்முடைய காவல் துறையானது இந்தச் சம்பவம் நடைபெற்று 2 1/2 மணி நேரம் வரை அந்த இடத்திற்குச் செல்லவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதையெல்லாம் தீர ஆராய்ந்து, ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே பேராசிரியர் பரமசிவம் அவர்களைக் கொலை செய்திருக்கிறார்கள். இதனால் பாதிக்கப்பட்டவர்களும் மறியல், ஊர்வலம் நடத்துகிறார்கள். சந்தேகப்படுகிற அளவில், போலீஸ் 60 பேரைப் பிடிக்கிறார்கள். அவர்களைப் பிடிக்கக் கூடாது, தீவிரவாதிகளைப் பிடிக்கக் கூடாது என்று சொல்லி, அதற்கும் மறியல் பண்ணுகிறார்கள். கைது செய்யப்பட்டவர்களை விடச் சொல்கிறார்கள். உடனே அவர்களை விட்டுவிடுகிறார்கள். தீவிரவாதிகளை, தப்புச் செய்கிறவர்களை எந்த ஜாதியாக இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் கண்டிக்கக்கூடிய மனப் பக்குவம் இருக்க வேண்டும். ஆனால், அவர்களுக்கு ஆதரவாக மறியல் செய்தவுடன், போலீஸ் இலாக்கா கைது செய்யப்பட்டவர்களை வெளியிலே விடுவது என்பது இன்னும் தீவிரவாதிகளை ஊக்குவிப்பதாகத்தான் இருக்கிறது



என்று சொல்ல விரும்புகிறேன்.

1996-ல் நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். ஆட்சிக்கு வந்ததிலிருந்து இந்து முன்னணித் தலைவர்கள் 6 பேர் மதுரை, திண்டுக்கல் போன்ற பகுதிகளில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மதுரை, திண்டுக்கல் போன்ற நகரங்கள் கொலை நகரமாக மாறியிருக்கிறது. இதற்கு முதலமைச்சர் அவர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தீவிரவாதிகள் எங்கே இருக்கிறார்கள்? கொலையை செய்துவிட்டு, உத்தமபாளையம், இராமநாதபுரம், கேரளா மற்றும் பாண்டிச்சேரி போன்ற இடங்களுக்கு ஓடிப்போய்விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். கொலை செய்த குற்றவாளிகளைப் பிடிக்க ஏதாவது தனிப் படை அமைத்திருக்கிறீர்களா? அப்படித் தனிப் படை அமைத்தாலும் என்ன செய்ய முடியும். பிடிப்பவர்களைப் பூராவும் விட்டுவிடுகிறார்கள். சில பேரைப் பிடிக்கிறார்கள், பிடித்தவுடனே விட்டுவிடுகிறார்கள். சம்பந்தப்பட்டவர்களிடமே போய், உங்கள் சமுதாயத்திலே ஒரு ஐந்து பேர் கொடுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் சம்பந்தம் இல்லாதவர்களைக் கொடுக்கிறார்கள். அவர்கள் மீது கேஸ் போட்டு, பிரச்சினை முடித்தாகிவிட்டது என்று சொல்கிறார்கள். தப்பு பண்ணுகிறவர்கள் பூராவும் வெளி மாநிலத்தில் இருக்கிறார்கள், வெளி மாநிலத்திற்கு தப்பிப் போய் விடுகிறார்கள். உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவறு செய்துவிட்டு கேரளாவுக்கு சென்று விடுகிறார்கள், பாண்டிச்சேரிக்குச் சென்று விடுகிறார்கள். பாண்டிச்சேரியில் உங்கள் கட்சியும், தோழமைக் கட்சியும்தான் ஆட்சி செய்கிறது. தீவிரவாதிகளுக்கு பாண்டிச்சேரியில் பயிற்சி கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, அங்கெல்லாம் ஒளிந்துகொள்வதற்கு, ஊக்குவிப்பதற்கு இடமளிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் நீக்குவதற்கு ஏற்பாடு பண்ண வேண்டும். பரமசிவம் கொலை சம்பந்தமாக சி.பி.ஐ. நீதி விசாரணை நடத்த வேண்டும். தேச விரோத சக்திகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். வெளி மாநில நீதிபதிகளை வைத்து விசாரணை செய்ய வேண்டும்.

முஸ்லிம் தீவிரவாதிதான் இந்தக் கொலையைச் செய்தார் என்று போலீஸ் கமிஷனர் சொல்கிறார். எனவே தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு, உங்கள் ஆட்சியில் நடவடிக்கை எடுக்கவேண்டும். தமிழ்நாட்டில் எந்த உயிர்க்கும் பாதுகாப்பு இல்லை. சட்டசபையில் நான் பேசுகிறேன், பேசுகிற எனக்கே பாதுகாப்பு இல்லாத நிலைதான் இருக்கிறது,

ஏனென்றால் எனக்கே போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. இங்கே உள்ள சில எம்.எல்.ஏ-க்களுக்கும் போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டிருக்கிறது. அந்த இழிநிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 28-3-1998-ஆம் நாள் மதுரை கல்லூரியில் வணிகவியல் துறை பேராசிரியராகப் பணிபுரிந்த பரமசிவம் அவர்கள், அவருடைய வீட்டிற்கு அருகிலே சில கொடூர எண்ணம் கொண்டவர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மதுரையைப் பொறுத்த அளவிலே இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் மிகக் குறைவாக நடைபெறுகின்ற ஒரு அமைதியான இடம். அந்த இடத்திலே கடந்த காலத்தில் இதுபோன்று, ராஜகோபாலன் என்பவர் கொலை செய்யப்பட்ட நிலையிலே, அதற்குரிய நடவடிக்கை எடுத்து, இன்னும்கூட அந்தக் குற்றவாளிகளைக் கண்டுகொள்ளவில்லை என்கிற நிலை தொடர்கின்ற காரணத்தால்தான் இந்தக் கொலையும் நடந்திருக்கிறது. அதுவும் பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். இந்தப் பகுதி ஷெனாய் நகர், கக்கன் தெரு, மதிச்சியம் காவல் நிலையத்திற்கு மிக அருகில் உள்ளது. அவருடைய வீட்டிற்கும், காவல் நிலையத்திற்கும் மிகக் குறைவான இடைவெளி தூரம்தான் இருக்கிறது என்ற நிலை இருக்கும்போது, அந்தக் கொலை நடந்து 2½ மணி நேரம் கழித்துத்தான் காவல் துறை அங்கு சென்றது என்பது வியப்பான ஒன்றாக இருக்கிறது. எனவே, நமது தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பில் இருக்கிற காவல்துறை-தமிழகக் காவல்துறை என்பது குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும், இதுபோன்ற கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதிலும் மிகவும் தலைசிறந்த காவல் துறை என்று பெயர் பெற்று இருந்த காவல் துறை; அந்தக் காவல் துறைக்கு களங்கம் ஏற்பட்டுவிடாது, இந்தக் கொடிய செயலை யார் செய்தார்கள் என்பதை உடனடியாகக் கண்டு ஆராய்வதற்கு காவல் துறை நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்; இந்தச் சம்பவம் நடந்து 2,3 நாட்களாகியும்கூட யார் இதைச் செய்தார்கள் என்கிற தடயம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்கின்ற நிலைதான் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதில் மிகுந்த கவனத்தைச் செலுத்தி, உரியவர்களைக் கண்டறிந்து தகுந்த முறையிலே அவர்களுக்குத்



தண்டனை வழங்க வேண்டும் என்று என்னுடைய பார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலே வேண்டிக் கேட்டு விடைபெறுகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பொருள்பற்றி அறிவிப்புக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் பட்டியலின் பெயர்களைப் படித்தேன்; அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு பெயர் இல்லை. ஆனாலும் அலுவலகத்திலே கொடுத்து இருப்பதாகச் சொல்கின்றார்கள். அவர் நீண்டநாள் சட்டமன்ற உறுப்பினர். பேரவைத் தலைவர் அவர்களிடமோ அல்லது பேரவைச் செயலாளரிடமோ அன்று காலை எட்டே முக்கால் மணிக்கு முன்னால் கொடுக்க வேண்டும் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இது ஒரு முன்மாதிரியாக இனிமேல் இருக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு, திரு. திருநாவுக்கரசு அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்லூரியினுடைய பேராசிரியர் திரு. பரமசிவம் அவர்கள் சில வன்முறையாளர்களால் படுகொலை செய்யப்பட்டு இருக்கிற சம்பவமானது மிகவும் வருந்துவதற்கும் கண்டனத்திற்கும் உரிய வன்முறைச் செயலாகும். இந்த காட்டுமிராண்டித்தனமான, அநாகரிகமான வன்முறையில் ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும், எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்தத் தீவிரவாதப் பிரிவினராக இருந்தாலும், அவர்களைக் கண்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது காவல் துறையினுடைய பொறுப்பாகும். கடந்த 2 நாட்களுக்கு முன்னால் நான் மதுரையில் இருந்தபோது, பொதுவாக விசாரிக்கிறபோது, அவர் எந்த வன்முறைக்கும் போகாத அமைதியான நல்ல பேராசிரியர் என்கிற பெயர் அவருக்கு இருக்கிறது. திடீர் என்று ஏற்பட்ட மின்வெட்டைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த நேரத்திலே இருட்டிலே வந்து, அவர் கல்லூரியிலே மாலைநேரக் கல்லூரி வகுப்பை முடித்துக்கொண்டு வருகிற போது வழிமறித்து இந்தக் கொடுமையான வன்முறைப் படுகொலை நிகழ்ந்து இருக்கிறது. எனவே, இதிலே சம்பந்தப்பட்டிருக்கிற குற்றவாளிகளை உடனடியாகக் கண்டுபிடித்து கைது செய்யவேண்டும்; அதற்கு தீவிரமாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என நானும் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

[1998 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானம் மற்றும் கவன ஈர்ப்பு குறித்து தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. தெய்வநாயகம் அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. தாமரைக்கனி அவர்களும், பா.ம.க.-1 சார்பில் திரு. கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் திரு. திருநாவுக்கரசு அவர்களும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். மதுரையிலே கொலையுண்ட பேராசிரியர் கே.ஆர். பரமசிவம் அவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போலவும், நான் கேள்விப்பட்டதற்கிணங்கவும் மிக மிக நற்பண்புகள் வாய்ந்தவர்; யாருடைய வம்புக்கும் போகாத அரும் குணவானாகத் திகழ்ந்தவர். அவர் தனிப்பட்ட பகை காரணமாகவோ அல்லது மதமாச்சரிய வெறியின் காரணமாகவோ, இன்னும் தெளிவான காரணம் கண்டுபிடிக்கப்பட முடியாத சூழ்நிலையில், கொலையுண்டு இருக்கிறார் என்பது வருந்தத்தக்க செய்தி மாத்திரமல்ல மிக மிகக் கண்டிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியுமாகும். அந்தக் கொலை நடைபெற்று இரண்டு நாட்களாகிவிட்டன, இன்னும் குற்றவாளிகள் அல்லது கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற மனக்குறையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வெளியிட்டிருக்கின்றார்கள்.

*முற்பகல் 11-00*

ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டு, காவல்துறையினர் மிகக் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டு, இந்தக் காரியத்திலே துணிந்து இறங்கியவர்கள் யார் என்பதை அறிந்து, கைது செய்வதற்காக முயற்சிக்கின்ற நேரத்தில், அப்படிக் கைது செய்து விசாரிப்பதைக் கூடத் தவறு என்று ஒரு கூட்டத்தார் வம்பு செய்ததைக் குறிப்பிட்டு, அது மிக மிகக் கண்டிக்கத்தக்கது, அதற்கெல்லாம் இடம் தரக்கூடாது என்று இங்கே நம்முடைய திரு. தாமரைக்கனி அவர்கள் எடுத்துரைத்தார்கள். பொதுவாக நல்ல காரியங்களுக்காகவும் மக்கள் திரண்டு எழுகின்றார்கள், சில நேரங்களிலே தவறான செயல்களுக்காகவும் திரண்டு எழுகின்றார்கள்.

அண்மையிலேகூட கல் குவாரி ஒன்றில் கற்களைத் திருட்டுத்தனமாக ஏற்றிச் சென்ற லாரியை மடக்கிப் பிடித்தார் என்பதற்காக ஒரு



1998 மார்ச் 31] [கலைஞர் மு. கருணாநிதி]

பெண் அதிகாரி கேரோ செய்யப்பட்டு, சாலை மறியல் செய்யப்பட்டு, பிறகு காவல் துறை அதிகாரிகள் சென்று அந்தப் பெண் அதிகாரியை மீட்டார்கள் என்ற சம்பவம் சென்னைக்கு அருகிலேயே நடைபெற்றதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். எனவே திரு. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதுபோல எடுத்ததற்கெல்லாம் சாலை மறியல், பஸ்களைக் கொளுத்துதல், பஸ்களைச் சேதப்படுத்துதல் போன்ற இந்தக் காரியங்களைத் தொடர்ந்து இனியும் யாரும் செய்வார்களேயானால், அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏற்கெனவே, பேருந்துகளைக் கொளுத்துகின்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, அவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். அது மேலும் தொடரக்கூடிய சூழ்நிலை உருவாகும் என நான் எச்சரிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

இந்தக் கொலையைப் பொறுத்தவரையில், இது மத விரோதம் காரணமாக நடைபெற்றிருக்கக்கூடிய ஒன்றாக இருக்கலாம் என்று காவல்துறையினர் யூகிக்கின்றார்கள். தனிப்பட்ட முறையிலே நடைபெற்ற ஒன்றாக இருக்கக்கூடும் என்றும் சில கருத்துகள் நிலவுகின்றன. எந்தக் காரணமாக இருந்தாலும், கொலை அதற்குப் பரிகாரமாகாது. அது கண்டிக்கத்தக்க ஒரு முறையாகும். அதை நாம் யாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையிலே இல்லை.

நம்முடைய திரு. தாமரைக்கனி குறிப்பிட்டார், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இந்து முன்னணியினர் இப்படிக் கொலை செய்யப்படுவது சகஜமாகிவிட்டது என்று சொன்னார். நம்முடைய திரு. சந்தானம் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள்; அதே மதுரை மாநகரத்தில் கடந்த ஆட்சிக்காலத்தில்தான் இவரைப்போன்ற ஒரு நல்லவர் ராஜகோபாலன் என்கின்ற இந்து முன்னணியைச் சேர்ந்தவர் கொலைசெய்யப்பட்டு, அந்தக் கொலையிலே ஈடுபட்டவர்கள் யார் என்பது கண்டுபிடிக்க முடியாமல் இருந்து, மிக மிகத் தாமதமாக அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த வழக்கு இப்போது இந்த ஆட்சியிலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சியிலே இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள் மாத்திரமல்ல, இந்து முன்னணியினரின் கட்டடங்கள் கூட வெடி வைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகரத்திலே உள்ள ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் குண்டு வைத்து நொறுக்கப்பட்டதும், 11 பேர் இந்து முன்னணி அல்லது ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்தவர்கள் அந்த இடத்திலேயே மாண்டு மடிந்ததும், கடந்த ஆட்சியிலே நடைபெற்றிருக்கின்றன. எனவே, அந்த ஆட்சி, இந்த ஆட்சி என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல், பொதுவாக இத்தகைய வன்முறைகள் எந்த ஆட்சியில் நடைபெற்றாலும், அதைக் கண்டிக்கக்கூடிய சுபாவத்தை, அந்தப் பண்பாட்டை நாம் கற்றாக வேண்டும். அனைவரும் சேர்ந்து இத்தகைய கொடுமைகளைக் கண்டித்தால், இதுபோன்ற நிலைமைகள் தொடர்ந்து நடைபெறாமல் தடுத்திட இயலும். ஓர் அமைதியை உருவாக்கிட முடியும்.

*முற்பகல் 11-05*

இந்தக் கொலையைப் பொறுத்தவரையிலே போலீசார் மிகத் தீவிரமாகக் கொலையாளிகளைத் தேடுகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். கொல்லப்பட்டவருடைய சகோதரர் பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் மதுரை, மதிச்சியம் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று, குற்ற எண் 246/98-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 302-வது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. இன்றல்ல; நாளை அல்ல; அல்லது நாளை மறுநாள் அல்ல, எப்படியும் குற்றவாளிகளைப் பிடித்தே தீருவோம் என்கின்ற உறுதியை மதுரை மாநகரத்துக் காவல்துறையினர் வழங்கியிருக்கின்றார்கள்.

கொலையுண்டு மரணமடைந்த பரமசிவம் அவர்களுடைய குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகை தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கேற்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொண்டு, இந்தக் கொலையிலே நிச்சயமாகக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்ற உறுதியை வழங்கி, இந்த அளவில் இந்தத் தீர்மானத்திலே உரையாற்றியவர்களுக்கு என்னுடைய கருத்து விளக்கத்தைத் தந்து அமைகின்றேன். வணக்கம்.





# 4. விதி 110-ன் கீழ் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

## தொழில் வரிச் சட்டத்தை மறு ஆய்வுசெய்ய குழு நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப் பற்றி அறிக்கை ஒன்றை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் அளிக்க என்னுடைய அனுமதியைக் கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் தங்கள் அனுமதியோடு இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

தொழில் வரியைத் திருத்த உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் அளித்து நகராட்சி மற்றும் மாநகராட்சிச் சட்டங்களில் முன்பு வகை செய்யப்பட்டிருந்தது. அதன்படி சென்னை மாநகராட்சியில் ரூபாய் 150-க்கு மேலும் ரூ.300-க்கு உள்ளும் 6 மாதம் வருமானம் பெறும் மாதச் சம்பளதாரர்களுக்கும் அதேயளவு ஆண்டு விற்பனை அளவுள்ள வியாபாரிகளுக்கும் ஓர் அரையாண்டுக்கான குறைந்தபட்சத் தொழில் வரி 9 ரூபாய் எனவும் 15,000 ரூபாய்க்கு மேல் 6 மாதம் சம்பளம் பெறும் சம்பளதாரர்களுக்கும் அதேயளவு ஆண்டு விற்பனை அளவுள்ள வியாபாரிகளுக்கும் அதிகபட்ச தொழில் வரி ரூபாய் 125 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், முந்தைய அரசு 1992-ஆம் ஆண்டில் தொழில் வரிக்கெனத் தனிச்சட்டம் ஒன்று கொண்டு வந்து தொழில் வரியை உயர்த்தி நிர்ணயித்தது.

மேலும், இத்தனிச் சட்டத்தில் தொழில் வரி கட்டத் தவறினால் கடும் அபராதம் விதிக்கவும் வகை செய்யப்பட்டது. இஃதன்னியில், தனிச் சட்டம் குறித்து வணிகர்கள் சங்க அமைப்புக்கள் அதிருப்தி தெரிவித்ததையொட்டி 1992ஆம் ஆண்டில் முந்தைய அரசு தான் நிர்ணயித்த தொழில் வரி விகிதத்தை 1994ஆம் ஆண்டிலும் 1995ஆம் ஆண்டிலும் சட்டத் திருத்தங்கள் மூலம் குறைத்து நிர்ணயித்தது. அந்தச் சட்டத் திருத்தத்தின்படி 50,000 ரூபாய் வரையில் ஆண்டு விற்பனையுள்ள வியாபாரிகளுக்கு உயர்ந்தபட்ச அரையாண்டு தொழில் வரி ரூ.250-லிருந்து ரூபாய் 60 ஆகவும், அதேபோல 20 இலட்சம் ரூபாய் வரை ஆண்டு விற்பனை அளவுள்ள வியாபாரிகளுக்கு ஓர்

அரையாண்டுக்கான அதிகபட்சத் தொழில் வரி 1,250 ரூபாய் என்பது 720 ரூபாய் எனவும் குறைத்துள்ளது.

இப்படி முந்தைய அரசுக் காலத்தில் தொழில் வரிகளைக் குறைத்தும்கூட பல்வேறு வணிகர் சங்க அமைப்புகளும் அரசு அலுவலர் சங்கங்களும் சுய தொழில் செய்பவர்களும் தொழில் வரி விகிதம் குறைக்கப்பட்டு அச்சட்டம் எளிமையாக்கப்பட வேண்டும் என அரசை வலியுறுத்தி வருகின்றனர். எனவே, தொழில் வரி குறித்து அரசு தொழில் வரிச் சட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்வதற்கு வழிகாட்டும் வகையில் 18-3-1998 அன்று பேரவையில் இடம் பெற்ற மேதகு ஆளுநர் உரையில் பத்தி 37-ல் '1992ஆம் ஆண்டு முந்தைய அரசு இயற்றிய புதிய தொழில் வரிச் சட்டத்தில் உள்ள வரி விகிதங்களைக் குறைப்பதைப் பற்றியும், சில பிரிவுகளை நீக்குவது பற்றியும் வணிகர்களிடமிருந்து பல முறையீடுகள் வந்துள்ளன. தொழில் வரியிலிருந்து வரும் வருவாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரு முக்கிய வருவாய் இனமாக உள்ளதால் தொழில் வரிச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய ஒரு குழுவினை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது' என்றும் குறிப்பிடப்பட்டது. அதற்கேற்ப தொழில் வரிச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய தமிழ்நாடு அரசு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் அவர்களை அமைப்பாளராகக்கொண்டு குழு ஒன்று அமைக்கப்படுகிறது. இக்குழுவில், ஊரக வளர்ச்சித் துறை செயலாளர், நிதித் துறை செயலாளர், சட்டத் துறை செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் ஆகியோர் அலுவல் சார் உறுப்பினர்கள் ஆகவும், மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு. குண்டன் அவர்கள்—உதகை தொகுதியைச் சார்ந்தவர், திரு. இரா. மணிமாறன்—திண்டுக்கல் தொகுதியைச் சேர்ந்தவர், திரு. இரா. சொக்கர்—சிவகாசி தொகுதியைச் சேர்ந்தவர், திரு. கே. சுப்பராயன் அவர்கள் திருப்பூர் தொகுதியைச் சேர்ந்தவர் திரு. அ.வ. அப்துல் நாசர்—புவனகிரி தொகுதியைச் சேர்ந்தவர், திரு. ஜி.கே. மணி—பெண்ணாகரம் தொகுதியைச் சேர்ந்தவர் ஆகிய சட்டப்பேரவை உறுப்பினர்களும், திரு. வி. கோபாலகிருஷ்ணன், மேயர், கோவை மாநகராட்சி, திரு. எஸ். இரத்தினவேலு, தலைவர் தமிழ்நாடு தொழில் வர்த்தகச் சங்கம், மதுரை, திரு. என்.ஆர். தனபாலன், தலைவர், சென்னைப் பெருநகர் வியாபாரிகள் சங்கம் ஆகியோர் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் இக்குழுவின் உறுப்பினர்—செயலர் ஆகவும் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை இங்கே அறிவிக்கிறேன்.



## 5. தகவல் கோரல்

### புத்தன்தருவை பகுதியிலுள்ள குளங்களுக்கு நீர் வழங்குதல்

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே மலைப் பிரதேசமான ராதாபுரம் பகுதியில் கடந்த 6 ஆண்டுகளாக மழை பெய்யவில்லை. 1989-ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள்....

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வரலாற்றைச் சொல்லாதீர்கள். என்ன பிரச்சினை என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 1989-ஆம் ஆண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், புத்தன்தருவைக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் மூலம் தண்ணீர் திறந்து விடுவதற்கு சிறப்பு ஆணை பிறப்பித்தார்கள். அந்த அடிப்படையிலே, அப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த, தற்போதைய 'இன்பர்மேசன்' செகரட்டரியாக இருக்கின்ற, திரு. ராஜரத்தினம் அவர்கள் பதினைந்தே நாட்களில், அனைத்துக் குளங்களையும் பெருக்கித் தந்து, அந்தப் பகுதியினுடைய வறட்சியை, குடிநீர்ப் பஞ்சத்தை நீக்கினார்கள். அதே அடிப்படையில், இந்த ஆண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டபோது, அவர்களும் கருணை உள்ளத்தோடு, பொதுப்பணித் துறையிலேயிருந்து அரசு ஆணை எண் 46-ன்படி, 17 குளங்களுக்கும், புத்தன்தருவைக்கும் 800 எம்.சி.எப்டி. தண்ணீரைக் கொடுப்பதற்கு, 4-2-1998 அன்று அரசு ஆணை பிறப்பித்தது. அந்த அடிப்படையிலே அதிகாரிகள் தண்ணீரைத் திறந்துவிடுவதற்கு, கிட்டத்தட்ட 20, 30 முறை, செயற்பொறியாளராக இருக்கின்ற திரு. கணேசன் அவர்களையும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும், உயர் அதிகாரிகளையும் நான் சந்தித்தபோதும், அவர்கள், ஏதோ தண்ணீர் போகின்றது என்று அலட்சியப்போக்கிலே இருக்கின்றார்களே தவிர, இந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் துளியும் அவர்களுடைய உள்ளத்தில் இல்லாத காரணத்தால், 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், அரசு ஆணை பிறப்பித்த பின்பும், எல்லாக் குளங்களிலும் உள்ள, அனைத்துப் பகுதிகளிலும் உள்ள, விவசாய நிலங்களிலே அறுவடை செய்த பின்பு,

[திரு. மு. அப்பாவு] [1998 மார்ச் 31

198 கன அடி தண்ணீர் கடந்த 14-3-1998 அன்று இருந்தபோதும்கூட, தண்ணீரைத் திறந்துவிடுவதற்கு நான் பலவாறு முயற்சி செய்த பின்பும், அதிகாரிகளினுடைய மெத்தனப் போக்கினால், தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகள் சில தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைச் சொற்பொழிவு ஆற்ற விடமாட்டேன், உட்காரச் சொல்லிவிடுவேன். உங்கள் கோரிக்கையை ஒரு நிமிடத்திலே சொல்லிவிட்டு உட்காரவேண்டும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 88 அடி தண்ணீர்தான் இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து, நாள் ஒன்றுக்கு 300 கன அடி வீதம் அந்த அணையிலிருந்து தண்ணீர் எடுத்தால், இன்னொரு 7, 8 நாட்களுக்குத் தண்ணீர் வரும். இந்த புத்தன்தருவை நீங்கலாக உள்ள 18 குளங்களுக்காவது தயவுசெய்து, குடிநீருக்காக, நீங்கள் தண்ணீரைத் திறந்துவிடுவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, பேச்சிப்பாறை அணையிலிருந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள். (திரு. மு. அப்பாவு நின்றுக்கொண்டிருந்தார்) நீங்கள் உட்காருங்கள் முதலில். நீங்கள் இதே வேலையைத்தான் தினமும் செய்து கொண்டிருக்கிறீர்கள் (குறுக்கீடு) உட்காரவில்லை என்றால் நான் நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துகளுக்கு நான் பதில் சொல்வது இருக்கட்டும். மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது, மாண்புமிகு உறுப்பினர் இதைப்பற்றி ஏதாவது ஒரு கருத்தைத் தெரிவிக்க வேண்டுமானால், முதலிலே தங்கள் அனுமதியைப் பெற்று, இன்ன கருத்தை அவர் எழுப்பப் போகிறார், அதற்கு நீங்கள் தயாரா என்று என்னைக் கேட்டு இருக்க வேண்டும், Whether it is a Call Attention or Special mention. ஒன்றுமே இல்லை. திடீரென்று எழுந்துநின்று ஒரு பிரசங்கத்தை நடத்தி இருக்கிறார் என்றால், நானும் திருப்பி நடத்துவேன். நான் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். ஆனால், இது நியாயமா என்பதுதான் என்னுடைய கேள்வி.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நியாயம் இல்லை. ஆனால், என்ன நடக்கிறது என்பதை நான் சொல்லிவிடுகிறேன். நீங்களும் தவறாக நினைக்கக் கூடாது. நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மரியாதை கொடுக்கத்தான் வேண்டும். அவர்கள் என்னிடம் வந்து, 'அமைச்சர்களிடம் நான் கேட்டுவிட்டேன், நீங்கள் அவையிலே கேட்டால் பதில் சொல்கிறேன் என்று சொன்னார்கள்' என்று சொல்கிறார்கள். பெரும்பாலும் அப்படித்தான் சொல்கிறார்கள். சில நேரம் சொல்வது உண்மையாக இருக்கிறது. சில நேரம் சொல்வது உண்மை இல்லாமல் போய்விடுகிறது. அதற்குப் பேரவைத் தலைவரைக் குறை சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர், என்னிடத்திலே, நான் சபையிலே இந்தப் பிரச்சினையை எழுப்பப் போகிறேன், தாங்கள் பதில் சொல்ல வேண்டும் என்று அவர்கள் கேட்கவில்லை. இருந்தாலும், அவர்கள் உரிமையின் காரணமாகக் கேட்டதற்காக நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, உட்கார்ந்து கொண்டு பேசக் கூடாது.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இதுகுறித்து, 3 தினங்களாக, மாலை நேரத்திலே அவர்களையும் உட்கார வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவரோடுப் பேசி, அதிகாரிகளோடுப் பேசி, இந்தப் பிரச்சினையை எவ்வளவு சுமூகமாகத் தீர்க்க வேண்டுமோ, அப்படித் தீர்ப்பதற்கு நான் முயற்சி எடுத்து இருக்கிறேன் என்பதை அவர் அறிவார். ஆனால் இதில் இருக்கிற பிரச்சினை என்ன? கிட்டத்தட்ட மணிமுத்தாறிலே 108 குளங்களுக்கு ரெகுலராகக் கொடுக்கவேண்டும். ரிசர்வ் குளங்கள் 39 இருக்கின்றன. ஆக, மொத்தம் 147 குளங்களுக்குக் கொடுக்கவேண்டும். அவர்கள் சொன்னார்கள், நீங்கள்தானே ஜி.ஓ. போட்டீர்கள் என்று. நான் ஒத்துக்கொள்கிறேன். டிசம்பர் மாதத்திலே நிறைய மழை. மணிமுத்தாறு வழிந்து ஓடுகிறது. என்ன செய்வது என்றே தெரியவில்லை. அந்த நேரத்திலே, கிடைக்காதப் பகுதிக்கு போகட்டுமே என்பதற்காக, கலைஞர் அவர்கள், நல்ல எண்ணத்தோடு, புத்தன்தருவைக்கு அனுப்புங்கள் என்று சொன்னார்கள். ஆனால் நிலைமை இப்போது என்ன? இப்போது இன்ஃப்ளோ குறைந்துவிட்டது. ஆனால் அதேநேரத்திலே 4 ரீச் கொடுக்கவேண்டும்.

ஒவ்வொன்றுக்கும் ஒரு பேட்டர்ன் இருக்கிறது. கீழ்பவானியில் ஒரு மாதிரி பேட்டர்னில் பயிரிடுகிறார்கள். தாமிரபரணி ஒரு மாதிரி பயிரிடுகிறார்கள். மணிமுத்தாறிலே பயிரிடுகிறார்கள். இப்படி நான்கு ரீச். இரண்டு ரீச்சிற்கு தண்ணீர் கொடுத்தால், இரண்டு ரீச்சிற்கு இந்த வருடம் கொடுக்க மாட்டோம். ஆனால் எல்லா இடத்திலும் தண்ணீர் இருக்கிறபோது கீழே புத்தன்தருவைக்குப் போகிறபோது நான்கு ரீச்சிற்கும் ஒரே நேரத்தில் தண்ணீர் கொடுத்துவிட்டோம். நான்கு ரீச்சும் பயிரிட்டு விட்டார்கள். ஆனால், இப்போதுள்ள நிலைமை என்னவென்று கேட்டால், அது உங்களுக்குள்ள உரிமை. உங்களுக்குக் கீழே வருபவை மூன்று வகையான குளங்கள். ஒன்று 'ட்ரைவ் பெட் டாம்', பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானது. இன்னொன்று ரிசர்வ் டாங்க் 39, மீதியிருப்பது 'பிரஷர் டாங்க்', தண்ணீர் இருந்தால் கீழே கொடுக்கலாம். ஆனால் நிலைமை என்னவென்றால் இப்போது நான்கு இடங்களில் பயிரிட்டு விட்டார்கள். நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என்றால், புத்தன்தருவைக்குக் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். புத்தன்தருவை உங்கள் தொகுதி அல்ல என்று அன்றைக்கே நான் சொன்னேன். நீங்கள் என்னவென்றால் - தன் இலைக்கு பாயசம் வேண்டுமென்பதற்காக பக்கத்து இலையிலே பாயசம் கொடு என்பது மாதிரி—நஞ்சுண்டான் குளத்திலிருந்து குருவிசுட்டான் குளம் வரையில் தண்ணீர் எடுத்துக்கொண்டு போக வேண்டுமென்று நீங்கள் பார்க்கிறீர்கள். ஆனால் நாங்கள் 7 குளங்களுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

நிலைமை என்னவென்றால் - அதாவது சாத்தான்குளம் எம்.எல்.ஏ. ஆக இருக்கிற திரு. மணிநாடாரும், திரு. வேல்துரை அவர்களும், இங்கே அமைதியாக உட்கார்ந்துகொண்டு, எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிற திரு. கிருஷ்ணன் அவர்களும், மேலே இருக்கிறவர்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று 3 எம்.எல்.ஏக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கீழே தண்ணீர் விட்டீர்கள் என்றால் நாங்கள் சும்மா இருக்கமாட்டோம் என்று 3 எம்.எல்.ஏக்கள் சொல்கிறார்கள். கீழே தண்ணீர் விடவேண்டுமென்று ஒரு எம்.எல்.ஏ. சொல்கிறார். இருந்தாலும் இருவரையும் தனித்தனியாக அழைத்துப்பேசி இதைச் செய்யலாம் என்று கலெக்டரிடம் பேசினேன். கலெக்டர் சொன்னார். இப்போது எல்லோரும் உண்ணாவிரதத்தில் உட்கார்ந்து விட்டார்கள் சார், எங்களுக்கு உரிமையுண்டு, நாங்கள் அறுவடை நடத்தியதற்குப் பிறகுதான் கீழே தண்ணீர் போக வேண்டுமென்று உட்கார்ந்து கொண்டு விட்டார்கள். இப்போது நான்





என்ன பண்ணுவது என்றார். சட்டம் ஒழுங்கு கெட்டுப்போகாமல் பார்த்துக்கொண்டு நடவடிக்கை எடுங்கள் என்று அவரிடம் சொல்லியிருக்கிறேன்.

ராஜரத்தினம் காலத்தில் கொடுத்தீர்களே அப்படிக் கொடுங்கள் என்று கேட்டால், ராஜரத்தினம் காலத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்ன மாதிரி நடுரோட்டில் உட்காருகிற பிரச்சினையே அன்றைக்கு இல்லை. இப்போதுதான் எதற்கெடுத்தாலும் உட்கார்ந்து கொள்கிறார்கள். அதற்கு என்ன செய்யச் சொல்கிறீர்கள்? மூன்று எம்.எல்.ஏ.-க்கள் வேண்டாம் என்கிறார்கள். இருந்தாலும் 80 அடி வரையில்தான் நாங்கள் மணிமுத்தாறு தண்ணீரை எடுக்கமுடியும். இன்றைக்கு இருக்கிற 22,000 ஏக்கரில் 10,000 ஏக்கர் அறுவடைக்கு விட்டு, மீதியிருக்கிற அறுவடை நடந்து, கடைசி 15 நாட்களுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டும். இன்னும் மூன்றாவது ரீச்சிற்கு 15 நாட்கள் கொடுக்கவேண்டும். மீதி இருப்பதற்கும் தண்ணீர் கொடுக்கவேண்டும். இருந்தாலும் 10-ஜி-யிலிருந்து 7 குளங்களுக்குத் தண்ணீர் கொடுத்திருக்கிறோம். அது போயிருக்கிறது. 14 குளங்கள் நிரம்பி நிரம்பி, கடைசி குளத்திற்குப் போய்ச் சேருவதற்குக் கஷ்டமாகிவிடும். இருந்தாலும் உங்கள் ஏரியாவில் நிரம்பியிருக்கிறது. இருந்தாலும், கலெக்டரிடத்திலே முடியுமானால் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறேன். இது நம்பர் ஒன்.

நம்பர் 2, பேச்சிப்பாறை அணையிலிருந்து தண்ணீரை எடுத்துக் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார். உங்கள் எதிரில் கலெக்டரோடு பேசினேனா இல்லையா? பேச்சிப்பாறையில் இருக்கிற தண்ணீரை எடுத்து, ராதாபுரத்திற்குக் கொண்டு வந்தோம் என்றால், கன்னியாகுமரியில் இருப்பவர்கள் சாலை மறியல் என்று சொல்வார்கள். அப்படியிருக்க நான் என்ன செய்ய முடியும்? எங்களுக்கு 'உலக வங்கி டாம் சேப்டி' பணம் இருக்கிறது. அதைச் செலவு பண்ண வேண்டும். பேச்சிப்பாறை அணையிலே கீழே காரை பூசினோம். 18 அடி தண்ணீர், எப்படியாவது அதை வெளியே எடுத்து, இருக்கிற குளங்களை கன்னியாகுமரி மாவட்டத்தில் நிரப்பி, கீழேகொண்டு வந்து, தோவாளை சானலில் விட்டு, ராதாபுரம் கொண்டுவந்து, உயிர்த் தண்ணீரும் கொடுக்கலாம் என்பதற்காக நடவடிக்கை எடுத்துவிட்டு, இராத்திரி பேசியிருக்கிறேன், காலையிலே பேசியிருக்கிறேன், 8½ மணிக்கு, இன்றைக்கு ஆபிசிற்கு இங்கே வருவதற்குள் பேசிவிட்டு வந்திருக்கிறேன். இவ்வளவும் நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதிலிருந்து ஒன்று எனக்குத் தெரிகிறது.

[திரு. துரைமுருகன்] [1998 மார்ச் 31

கேட்பதற்கு எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று துடிக்கிறோம் அல்லவா நாங்கள், அது உங்களுக்குச் சில நேரங்களில் பரிகாசமாகப் போய்விடுகிறது. இருந்தாலும் மக்களுக்காகக் கேட்கிறீர்கள். இந்த அரசு தயங்காது, எங்களால் முடிந்த அளவிற்குச் செய்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

(திரு. மு. அப்பாவு எழுந்து நின்றார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்கமாட்டேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No Point of Order.

(திரு. மு. அப்பாவு நின்று கொண்டிருந்தார்)

நான் Speaker பேசிக்கொண்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். பொது முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் பிரச்சினைகளுக்காக, தங்கள் தொகுதிக்காக, தொகுதிப் பொதுமக்களுக்காக, இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்காக மாண்புமிகு அமைச்சர்களை அணுகியிருக்கின்றோம். அவர்கள் பதிலளிக்க ஒத்துக்கொண்டார்கள். நீங்கள் அனுமதி கொடுத்தால், சட்டமன்றத்திலே நாங்கள் அவசரப் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக எழுப்பினால் அவர்கள் பதில் சொல்லத் தயாராக இருப்பதாகச் சொல்கிறார்கள். நான் உறுப்பினர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று அந்த முறையை ஏற்றுக்கொண்டு பின்பற்றி வருகின்றேன். ஆனால் இன்று பார்த்தால் திரு. அப்பாவு அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கேட்கச் சொன்னார்கள் என்று என்னிடம் சொல்லிவிட்டு இங்கே எழுப்பினார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னைப் பார்த்து எப்படி நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள் என்று கேட்கின்றார்கள். ஆகவே, இப்படித் தவறான முறையிலே இனிமேல் நடந்து கொள்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கே நான் வாய்ப்புத் தரமாட்டேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** நான் அமைச்சரிடம் பேசிவிட்டுத்தான் பேசினேன். தவறாகக் கூறுகிறார்கள். Zero hour-ல்' கேட்கிறேன் என்று சொன்னேன். அவர் சரி என்ற பிறகுதான் கேட்டேன்.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நான் இதற்கு மேலே உங்களிடம் பேசத் தயாராக இல்லை.

(திரு. மு. அப்பாவு நின்று கொண்டிருந்தார்)

உட்காருங்கள். நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? நீங்கள் எப்படி என்னிடம் வந்து அமைச்சர் உங்களைக் கேட்கச் சொன்னார் என்று சொல்லலாம்? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. அப்பாவு பேசிய எதுவும் குறிப்பேட்டில் ஏறாது. நீங்கள் இனிமேல் இப்படி நின்றீர்கள் என்றால் வெளியேற்றுவேன்.

முற்பகல் 11-20

(திரு. அப்பாவு தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. அப்பாவு மீது நான் மெத்த மரியாதை வைத்திருக்கின்றேன். நீங்கள் இப்படி ஒரு பிரச்சினையை எழுப்பப் போகிறேன், கிளப்பப் போகிறேன் என்று என்னிடத்தில் கேட்கவில்லை. காலையிலே இருந்து கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். ஒரு நாளைக்கு நீங்கள் நான்கு தடவை பேசுகிறீர்கள். ஆனால், தலைவரிடத்தில், அவையில், இந்தப் பிரச்சினையை நான் கிளப்பப் போகிறேன், நீங்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று நீங்கள் சொன்னீர்களா? நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள்.

(திரு. அப்பாவு தொடர்ந்து நின்று கொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை விடுங்கள். திரு. அப்பாவு, இப்போது உங்களுக்குப் பேச அனுமதி இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் ரெக்கார்டிலே ஏறாது. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, நீங்கள் முறைகேடாக நடக்கிறீர்கள். இது கடைசி எச்சரிக்கை. என் அனுமதி இல்லாமல், இனிமேல் எழுந்து நின்றால், அவையைவிட்டு வெளியேற்றுவேன். நீங்கள் இப்படி அனுமதியில்லாமல் பேசக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு சொன்னது எல்லாமே அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1998 மார்ச் 31

## 6. வரவு-செலவுத் திட்டம், 1998-99, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். 9 உறுப்பினர்களில் எந்த உறுப்பினரும் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லி திரு. ப. ரங்கநாதன் அவர்களை அழைக்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக என்னுடைய ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க வாய்ப்புகளைத் தந்தமைக்கு நன்றியைக் கூறிக்கொண்டு இங்கே பேச விழைகிறேன். 1998-99 ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையில் சமையல் எண்ணெய் வகை, கணினி மென்பொருள், காசினிக் கீரை, விழிகளுக்கிடையே பொருத்தப்படும் ஆழி லென்ஸ் ஆகியவற்றிற்கு முழு வரி விலக்கு, மதுபான வகைகள் மீதான விற்பனை வரி 10 சதவிகிதம் உயர்வு, பான் மசாலா மீதான வரி 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாக உயர்த்தி உள்ளீர்கள்—இதை இன்னும் ஒரு 10 சதவிகிதமாக உயர்த்தினால் கூட நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று 300 குக்கிராமங்களில் தொடக்கப்பள்ளிகள். தமிழகத்திலே, குறிப்பாக பள்ளிகளே இல்லை என்று சொல்லமுடியாத ஒரு நிலை உருவாக வேண்டுமென்று நீங்கள் எண்ணியுள்ளீர்கள். அந்த எண்ண ஓட்டத்தின் நிலைபாடுதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே 300 குக்கிராமங்களில் தொடக்கப் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளீர்கள். அதேபோல, சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு 15 நாட்களுக்கு, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை முட்டை என்ற நிலைமாறி வாரந்தோறும் முட்டை தருகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளீர்கள். சென்னையில் ரூ. 100 கோடி முதலீட்டில் பெரு வணிக வளாகமும் மற்றும் நிதி மையமும் இங்கே ஆரம்பிக்க உத்தேசித்துள்ளீர்கள். சென்னை துரித இரயில் திட்டத்திற்கு இரண்டாவது கட்டப் பணிக்காக லஸ்-வேளச்சேரி வரையில் புதிய இரயில் பாதை அமைப்பதற்கு ரூ. 605 கோடியை ஒதுக்கியுள்ளீர்கள். திருப்பூர் நகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணி என்பது ஒரு நீண்டநாள் கோரிக்கை. இதற்காக தனியார் முதலீட்டுடன்



1998 மார்ச் 31] [திரு. ப. ரங்கநாதன்]

700 கோடி ரூபாயை இங்கே ஒதுக்கியுள்ளீர்கள். ஆயிரம் மக்கள் தொகைக் கொண்ட அனைத்து கிராமங்களுக்கும் இணைப்புச் சாலை வசதி. புதிய பன்னாட்டு விமான நிலையம். விளைநில மற்ற விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் ரூ. 100-லிருந்து ரூ. 150-ஆக உயர்த்தியுள்ளீர்கள். உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் இன்னும் கூடுதலாக நிதியை ஒதுக்கியிருக்கலாம். காரணம் இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலும் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று நாங்கள் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறோம். அந்த அதிகாரங்களை எந்த அடிப்படையில் பகிர்ந்து தருவது என்ற ஒரு முறையை வகுப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவையும் நீங்கள் அறிவித்துள்ளீர்கள். ஆகவே, இந்த நேரத்தில் நீங்கள் ரூ. 839 கோடி நிதி என்பதை இன்னும் கொஞ்சம் உயர்த்தி அதை 8 விழுக்காட்டிலிருந்து ஒரு 10 அல்லது 12 விழுக்காடாக உயர்த்தி, நீங்கள் அதை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோன்று சென்னை நகரைப் பொறுத்தவரையில் உள்சாலைகளுக்கும், பஸ் போக்குவரத்துச் சாலைகளுக்கும், பிற சாலைகளுக்கும் அகலப்படுத்துவதற்கும், செம்மைப்படுத்துவதற்கும் 366 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளீர்கள். அதேநேரத்தில் மழைக் காலங்களில் சென்னை நகரம் மழை, வெள்ளத்தினால் சூழப்பட்டு பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு உள்ளாக்கப்பட்டதை நீங்களே உணர்ந்துள்ளீர்கள். கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் சென்னை நகரமே வெள்ளக்காடாகக் காட்சியளித்தது. நீங்களே நேரடியாகப் பார்த்தீர்கள். பல்வேறு மீட்புப் பணிக்களை மேற்கொண்டோம், அதைப் போக்குவதற்காக. இந்த ஆண்டு கூவம் ஆறு, ஓட்டேரிநல்லா, கேப்டன் கெனால், அடையாறு, மாம்பலம் கால்வாய் போன்ற கால்வாய்களிலே தூர் வாரி அந்தக் கரைகளை உயர்த்துவதற்கும், அவற்றைச் செப்பனிடுவதற்கும் இந்த ஆண்டு மட்டும் 300 கோடியை நீங்கள் ஒதுக்கியுள்ளீர்கள். இதற்காக நான் சென்னை நகர மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் உங்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினை. இது நீண்ட நாளைய பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் போக்குவதற்கு

[திரு. ப. ரங்கநாதன்] [1998 மார்ச் 31

இந்த ஆண்டு மட்டும் நீங்கள் குடிநீர்ப் பிரச்சினைக்காகவும், கழிவுநீர் அகற்றப்படுவதற்கும், பழைய கழிவுநீர்த் திட்டங்களிலே இருக்கின்ற குறைபாடுகளைப் போக்குவதற்கும், 135 கோடி ரூபாயையும், 150 கோடி ரூபாயையும் ஒதுக்கியுள்ளீர்கள். இதையும் சென்னை நகர மக்களின் சார்பில் நாங்கள் வரவேற்கின்றோம்.

அதே நேரத்தில் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்திலே தமிழகத்தினுடைய பங்காக 512 கோடியை நீங்கள் வழங்கியுள்ளீர்கள் இதுவரையில் கிருஷ்ணா குடிநீர்த் திட்ட வழங்கு விழாவையும் நாம் நடத்தியுள்ளோம். ஆனால் இதுநாள் வரையில் சென்னை நகருக்கு 2.9 டி.எம்.சி. தண்ணீர்தான் கிடைத்துள்ளது. இந்தக் குறையைப் போக்குவதற்கு உடனடியாக தெலுங்கு-கங்கைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி சென்னை நகரினுடைய குடிநீர்த் தேவையை இந்த ஆண்டாவது பூர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்களுக்கு நீங்கள் வரியை விலக்கியுள்ளீர்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் ஏழைகள் பயன்படுத்துகின்ற மசாலாப் பொடிகளுக்கு 16 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைத்துள்ளீர்கள். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இந்த மசாலாப் பொடியைப் பயன்படுத்துவது தமிழகத்திலே உள்ள ஏழைகள், வறியவர்கள்தான். ஆகவே அந்த 4 சதவிகிதத்தை நீங்கள் நீக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். முத்திரை இருந்தாலும், முத்திரை இல்லாவிட்டாலும் அவற்றுக்கு நீங்கள் வரியே போடக்கூடாது இதை ஏழைகள் பயன்படுத்துகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் நீங்கள் வரியை நீக்க வேண்டும்.

அதேபோன்று அரசுப் பணியாளர்களுக்கு மத்தியிலே ஐந்தாவது ஊதியக் குழுவிலே அடிப்படை ஊதியத்தை உயர்த்தி வழங்கியுள்ளார்கள். இந்தியாவிலே எந்த மாநிலத்திலேயும் இன்னும் முழுமையாக ஊழியர்களுக்குத் திருத்திய ஊதியம் வழங்காத ஒரு சூழ்நிலையில், தென்னிந்தியாவிலே தமிழ்நாட்டில் மட்டும் நீங்கள் இந்த ஆண்டே அதாவது 1-1-1996-லிருந்து மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். நான் அதையும் வரவேற்கிறேன்.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கூட்டம் ஆரம்பித்து இப்பொழுதுதான் முதலில் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களைப் பேச அழைக்கும்போதே மாண்புமிகு பேரவைத் தலைவர் சொல்லிவிட்டுத்தான் சென்றார்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னார். நீங்கள் 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் பேரவை தலைவரை மீறி உங்களுக்குப் பேசுவதற்கு நேரம் தர முடியாது. ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மூடிய தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகள், சாயப் பட்டறைகள் என்று தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களில் தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. இங்கே சட்டமன்றத்திலே பல உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியிலே தொழிற்சாலைகள் மூடிக் கிடப்பதைப் பல நேரங்களில் எடுத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் மாசுக் கட்டுப்பாடு போன்ற பிரச்சினைகளால் சாயப் பட்டறைகள், தோல் தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன என்று நீங்கள் பதில் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இது ஒரு சமூகப் பிரச்சினை; சமுதாயப் பிரச்சினை; தொழிலாளர்களுடைய பிரச்சினை; ஏறத்தாழ 800 தொழிற்சாலைகள் மூடியிருக்கின்ற நிலையில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நீங்கள், தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திலே ஒரு மனுவைச் சமர்ப்பித்து, ஒரு காலக் கெடு நிர்ணயித்து 2 ஆண்டுகளில் அல்லது 3 ஆண்டுகளில் அனைத்து, தொழிற்சாலைகளுக்கும் அங்கே பாதுகாக்கப்பட்ட ஒரு நிலையை உருவாக்குகிறோம் என்ற உத்தரவாதம் தந்து, இந்தத் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கு நீங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் இந்த நேரத்தில் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. ரங்கநாதன்] [1998 மார்ச் 31

*முற்பகல் 11-30*

அதேபோல் சென்னை நகரில் கடந்த ஆண்டுகளில் பல தனியார் நிதி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, தமிழகம் எங்கும் பல்வேறு மாவட்டங்களில் தனியார் நிதி நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, சென்னை நகர மக்கள், மாவட்டத்திலுள்ள மக்கள் பல நூறு கோடி ரூபாயை அதிலே வைப்புத் தொகையாக டெபாசிட் செய்திருந்தார்கள். அந்த நிதி நிறுவனங்களை நடத்திய அந்த மோசடிப் பேர்வழிகள் அந்த டெபாசிட் தொகையைத் திரும்ப அந்த முதலீட்டாளர்களுக்குத் தரவில்லை. அதற்காக இந்தச் சட்டமன்றத்திலே நான் பிரச்சினை எழுப்பி, நீங்கள் நடவடிக்கை எடுத்து, அவர்களைக் காவல்துறையின் மூலமாகச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பினீர்கள். ஆனால் அந்த நிதி நிறுவனங்களுடைய உரிமையாளர்கள், அதிபர்கள் எல்லாம் சிறைச்சாலைகளிலிருந்து ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள். ஆனால் பொதுமக்கள் டெபாசிட் செய்த பணம் இதுநாள் வரையில் திரும்பக் கிடைக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் இந்த அவையிலேயே தனியார் நிதி நிறுவனங்களுக்கான அவசரச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறீர்கள். ஆனால் இதுநாள் வரையில் டெபாசிட் செய்த டெபாசிட்தாரர்களுக்குப் பணம் திரும்பக் கிடைக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்கள் மோசடியிலே ஈடுபட்டுப் பலரை மோசம் செய்த செய்தி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் இங்கே சொல்லப்பட்டது. அந்த நிறுவனங்கள் மீது எல்லாம், இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டு அப்படி மோசடி செய்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு, அவர்கள் ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள் என்றால் அதற்கு நாம் பொறுப்பு அல்ல. நீதிமன்றங்கள் அவர்களை ஜாமீனில் விடுவித்திருக்கின்றன. அந்த வழக்குகளை விசாரிப்பதற்காகத் தனி நீதிமன்றமே வேண்டுமென்று கேட்டு, இறுதியாக உயர்நீதிமன்றத்தினுடைய அனுமதி கிடைத்து, அந்த நீதிமன்றங்களும் நிறுவப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள் நிதானமாகத்தான் செயல்படும் என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் நீதியும் தாமதமாகச் சிலநேரங்களில் கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடுகிறது. அதற்கு நாம் பொறுப்பு அல்ல.



1998 மார்ச் 31] [கலைஞர் மு. கருணாநிதி]

நிதானமாகச் செயல்பட்டால்தான் சரியான நீதியை வழங்க முடியும் என்பது நீதிமன்றங்களுடைய கருத்தாகக்கூட இருக்கலாம். எனவே, அந்தச் சொத்துக்களை எல்லாம் பறிமுதல் செய்து, இழந்தவர்களுக்கு உடனடியாகத் தருவது என்பதுகூட அரசாங்கமே செய்துவிடக்கூடிய ஒன்று அல்ல. பழைய காலத்து ராஜ தர்பார்போல் அரசு உட்கார்ந்து கொண்டு அதை அவருக்குக் கொடு, இதை இவருக்குக் கொடு, என்று உத்தரவிட முடியாது. நீதிமன்றங்கள் இதையெல்லாம் விசாரித்து, அவர்கள் அதற்கான அனுமதியை வழங்கியதற்குப் பிறகுதான் இந்தச் சொத்துக்களைப் பறிமுதல் செய்து இழந்தவர்களுக்கு வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாகப் பல அரசுகள் இங்கே ஆட்சி செய்திருந்தாலும் முதன்முதலாக, இப்போதுதான், கிராமப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்குப் பொறியியல் கல்லூரிகளில் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு தரவேண்டும், தருகிறோம் என்ற உறுதியை அளித்து இருக்கிறார்கள். அதை மருத்துவக் கல்லூரிகளுக்கும் சேர்த்து வழங்கினால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாத் தொழில் கல்விகளுக்கும் உண்டு.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எல்லா ஆட்சியிலும் மின் வெட்டு உண்டு. குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டும்தான் மின் வெட்டு என்று சொல்ல முடியாது. எல்லா ஆட்சியிலும் உண்டு. ஆனால் இந்த மின் வெட்டைப் போக்குவதற்கு ஒரு தெளிவான முடிவு எதையும் எடுக்கவில்லை இதுவரைக்கும். காரணம் 1997-98-லே 2,280 மெகாவாட் மின்சார உற்பத்திக்கு ஓர் ஒப்பந்தம் செய்வது குறித்து கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே சொல்லியுள்ளார் முதல்வர். அதேபோல இந்த ஆண்டு, 1998-99-லே 5,792 மெகாவாட் மின் உற்பத்திக்குத் தனியார் மின் நிறுவனங்களுடன் மின்சார ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இதிலே எத்தனை ஒப்பந்தங்களுக்கு மத்திய அரசு சி.ஈ.ஏ.

[திரு. ப. ரங்கநாதன்] [1998 மார்ச் 31

கிளியரன்ஸ் கொடுத்திருக்கிறது? அதேபோல், நீங்கள்—மாநில அரசு—Power puchase agreement எத்தனை நிறுவனங்களோடு ஒப்பந்தம் செய்து இருக்கிறீர்கள் என்று தெளிவாக அதிலே சொல்லவே இல்லை. அதுவொரு பெரிய குறைபாடுதான்.

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது மாண்புமிகு முதல்வரவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மெகாவாட் மின்சார உற்பத்திக்கு நாம் P.P.A.—Power purhase agreement - செய்துவிட்டோம். இதிலே பெரும்பாலும் சி.ஈ.ஏ. ஒப்புதலுக்காகவும் அனுப்பப்பட்டு, 3, 4 நிறுவனங்கள் ஒப்புதல் பெற்றிருக்கின்றன. இவைகளெல்லாம் 1993 ஆம் ஆண்டு எம்.ஓ.யூ. செய்யப்பட்ட திட்டங்கள். இப்பொழுதுதான் இந்த ஆட்சியிலே, கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக மறுபடியும் அந்த நிறுவனங்களையெல்லாம் அழைத்துப் பேசி இப்பொழுது அவர்கள் புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டு அனுமதி பெற்றிருக்கிறார்கள். அவர்கள் விரைவிலே தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே ஒன்று ஜி.எம்.ஆர். வாசு என்ற நிறுவனம். அவர்கள் ஒப்பந்தம் செய்து தொழிற்சாலையும் ஆரம்பித்து அடுத்த ஜனவரி மாதத்திலே 200 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். படிப்படியாக இந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மெகாவாட் மின்சாரம் 2001-க்குள் வந்துவிடும். ஏற்கெனவே குறிப்பிட்ட 2200 மெகாவாட் மின்சாரம், கடந்த ஆண்டு சொன்னீர்களே, என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். இருபது இடங்களிலே டிட்கோ மூலமாக ஒப்பந்தமெல்லாம் கோரப்பட்டு தமிழக அரசு இருபது இடங்களிலே மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று திட்டமிட்டு மத்திய அரசாங்கம் 800 மெகாவாட்டுக்குத்தான் நாப்தா வழங்கிய காரணத்தினாலே அந்தத் திட்டங்களிலே—5 திட்டங்கள், அதிலே 800 மெகாவாட் கொடுக்கப்பட்டு அதிலே—5 திட்டங்கள் தனியார்த் திட்டங்கள் இன்றையதினம் பணிகள் தொடங்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. அவர்கள் 21 மாதங்களிலே பணிகளை முடித்து மின்சாரத்தை நமக்கு வழங்குவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ. சு. திருவேங்கடம்.

**திரு. ப. ரங்கநாதன்:** தலைவரவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தைவிட அதிகமாகப் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 17 நிமிடங்கள் ஆகி விட்டன. ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இன்னும் 3 நிமிடங்களிலே உரையை முடித்து விடுகிறேன் சார். தமிழகத்திலே பிப்ரவரி மாதம் 14 ஆம் தேதி கோவையில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் பற்றி நமது ஆளுநர் உரையிலேயே தெரிவித்து உள்ளீர்கள். அதைத் தொடர்ந்து 17 ஆம் தேதி கோடம்பாக்கம் மசூதித் தெருவிலே வெடிகுண்டுகளோடு ஒரு பெண்தீவிரவாதி உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் தந்த தகவல்கள் பேரில் புளியந்தோப்பில் பிலால் என்பவருடைய வீட்டின் கிணற்றிலிருந்து 100 கிலோ வெடிகுண்டு கைப்பற்றப்பட்டுள்ளது. அதிலே பல்வேறு வகையான வெடிகுண்டுகள், டிபன் பாக்ஸ் வெடிகுண்டு, சூழாய் வெடிகுண்டு, மோட்டார் சைக்கிள் பக்கத்திலே அந்த பாக்ஸ் வெடிகுண்டு, பெட்டி வெடிகுண்டு என்று பல்வேறு வகையான வெடிகுண்டுகள்; அவர்கள் கொடுத்த தகவல்கள் பேரில் பெண் தீவிரவாதி ஆயிஷாவும், அவருடைய கணவன் முகமது இப்ராகிமும் எம்.எம்.டி.ஏ. காலனி பக்கத்திலே இருக்கின்ற அரும்பாக்கத்திலே தங்கியிருக்கிறார்கள் என்று ஒரு தகவல் வருகிறது. அந்தத் தகவலின்பேரில் என்றல்ல — அந்தத் தகவல் வருவதற்கு முன்பே, அதாவது 17 ஆம் தேதி, கோடம்பாக்கத்தில் பிடித்தார்கள். கோடம்பாக்கத்தில் பிடித்தவுடன், சென்னை நகரக் காவல்துறையினுடைய ஆணையாளரும், அரசும், மாண்புமிகு முதலமைச்சரவர்களும், இந்த வெடிகுண்டுகள் சென்னை நகரில் எங்கெங்கே இருக்கின்றன, எந்தெந்தப் பகுதிகளில் இருக்கின்றன என்று அறிந்து நீங்கள் உடனடியாக அவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டதன் காரணமாக, காவல்துறை முனைப்போடு செயல்பட்டு, இந்த ஆயிஷாவினுடைய படத்தையும், இப்ராகிமினுடைய படத்தையும் வீதி வீதியாக, அனைத்துப் பகுதிகளிலும் ஊர்வலமாக எடுத்துச் சென்று தண்டோரா போட்டு

விளம்பரப்படுத்தினார்கள். தொலைக்காட்சியிலே விளம்பரப் படுத்தினார்கள், பத்திரிகையிலே விளம்பரப்படுத்தினார்கள்.

முற்பகல் 11-40

இப்பேர்ப்பட்ட நபர்களை அதாவது ஆயிஷா போட்டோவை, இப்ராகிம் போட்டோவைக் காண்பித்து இவர்களை—நீங்கள் எங்கு பார்த்தாலும், யார் பார்த்தாலும் உடனடியாகக் காவல் துறைக்குத் தகவல் தர வேண்டுமென்று காவல் துறையினுடைய தொலைபேசி எண்களையும் வெளியிட்டார்கள். இவ்வளவு தகவல்கள் தந்தபின்பு, ஆயிஷாவிற்கும், முகமது இப்ராகிமிற்கும் முத்து என்ற புரோக்கர் மூலமாக அரும்பாக்கத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவி, புரட்சித் தலைவியினுடைய பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்த இயக்கத்தின் 66-வது வட்டத்தினுடைய புரட்சித் தலைவி பேரவையினுடைய செயலாளர், திருமதி பாத்திமா பீவி அவர்கள் தன்னுடைய வீட்டிலே வாடகைக்கு அந்தப் பயங்கர, கொடிய தீவிரவாதிகளுக்கு வீட்டை விட்டிருக்கிறார்கள். அப்படி வீட்டை வாடகைக்கு விட்டது மட்டுமல்லாமல் ஆயிஷா, இப்ராகிம், அவர்களோடு மேலப்பாளையத்தைச் சேர்ந்த தீவிரவாதி அப்துல்லா மற்றும் பல நபர்களான அப்துல் அலீஸ், உஷா, ஜகான், சையத்மீரான், சபீர், ஏர்வாடி காசிம், ஜாகிர் உசேன் ஆகிய இவர்கள் அனைவருமே பாத்திமா பீவி வீட்டில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் தங்கிய பின்பும்....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா நகர் சரகத்தைச் சேர்ந்த காவல் துறையினர் அந்த வீதியிலே, அந்த வீட்டின் அருகிலே ஆயிஷாவினுடைய போட்டோவையும், இப்ராகிமினுடைய போட்டோவையும் ஊர்வலமாக எடுத்துச் சென்று இப்பேர்ப்பட்ட நபர்கள், பயங்கரவாதிகள் தங்கியிருக்கிறார்களா என்று ஒவ்வொரு வீட்டிலும் அந்தப் படத்தைக் காண்பித்துக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், நல்லவர்களாக இருந்தால்,



மனிதநேயத்தின் மீது நம்பிக்கை வைத்திருந்தால், தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஒரு பிரச்சினை உருவாகியிருக்கிறது, நாம் அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் அவர்களுக்கு உருவாகியிருந்தால், உடனடியாகக் காவல் துறைக்கு தகவல் தந்திருக்கலாம். என்னுடைய பெயரைச் சொல்லாதீர்கள் நான் சொன்னேன் என்று வெளியே சொல்லாதீர்கள் என்று சொல்லியும் சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்யாமல், அந்தத் தீவிரவாதிகளுடன் மேலப்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் உடன் இருந்ததால்—பாத்திமா பீவியினுடைய கணவர் மேலப்பாளையத்தைச் சேர்ந்தவர்—அவர்களோடு பேசி, அவர்களை மிரட்டி நாங்கள் காவல் நிலையத்திலே சொல்லிவிடுவோம், போலீசுக்குத் தகவல் கொடுப்போம் என்று சொல்லி, நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவள், ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவள் என்று பயமுறுத்தி, பல இலட்சங்கள் கையூட்டாகப் பெற்றிருக்கிறார்கள். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், தவறு செய்தவர்கள் என்று தெரிந்தபின்பு காவல்துறை அவர்களைக் கைது செய்திருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பதில் சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவர், பொறுப்பிலே இருக்கிறார்கள் என்று அவர்கள் எதற்காகச் சொல்லியிருக்கிறார்கள், அவர்களுடைய தரத்தைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்கள். எப்பொழுதுமே, சாதாரணமாக நீதிமன்றங்களிலேகூட ஒரு சட்டமன்ற உறுப்பினர் வேறு வழக்குக்காகச் சென்றாலும், அங்கேயிருக்கின்ற பத்திரிகையாளர்கள் போட்டுவிடுவார்கள், இந்தச் சட்டமன்ற உறுப்பினர் நீதிமன்றத்திற்கு வந்தார் என்று. எதற்காகப் போடுகிறார்கள்? ஒரு முக்கியப் புள்ளி; அதனால் பத்திரிகையிலே போடுகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று அவருடைய பெயரைப் போட்டார்களேயொழிய வேறல்ல. மசூதித் தெருவிலே பிடித்தபோது அந்த வீட்டு உரிமையாளரைக் காவல்துறை அழைக்கவில்லை. முன்கூட்டியே காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்து விட்டார்கள். புளியந்தோப்பிலே மஸ்தான் என்பவர் என்

[திரு. ப. ரங்கநாதன்] [1998 மார்ச் 31

வீடு பூட்டிக் கிடக்கிறது என்று காவல் துறைக்குத் தகவல் கொடுத்ததால் அவரை அழைத்துக்கூட விசாரிக்கவில்லை. அதேபோன்று புளியந்தோப்பு பி.1. போலீஸ் ஸ்டேஷன் பின்னால் இரண்டு வீடுகளில் சோதனை போட்டார்கள். அங்கே வெடிகுண்டு எடுத்தார்கள். அந்த வீட்டு உரிமையாளர்களை அழைக்கவில்லை. பாத்திமா பீவி அந்த பயங்கரவாதிகளுக்கு வீடு வாடகைக்கு விட்டது மட்டுமல்ல, அவர்களை மிரட்டி மிகப் பெரிய தொகையைக் கையூட்டாகப் பெற்றிருக்கிறார். அந்தக் குற்றத்திற்காகத்தான் அவர்மீது வழக்குப் போட்டிருக்கிறார்களேயொழிய வேண்டுமென்றே வழக்குப் போடவில்லை. இதையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது 14 ஆம் தேதி நடந்த சம்பவத்திற்கும் அண்ணா தி.மு.க.விற்கும் தொடர்பு இருக்குமோ என்று ஓர் அச்சம் ஏற்படுகிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் கட்சி சார்பிலே பேசும்போது பதில் சொல்லுங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். உங்களுக்குத்தான் அவ்வப்போது பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறோமே உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதை allow பண்ண முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனுமதிப்பது என்னுடைய வேலை. நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் சி.பி.ஐ. விசாரணை தேவையென்று கேட்டுள்ளார்கள். இந்த அவையிலேயே—1993 என்று நினைக்கின்றேன்-முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள், நாங்கள் விஜயன் தாக்கப்பட்ட வழக்கில் சி.பி.ஐ. விசாரணை தேவையென்று கேட்டோம்....



1998 மார்ச் 31]

முற்பகல் 11-45

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி. ஆர். சுந்தரம், ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது, அதற்கு இடையூறாக நீங்கள் எழுந்து நிற்கக்கூடாது. இருவரும் உட்காருங்கள். உங்களுடைய வாய்ப்பு வரும்போது பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கும் வாய்ப்புத் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பின்னர் வாய்ப்புத் தருகிறேன். இப்போது இருவரும் உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்திலே, பேரவைத் துணைத் தலைவராக இருக்கின்ற திரு. பரிதி அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்தார்கள். விஜயன் தாக்கப்பட்ட வழக்கில் எங்களோடு சேர்ந்து சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று கேட்டார். அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, இன்றைக்கு எதிர்க்கட்சியின் தலைவியாக உள்ள ஜெயலலிதா அவர்கள், 'சி.பி.ஐ. என்ன வானத்திலிருந்து குதித்தவர்களா' என்று சொன்னார். இன்றைக்கு சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்று கேட்கின்றார். முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகின்ற முன்னாள் முதலமைச்சர், இன்றைக்கு அவருடைய கட்சியைச் சேர்ந்த, முக்கியப் பொறுப்பிலே இருப்பவர் கைது செய்யப்பட்டார் என்றவுடன் பதறுகிறார். ஆனால், இதையெல்லாம் வைத்துப் பார்க்கின்றபோது

(மணியடிக்கப்பெற்றது.) இந்த வெடிகுண்டுகள் கண்டுபிடித்த சம்பவத்திற்கும், தேர்தல் நடப்பதற்கு முன்பு நடந்த வெடிகுண்டு சம்பவத்திற்கும், பல்வேறு இடங்களிலே வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவங்களுக்கும் அவருக்கும் ஒரு தொடர்பு இருக்குமோ என்ற ஐயப்பாடு பொதுமக்கள் மத்தியிலே பேசப்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நம்முடைய காவல்துறையை முடுக்கிவிட்டு, இதற்குப் பின்னால் இருக்கின்ற, இவர்களை ஊக்கப்படுத்துகின்ற சக்திகளை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. பெ. சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பதில் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி, பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பது எங்களுடைய இயக்கம் கிடையாது. தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுப்பது இந்த அரசு என்பது எல்லா மக்களுக்கும், எல்லோருக்குமே தெரியும். (குறுக்கீடுகள்) இருங்கள், என்னைப் பேச விடமாட்டேன் என்கிறீர்களே? உள்ளதைத்தான் சொல்கிறேன். தீவிரவாதிகளைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு செயல்படவேண்டுமே தவிர தீவிரவாதிகளை அந்தக் கட்சி, இந்தக் கட்சி என்று சொல்லுவது கூடாது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, அவர் என்ன சொன்னார்? அவர் சொன்னது........

**திரு. இரா. தாமரைக்கனி:** நானும் அதைத்தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொன்னது, அடைக்கலம் கொடுத்தவர்கள் எல்லாம் ஏற்கெனவே இதுபோன்று என்று சந்தேகப்பட்டு முன்கூட்டியே இப்படி இருக்கலாமோ போலீசுக்குத் தெரிவித்தார்கள். ஆனால் இந்தச் சம்பவத்தில், ஃபாத்திமா பீவி போலீசுக்குத் தகவல் தெரிவிக்காமலே உள்ளார் என்பதுதான் அவருடைய குற்றச்சாட்டு. அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முஸ்லிம் வந்து கேட்டார் அவர்கள் வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். எல்லாப் பகுதியிலே என்று வாடகைக்கு விட்டிருக்கிறார். தெரிந்து வைத்துக் கொள்ளும் வாய்ப்பு உள்ளவர்களைப் பற்றியும் எல்லோரையும் இல்லை. அந்த மாதிரி வாடகைக்கு விட்டவர்கள் பிடித்து விட்டீர்களா? அரசியல் சாயம் பூச வேண்டும் என்பதற்காக— நீங்கள் தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுத்து விட்டு, உங்கள் ஆட்சி நடப்பதால்—எங்கள் மேலே பழி சொல்வதற்காக இப்படிச் சொல்கிறீர்கள். இந்த ஆயிஷா யார்? அவருடைய அண்ணன் தி.மு.க. நகரச் செயலாளர், பெயர் உதயசூரியன். அவருடைய பாரம்பரியமே தி.மு.க. அவர்கள் எங்கள் தொகுதிதான். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, மம்சாபுரம்தான். தீவிரவாதிகளுக்கு ஊக்கம் கொடுப்பது, ஆதரவு கொடுப்பது இந்த ஆட்சிதான் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதையாவது ஒன்றைச் சொல்லி அதைப் பதிய வைத்து, பத்திரிகைகளிலே அது எப்படியும் வந்துவிட வேண்டும் என்பதற்காக நம்முடைய நண்பர் திரு. தாமரைக்கனி அவர்கள் இதுபோன்ற குறுக்கீடுகளில் ஈடுபடுவது அவருக்கு வாடிக்கை. அதைத்தான் இன்றைக்கும் செய்து கொண்டிருக்கின்றார். தீவிரவாதிகளுக்கு இந்த அரசுதான் ஆதரவு கொடுக்கிறது என்று குறிப்பிடுகிறார். தீவிரவாதிகளுக்கு இந்த அரசு ஆதரவு கொடுக்காது. ஏறத்தாழ 60-க்கும் மேற்பட்டவர்கள் இந்த கோவை குண்டுவெடிப்புச்

சம்பவத்தின் தொடர்பாகக் கைது செய்யப் பட்டிருக்கின்றார்கள். இங்கு மாத்திரமல்ல, வேறு மாநிலங்களுக்குச் சென்றுகூட அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களால் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற வெடிகுண்டுகள் எல்லாம் கைப்பற்றப்படுகின்றன. அந்த அளவிற்கு இன்றைக்குத் தனியாகவே ஒரு ஐ.ஜி. அதற்காக அமர்த்தப்பட்டு மிகத் தீவிரமாக அந்தக் குற்றவாளிகள் வேட்டையாடப்பட்டு வருகின்றார்கள். இதற்குப் பிறகும் தீவிரவாதிகளுக்கு இந்த அரசு ஆதரவு தருகிறது என்று கூறுவது மிக மிக வன்மையாக மறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க ஒன்றாகும் என்று நான் குறிப்பிடுகின்றேன்.

மற்றொன்றையும் கூற விரும்புகின்றேன். நம்முடைய நண்பர் திரு. ரங்கநாதன் அவர்கள் இங்கே பேசும்போது ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார்கள். தீவிரவாதிகளுக்கு எந்தவொரு கட்சியும், எந்தவோர் இயக்கமும் ஆதரவு தரக்கூடாது என்பதுதான், நாம் அனைவரும் பொதுவாக ஏற்றுக்கொள்ள வேண்டிய பண்பாடாக, அமைதியை நிலைநாட்ட விரும்புகின்றவர்களுடைய கொள்கையாக இருக்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலே யாராவது நம்முடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அதிலே ஈடுபடுவார்களேயானால், அந்த இயக்கத்திலிருந்து விலக்கப்படுகிறார்; நீக்கப்படுகிறார்; அப்படிச் செய்து அவருக்கும் இந்த இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிக்கை விடுவதுதான் சிறப்பாக இருக்க முடியும்.

*முற்பகல் 11-50*

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றை நீங்கள் பார்த்தீர்களானால், இதுபோன்ற தீவிரவாதிகள் சிலபேர், திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்துகூட, இந்தக் காரியங்களிலே செயல்படும்போது அவர்களுடைய தொடர்பை அறுத்துக் கொள்கின்ற வகையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கட்சியினுடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் அறிக்கை விடுத்தது ஏடுகளிலே வெளிவந்திருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினைகளில்கூட, விடுதலைப் புலிகள் பிரச்சினையில்கூட, கழகத்தினுடைய கட்டுப்பாட்டை மீறி நடந்து கொண்டவர்களைப் பற்றி எச்சரித்து, அவர்களுக்கும் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றெல்லாம் கூட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, இப்பொழுதும் பாத்திமா பீவி விவகாரத்தில் அவர்கள் இந்த வெடிகுண்டு தொடர்பாகக் கைது



செய்யப்பட்டிருக்கிறார்கள் அல்லது வெடிகுண்டு வீசுகின்றவர்கள், வெடிகுண்டு வைத்திருப்போருக்கு அடைக்கலம் தந்தார்கள் என்று கைது செய்யப்பட்டிருக்கும்போது, அந்தக் கட்சியினுடைய தலைமை, அவர்கள் மீது கட்சிபூர்வமாக நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கும், கட்சிக்கும் தொடர்பில்லை என்று அறிவித்திருப்பார்களானால், அதைப் பாராட்டி நானும்கூட வரவேற்றிருப்பேன்.

அதைவிடுத்து, வேறுவிதமாக, அறிக்கை விடுத்து, திராவிட முன்னேற்றக் கழகம்தான் தேச விரோதிகளை அல்லது இப்படிப்பட்ட தீவிரவாதிகளை ஊக்கப்படுத்துகிறது என்று இலாவணி பாடுவது நல்லதல்ல. திரு. தாமரைக்கனிகூட ஆயிஷா குடும்பத்தைப் பற்றிச் சொன்னார். உண்மைதான். ஆனால், அந்தக் குடும்பத்தையும் போலீஸார் கண்டு விசாரித்திருக்கிறார்கள். விசாரித்தபொழுது, அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், ஆயிஷா இந்துப் பெண்; இந்துப் பெண்ணாக இருந்தவர், முஸ்லிம் வாலிபனைக் காதலித்து, அவரோடு சென்று முஸ்லிமாக மாறிவிட்டார். அதற்குப் பிறகு, ஆயிஷாவுக்கும் இந்த வீட்டுக்கும் தொடர்பில்லை என்று நாங்கள் விரட்டிவிட்டோம், அவர் திரும்பி வந்தால் வெட்டிவிடுவோம் என்கிற அளவுக்கு போலீஸாரிடத்திலே அவர்கள் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். பத்திரிகை நிருபர்கள் சென்று விசாரித்தபோதும் அவர்களிடத்திலும் அதைச் சொல்லியிருக்கிறார்கள். ஏடுகளிலும் வெளி வந்திருக்கிறது.

எனவே, இதையெல்லாம் தொடர்புபடுத்தி, இந்த ஆட்சிக்கும் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு உண்டு என்று கற்பனை செய்வது நல்லதல்ல. தீவிரவாதி எந்த இயக்கத்தில் இருந்தாலும் இயக்கத்தினுடைய தலைவர்கள் அவர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், அவர்களுக்கும் எங்கள் இயக்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இப்படி எல்லோரும் கூடி, தமிழகத்திலே அமைதியை நிலைநாட்டுவதுதான் சாலச் சிறப்புடையதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம், (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி, உட்காருங்கள், விளக்கம் கொடுத்தாகி விட்டது. நான் திரு. பெ.சு. திருவேங்கடத்தைப் பேச அழைக்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

[1998 மார்ச் 31

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள், அப்படியெல்லாம் உள்நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது, முதலில் உட்காருங்கள். ஏற்கெனவே நேரம் அதிகம் ஆகிவிட்டது. இன்னும் 9 பேர் பேச வேண்டும், திரு. பெ. சு. திருவேங்கடம், நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடு) திரு. பி. ஆர். சுந்தரம், நீங்கள் உட்காருங்கள், இரண்டு பேருக்கும் சேர்த்துத்தான் சொல்கிறேன். உட்காருங்கள், தனித்தனியாகச் சொல்ல முடியாது. உட்காருங்கள். திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். திரு. தாமரைக்கனி பேசுவது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது. உட்காருங்கள், உட்காருமாறு உத்தரவிடுகிறேன். அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, நீங்கள் ** என்றெல்லாம் ** பேசக் கூடாது. மூத்த உறுப்பினர் நீங்கள், கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். (குறுக்கீடு) திரு. பி. ஆர். சுந்தரம், உங்கள் சார்பில் திரு. தாமரைக்கனி அவர்கள் பேசிவிட்டார்கள். நீங்கள் இருவரும் உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** திரு. ரங்கநாதன் அவர்கள் பேசும்போது வாய்ப்புக் கேட்டிருந்தேன். Point of order கேட்டிருந்தேன். தருவதாகச் சொன்னீர்கள். வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம் உங்கள் சார்பில் உங்கள் கட்சித் தலைவர் பேசிவிட்டார். உட்காருங்கள். (திரு. பி.ஆர். சுந்தரம் தொடர்ந்து நின்று பேசிக்கொண்டிருந்தார்) திரு. சுந்தரம் பேசுவது எதுவும் அவைக் குறிப்பிலே ஏறாது, தயவுசெய்து உட்காருங்கள், இல்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். தயவுசெய்து உட்காருங்கள். நீங்கள் பொது விவாதத்தில் பேசப் போகிறீர்கள்; அப்போது பேசலாம். உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் ஒருவர் பேசும்போது ஒரே கட்சியைச் சேர்ந்த இரண்டு பேரோ அல்லது மூன்று பேரோ எழுந்து நின்று Point of order என்ற பெயரில் விளக்கங்கள் கேட்க முற்பட்ட நேரத்தில் அந்தக் கட்சியினுடைய தலைவர் ஒருவரை நீங்கள் அழைத்து விளக்கம் கேட்க அனுமதித்திருக்கிறீர்கள். அவரும் சொல்லியிருக்கிறார். அவர்கூட இந்த ஆட்சியின் மீது ஒரு பழி சுமத்தினார். அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கமான பதிலைத் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும், இந்த அவையிலே யார் பேசினாலும் அதைக் கேள்வி கேட்கக்கூடிய ஒரே உறுப்பினர் திரு. சுந்தரம் தான் என்பது போன்ற ஒரு கருத்தை திரு. சுந்தரம் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருப்பது இந்த அவைக்கு ஏற்றதல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை வேண்டுமென்பதை நான் வலியுறுத்துகிறேன்.

முற்பகல் 11-55

***திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசினுடைய 1998-99 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, இப்போது நடைபெறுகின்ற இந்த பொது விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், நம்முடைய கலைஞர் அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் 4-வது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று 10-வது முறையாக நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்தில் நம்முடைய தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்ற வகையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை அவர்களுடைய பணிக் காலத்திலே செய்திருக்கிறார்கள். நான் ஒன்றிரண்டை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் தென்மாநிலங்களிலேயே நம்முடைய மாநில அரசு ஊழியர்களுக்கு முதன்முதலாக வழங்கி இருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள்

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [1998 மார்ச் 31

பயன்பெறுகின்ற வகையில் குடிசை மாற்று வாரியத்தை ஏற்படுத்தி ஏழையெளிய மக்களுக்கு நிரந்தரக் குடியிருப்புக்களைத் தந்திருக்கிறார்கள். அதேபோன்று இந்தியாவிலேயே முதன்முதலாக கிராமங்களில் ஆதிதிராவிட மக்களுக்காக தொகுப்பு வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். அந்த வீடுகள் பழுதடைந்திருந்தாலோ அல்லது சென்ற காலங்களிலே ஓட்டு வீடுகளாகக் கட்டப்பட்டு இருந்தாலும், அறவே அவைகளை நீக்கி, நிரந்தரமாக கான்கிரீட் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி, அவர்களைக் காப்பாற்றி வருகின்றார்கள். நெசவாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டம். எவ்வளவு பேர் தகுதி இருந்து, திருமண உதவித் திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கின்றார்களோ, அந்த ஏழையெளிய மக்கள் பயன் பெறுகின்ற வகையில், எல்லோருக்கும் உதவி கிடைக்கின்ற வகையில், தாயுள்ளத்தோடு அதிக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள்.

10,000 சாலைப் பணியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள், சீனியாரிட்டி அடிப்படையில் ஆசிரியர்கள் நியமனம், கிராமங்களில் படிக்கின்ற மாணவர்களுக்குத் தொழிற் கல்லூரிகளில் 15 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்து முன்னுரிமை, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக போராடி, அதிலே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு சார்பிலே நிதி உதவி, 1 முதல் 5-வது வகுப்பு வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குகின்ற பணி, தாய்மார்கள் மகிழ்கின்ற அளவில் அனைத்துச் சமையல் எண்ணெய்களுக்கும் வரி விலக்கு. தமிழ்நாட்டிலே பாடசாலை இல்லை என்ற இடமே இருக்கக்கூடாது என்ற வகையில் 300 தொடக்கப் பாடசாலைகள் தொடங்குகின்ற பணி, வாரந்தோறும் ஏழைக் குழந்தைகளுக்கு முட்டை அளிக்கின்ற திட்டம், 1,000 மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள், முதியோர் உதவித் தொகை 100-லிருந்து 150 ரூபாயாக உயர்த்தி வழங்கும் திட்டம், தியாகிகளுக்கும், மொழிப்போர்த் தியாகிகளுக்கும் பென்ஷன் வழங்கும் திட்டம், இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட, இந்தியாவிலேயே நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முன்னதாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பென்ஷன் வழங்குகின்ற திட்டம்—இதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் அறிமுகப்படுத்தினார்கள். இவைகளையெல்லாம் வைத்து நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவில் இருக்கின்ற



1998 மார்ச் 31] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 'சூப்பர் ஸ்டாராக' விளங்கி வருகிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

அதேபோல, இலவச வேட்டி சேலைத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே முதல்வர் அவர்களைப் பணிவன்பாக வேண்டிக் கேட்டுக்கொள்வது, சென்ற ஆட்சிபோல் இல்லாமல், ஊழல் இல்லாமல், 8 முழ வேட்டி, 16 முழப் புடவை என்கின்ற வகையிலே நீங்கள் அளிக்கின்றீர்கள். ஆனால், கிராம நிர்வாக அதிகாரிகள், வருவாய்த் துறை அதிகாரிகளுடைய பூரண ஒத்துழைப்பு இல்லாமையினால், இந்தத் திட்டத்தை நீங்கள் 1989-90-லே முதல்வராக இருந்த நேரத்தில் நிறைவேற்றியதைப்போல் சரியான முறையில் நிறைவேற்ற முடியாத ஒரு சூழ்நிலை, இந்த இரண்டு ஆண்டு காலமாக இருந்து வருகிறது. அதிலும் நீங்கள் தனிக் கவனம் செலுத்தி, எல்லா ஏழையெளிய மக்களும் பயன்பெறுகின்ற வகையிலே, அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் நான் பணிவன்போடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, மின் திட்டம். இன்றையதினம் மின் பற்றாக்குறை இருக்கிறது. இதுவரையிலேயும் இந்த மாநிலம் மின் பற்றாக்குறை மாநிலமாகத்தான் இருந்து வந்துள்ளது. அதுவும் இதுபோன்ற கோடை காலங்களில் மின் பற்றாக்குறை ஏற்படுவது இயற்கை. அதற்காக அரசோ அல்லது மின்துறை அமைச்சரோ வெகுவாக வருத்தப்பட்டு, உடனடியாக நிவர்த்தி செய்யக்கூடிய காரியம் அல்ல. நான் இந்த நேரத்திலே அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். முன்னாள் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள், ஆட்சியிலே இருந்த காலத்தில், ஒரு காலக் கட்டத்திலே, தொழிலுக்கு 90 சதவிகிதம் மின்வெட்டைக் கொண்டுவந்து விவசாயத்திற்கு மின்சாரத்தைத் தந்தார்கள். தொழிலை ஷிப்ட் முறையிலே எப்பொழுது வேண்டுமானாலும் செய்து, நாம் உற்பத்தி செய்து கொள்ளலாம். ஆனால், விவசாயத்தைப் பொறுத்தவரையில் காலத்தே பயிர் செய்தாக வேண்டும்; அந்த வகையிலே நம்முடைய அரசு இதிலே வெட்கப்படாமல் தேவையான அளவிற்கு மின்வெட்டைக் கொண்டுவந்து, விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [1998 மார்ச் 31

அதேபோன்று, எங்கள் பகுதியில் மட்டுமல்ல — இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சியிலே இருக்கின்ற தோழமைக் கட்சியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் சொன்னார்கள் — விவசாயிகள் இன்றையதினம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு மழை பெய்தாலும் கஷ்டம், வறட்சி வந்தாலும் கஷ்டம். இப்படி எந்த நேரத்திலும், எந்த ஆண்டாக இருந்தாலும், விவசாயிகள் ஏதாவதொரு கஷ்டத்திலே சிக்கிக் கொண்டு அவதிப்படுகின்ற நிலை இன்றையதினம் நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையில், இன்றையதினம் அதிகமான அளவில் நெல் உற்பத்தி ஆகியிருக்கிறது. ஆனால், விலை இல்லை. ஆனால், நீங்கள் தாயுள்ளத்தோடு அதனை அரசாங்கம் மூலம் வாங்குகிறீர்கள். அதை நான் மறுக்கவில்லை. எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பத்திரிகைகளெல்லாம் குற்றம் சாட்டி கோணிப்பை இல்லை, இடமில்லை, அரசாங்கம் நெல் வாங்குகிறது என்று சொன்னதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே ஆணித்தரமாக சொன்னார்கள், அரசாங்கம் வியாபாரம் செய்யவில்லை; விவசாயிகளைக் காப்பாற்றுவதற்காக, நஷ்டம் ஏற்பட்டாலும், இடமில்லை என்றாலும், கோணிப்பை இல்லையென்றாலும் அந்த நெல்லை அரசாங்கம் வாங்குகிறது என்று. அதற்காக விவசாயிகளின் சார்பிலே இந்த நேரத்தில் அரசுக்கும் உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, எங்கள் பகுதியிலே திடீரென்று... (மணியடிக்கப்பெற்றது) விவசாயிகளுடைய பிரச்சினை; ஒரு நிமிடம் கொடுங்கள். தொகுதி பற்றிய பிரச்சினை; ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். அதேபோல இன்றையதினம், கரும்பு ஆலை ஆடினால், ஐந்தாயிரம் ரூபாய் டெபாசிட் கட்ட வேண்டும்; ஒரு யூனிட்டிற்கு ஐந்து ரூபாய் பணம் செலுத்த வேண்டுமென்று திடீரென்று நம்முடைய மின் வாரியம் ஒரு திட்டத்தைப் போட்டிருக்கிறது. அதுபற்றி மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களும் அறிவார்கள். அதை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு நாம் இலவசமாக மின்சாரம் தருகிறோம். அந்த மின்சாரத்தை விளக்குகளுக்கு அவர்கள்



1998 மார்ச் 31] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பயன்படுத்துகிறார்கள். அதை மின்சார வாரியம் கண்டுகொள்வது இல்லை. ஆனால், இலவச மின்சாரத்தை விவசாயப் பம்பு செட்டுகளுக்கு வாங்கி அந்த மின்சாரத்தையே கரும்பை வெல்லமாக மாற்றுவதற்குரிய தொழிலைச் செய்வதற்கும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்று சொன்னால், இலவசமாகக் கொடுக்கின்ற மின்சாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாக அர்த்தமாகிவிடும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பிச்சாண்டி அவர்கள், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், இவர்களெல்லாம் "இப்பொழுது சர்க்கரை ஆலைகளிலே கரும்பை எடுக்காத காரணத்தினால், கரும்பை வெல்லமாக மாற்றுவதற்கு இந்த ஆலைகளைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே, அதற்கு மின்சாரம் தேவைப்படுகிறது" என்று கோரிக்கை விடுத்தார்கள். அதனை மின்சார வாரியத்திடம் தெரிவித்து, நீங்கள் அவர்களிடத்திலே ஐந்தாயிரம் ரூபாய் வற்புறுத்திக் கேட்க வேண்டாம்; அதை ஒரு tariff மூலமாக, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ரூ.500 டெபாசிட் செய்து, ஒரு யூனிட்டுக்கு ஒரு ரூபாய் 25 காசு கொடுப்பது என்று இருந்தால்தான், அந்த வசதிகளை விவசாயிகளுக்குச் செய்து தரலாம் என்று அரசாங்கம் யோசனை சொல்லி, இப்போது முடிவெடுக்கக்கூடிய சூழ்நிலையிலே இருக்கிறது. எனவே, எல்லாம் இலவசம் என்பதற்குப் பதிலாக, விவசாயிகள், மின்சார இலாகாவிற்கு ஏற்பட்டிருக்கிற இழப்பையும் கருத்திலே கொண்டு, ஒரு யூனிட்டுக்கு ஒன்றேகால் ரூபாய் கொடுத்து, 500 ரூபாய் முன்பணம் கட்டினால் "temporary supply" கரும்பு ஆலைகளுக்காக இணைப்புத் தரப்படும். அதைப் பயன்படுத்திக் கொண்டு, விவசாயிகள் கரும்பு ஆலைகளைப் பயன்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்..

*பிற்பகல் 12-05*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை, உட்காருங்கள். விவாதம் நீடித்துக் கொண்டே போகும். திரு. பெ. சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் அதிகமாக விளைந்தால்....

24452.

[1998 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுகிற உறுப்பினருக்கும், பேரவைத் தலைவருக்கும் இடையே யாரும் குறுக்கே வந்துவந்து போகக்கூடாது. திரு. திருவேங்கடம், நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்கள் நான் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும். விரைவாகப் பேசி முடித்துவிடுகிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மின் விநியோகத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நான் மின்துறை அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெல் அதிகமாக விளைந்தால், நுகர்பொருள் இலாகா மூலமாக வாங்கிக்கூட, வெளி மாநிலங்களுக்கு அனுப்பலாம்.

நம்முடைய அரசு, பொதுப்பணித் துறை மூலமாக தொகுதிக்கு ஒரு ஏரி என்ற விகிதத்திலே ஒரு நல்ல திட்டத்தைச் செயல்படுத்துகிறது. அந்தப் பணி நடைபெறுகிறபோது, அந்தப் பகுதி மக்கள்கூட, ஆச்சரியத்தோடு, இயந்திரங்களைக் கொண்டு ஆழப்படுத்துகின்ற பணியைப் பாராட்டுகின்ற ஒரு நிலை இருக்கிறது. அதை, தொகுதிக்கு ஒன்று என்பதை இரண்டாகக்கூட உயர்த்தி, பொதுப்பணித் துறை மூலம், அந்தத் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி பிரச்சினை, போளூர், சனிக்கவாடி, பெலாசூர் பாலம், செய்யாற்றிலே நீண்ட நாட்களாகக் கட்டப்படாமல் இருந்து வருகிறது. அதை நெடுஞ்சாலைத் துறை கவனத்திலே கொண்டு, இந்த ஆண்டாவது அதனை கட்டி முடித்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திருவண்ணாமலை, மாவட்ட தலைநகரமாக இன்றையதினம் விளங்கி வருகிறது. அங்குள்ள மருத்துவமனையை மேம்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய தாலுகாக்களை இன்றையதினம் அறிவித்திருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஜமுனா மரத்தூர்— அதாவது, ஜவ்வாதுமலையிலே, செங்கம், போளூர் தாலுகாக்களிலே, மலைவாழ் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். செங்கத்திற்கோ, போளூருக்கோ



1998 மார்ச் 31] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

அவர்கள் தனித்தனியே வரவேண்டும். ஆகவே, ஜவ்வாதுமலையிலே ஒரு புதிய வட்டத்தையும், போளூரிலே... (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்... போளூர் வட்டத்திலே, சேத்துப்பட்டிலே ஒரு புதிய வட்டத்தையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டுகின்ற பணியினை விரைவுபடுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான கலசப்பாக்கத்திலே இருக்கின்ற மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளிகள், கடலாடி, ஆதமங்கலம், கலசபாக்கம், மங்கலம், மல்லவாடி, ஆகிய இடங்களில் உள்ள பள்ளிக் கட்டடங்கள் பழுதுபார்க்கப்படாமல் இருந்து வருகின்றன. அவற்றையெல்லாம் பழுதுபார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, (மணியடிக்கப்பெற்றது).. ஒரே நிமிடம்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைகளிலே போய் உட்காரவேண்டும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** அதேபோன்று, கலசப்பாக்கத்திலே, கடலாடியிலே ஒரு தீயணைப்பு நிலையம், மேல் சோழங்குப்பத்திலே, பொதுப்பணித் துறை சார்பாக ஒரு அணை, ஜவ்வாதுமலை, ஜமுனா மரத்தூரிலே மின்சாரத் துறையின் மூலமாக ஒரு துணை மின் நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இறுதியாக, இந்த ஆண்டு, சுதந்திரப் பொன்விழா ஆண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பினைக் கொடுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையிலே சில கருத்துக்களைச் சொல்வது என்னுடைய உரிமை என்று கருதி, சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

[திரு. ரா. சேதுநாதன்] [1998 மார்ச் 31

வரவு-செலவுத் திட்டத்தினை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்தபோது, ஒரு பாடலின் சில வரிகள்தான் என் நினைவுக்கு வந்தது. காலங்களில் இந்த வரவு-செலவுத் திட்டம் ஒரு வசந்தமாகக் காட்சியளிக்கிறது, கலைகளில் இந்த வரவு-செலவுத் திட்டம் ஒரு எல்லோரா ஓவியமாகக் காட்சியளிக்கிறது. கலைஞர் கரத்தால் உருவாக்கப்பட்ட எல்லோரா ஓவியம்தான் இந்த வரவு-செலவுத் திட்டம். மலர்களிலே, பார்க்கிறபோது இது ஒரு மல்லிகையாகக் காட்சி அளிக்கிறது. காரணம் எண்ணெய் வகைகளுக்கு வரிவிலக்கு அளித்த காரணத்தால் மகளிர் மகிழ்கிறார்கள். அவர்கள் விரும்புகின்ற மலராக இந்த வரவு-செலவுத் திட்டம் காட்சியளிக்கிறது.

பிற்பகல் 12-10

நான் இந்த நேரத்திலே வணக்கத்தோடு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் டாக்டர் அம்பேத்கரைப் பார்த்ததில்லை. ஆனால் கல்விக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கிய தொகையைப் பார்க்கிறபோது நம்முடைய அம்பேத்கர் அவர்கள் சொன்ன தாரக மந்திரத்தின் முதல் வார்த்தையான 'கற்பி' என்ற வார்த்தைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் உயிரோட்டம் கொடுத்திருக்கிறார்கள், அந்த வார்த்தையை இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது அம்பேத்கர் வடிவிலே நான் கலைஞர் அவர்களைப் பார்க்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வரும் நிதியாண்டில் 300 பள்ளிகள், அடுத்த ஆண்டில் 400 பள்ளிகள் என்று குக்கிராமங்கள்தோறும் பள்ளிகள் இல்லாத இடமே இருக்கக்கூடாது, கிராமமே இருக்கக்கூடாது என்று சொல்கிற அளவுக்கு நிலையை உருவாக்குவோம் என்று அறிவித்திருப்பதை பார்த்து அம்பேத்கர் கனவு இன்றைக்கு நனவாகிக் கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் கிராமப் பகுதி மக்கள் நன்றி உணர்வோடு இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது நான்கூட நினைத்தேன். தேர்தலுக்காக இந்த வரவு-செலவுத் திட்டம் ஓரளவுக்கு பயன்படுமோ என்று இல்லை, இல்லை. நாளையத் தேர்தலைப் பற்றி சிந்திக்காமல் நாளையத் தலைமுறையைப் பற்றி சிந்திக்கக்கூடிய அந்த உணர்வோடுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள். தேர்தலைப் பற்றி சிந்தித்தவர்கள் எல்லாம் சென்றுவிட்டார்கள். நாளையத் தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற ஆற்றல்படைத்த தலைவர் அவர்களை இந்த மக்கள் உளமாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



1998 மார்ச் 31] [திரு. ரா. சேதுநாதன்]

அதேபோல, நடப்பாண்டில் கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 2,938 கோடி ரூபாய்க்கு மாறாக, கல்விக்கு முக்கியத்துவம் தரவேண்டும், டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய சிந்தனைக்கு, 'கற்பி' என்ற அந்த வார்த்தைக்கு உயிரோட்டம் கொடுக்க வேண்டும், உண்மை வடிவம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தால் நீங்கள் 630 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கி, வரும் ஆண்டில் கல்விக்காக 3,568 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதைப் பார்க்கிறபோது கல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற அந்த உணர்வை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்.

அதேசமயத்திலே வேறு ஒரு நினைவு எனக்கு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு—அந்தக் கடமையை, அம்பேத்கர் சொன்ன 'கற்பி' என்ற வார்த்தையை நீங்கள் கடமையுணர்வோடு நிறைவேற்றி இருக்கிறீர்கள். அதன் வழியாக டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய வார்த்தையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வார்த்தையும் உங்கள் உயிரோட்டத்திலே கலந்திருக்கிறது. அதற்கு ஒரு செயல் வடிவம் கொடுத்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் இந்த நேரத்திலே எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, கல்விச் செல்வம் குறைந்த காரணத்தால், நினைவாற்றல் குறைந்த காரணத்தால், இதே மாமன்றத்திலே முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 'நான் ஒரு உயர்ந்த சாதி' என்ற வார்த்தையைச் சொன்னார்கள், என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். நான் உயர்ந்த சாதிதான், நான் உயர்ந்த சாதிதான், நான் உயர்ந்த சாதிதான் என்று சொல்லிவிட்டு, இன்றைக்கு நான் ஒரு தமிழச்சி என்று சொல்கிறார் என்று சொன்னால், நான் இந்த மன்றத்தின் வாயிலாக நினைவூட்ட விரும்புகிறேன், மக்கள் மறதி படைத்தவர்கள், நினைவாற்றல் குறைந்தவர்கள், கல்வியறிவு அற்றவர்கள் என்று நினைக்கிறார்களா? இல்லை, இல்லை, அந்த உணர்வு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் கல்விக்காக இவ்வளவு அக்கறை எடுத்து, அம்பேத்கர் அவர்களுடைய வார்த்தையையும், அண்ணா சொன்ன கடமை என்ற வார்த்தையையும் ஏற்றும், கடமையுணர்வோடு நீங்கள் நிறைவேற்றி இருப்பதை நாட்டு மக்கள், குழந்தைச் செல்வங்கள், மாணவர்கள் அனைவரும் எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாக நான் இந்த நேரத்திலே முதல்வர் அவர்களுக்கு வைக்க விரும்புவது என்னவென்றால், இந்த நிதிநிலை அறிக்கையை பாராட்டாதவர்கள் இல்லை, எண்ணி

மகிழாதவர்கள் இல்லை. ஆனால் விவசாயிகள்தான் பாவம். குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏரிகளை விரிவுபடுத்துகிற திட்டம், வரத்து வாய்க்கால்களை ஒழுங்குப்படுத்துகிற திட்டம், குளங்களை ஆழப்படுத்துகின்ற திட்டம், பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துகின்ற திட்டம், நீராதாரங்களை நிலைப்படுத்துகின்ற திட்டம், ஏரிகளைச் சீரமைக்கின்ற திட்டம், இன்னும் பல திட்டங்கள். திட்டங்களுக்கு குறைவில்லை. இவை அனைத்தும் நிறைவேறுகிற திட்டங்கள். உறுதியான திட்டங்கள். ஆனால் விவசாயிகள்தான் சற்று மகிழ மறுக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் பேசிவிட்டார்கள். இருந்தாலும் என்னுடைய பணிவான வேண்டுகோள், மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளை நீங்கள் மகிழ வைக்க வேண்டும், அவர்களைச் சற்று சிரிக்க வைக்க வேண்டும். அவர்களுடைய கூட்டுறவுச் சங்கக் கடன்களில் வட்டியையாவது தள்ளுபடி செய்வதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் விவசாயிகளுடைய வயிற்றிலே பாலை வார்த்து அவர்களை மகிழ வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அடுத்து, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்கள் சுமார் 20, 30 ஆண்டுகளாக, இன்னும் சொல்லப்போனால் 50 ஆண்டு காலமாக அங்கே வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. குழாய் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது, வரி வசூலிக்கப்படுகிறது, நகராட்சிப் பகுதிகளில், புறம்போக்கு இடங்களில் வாழ்கின்ற அந்தப் பகுதி மக்கள் கூரை வீடுகளை, கல் வீடுகளை, ஓட்டு வீடுகளை கட்டிக் கொண்டு வாழ்கிறார்கள். கிராமப்புறங்களிலே எப்படி பட்டா போட்டு கொடுக்கிறீர்களோ, அதைப்போல அரசுக்குத் தேவை இல்லாத இடங்களை, அவை புறம்போக்கு நிலமாக இருந்தாலும், நத்தமாக இருந்தாலும், ஓடைப் புறம்போக்காக இருந்தாலும், பட்டா போட்டு கொடுத்தால் கிராமப்புற மக்கள் மகிழ்வதைப்போல நகர்ப்புற மக்களும் மகிழ்வார்கள் என்பதை இந்த நேரத்தில் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பட்டா இடங்களில் வீடு கட்டி வாழ்கிறார்கள். அவற்றை un approved plots என்று சொல்லுகிறார்கள். un approved என்று





சொல்லுவதால், அங்கே சாலைகள் அமைக்கப்படுவதில்லை, விளக்குகள் அமைக்கப்படுவதில்லை, தண்ணீர் வசதி செய்து தரப்படுவதில்லை. எனவே, நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், அவர்கள் un approved plots பணம் கொடுத்து வாங்கி, அதிலே அதிக பணம் செலவிட்டு வீட்டைக் கட்டி வாழ்கிறார்கள். அத்தகைய un approved plots என்ற அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அப்பகுதிகளில் நகராட்சியில் வரி வசூல் செய்கிறார்கள். மின்சாரத் துறையிலே மின் கட்டணம் வசூலிக்கிறார்கள். அதைக் கருத்தில்கொண்டு, அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் சாலை பிரச்சினை, தண்ணீர்ப் பிரச்சினை, விளக்குப் பிரச்சினை போன்றவற்றைத் தீர்ப்பதற்கு ஏற்ற வகையில், அன்-அப்ரூவ்ட் பிளாட்டுகளை அப்ரூவ்ட் பிளாட்டுகளாக அனுமதிக்க வேண்டுமென்றும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் துறையிலே ஓட்டுநர்கள், நடத்துனர்கள் என்று இரண்டு பிரிவினர் பணியாற்றுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில், ஓட்டுநர் பதவிக்கு 45 வயது என்றும், நடத்துனருக்கு 40 வயது என்றும் வேலை கொடுப்பதற்கு வயது வரம்பு இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் நடத்துனர்கள் சற்று பலம் குறைந்தவர்களாக, உடல் பலம் சற்று குறைந்தவர்களாகக்கூட இருக்கலாம். ஆனால், ஓட்டுநருக்கு 45 வயது என்றும், நடத்துனருக்கு 40 வயது என்றும் இருக்கின்றது. அந்த வித்தியாசத்தை மாற்றி அனைத்து தரப்பு மக்களுக்கும்—பி.சி., எம்.பி.சி., என்று சொன்னால்கூட ஓட்டுநருக்கு 40 வயது என்றும், நடத்துனருக்கு 35 வயது என்றும் இருக்கிறது—இவ்விரண்டையும் ஒன்றாக்கி 40 வயது என்று சமப்படுத்தினால் அனைவரும் வேலை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பேரறிஞர் அண்ணா அவர்களது பிறந்த நாளில் காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு வீரப்பதக்கங்கள் வழங்குகிறீர்கள். அதை நான் மனதார வரவேற்கிறேன். நாட்டு மக்களும் அதை மனதார வரவேற்கிறார்கள். அதைப்போல, தீயணைப்புத் துறையில் பணிபுரிபவர்களுக்கும், அரசுப் போக்குவரத்து கழகங்களில் வாகனங்கள் ஓட்டுகின்ற ஓட்டுநர்களுக்கும்— அயராது பாடுபடுகின்ற, உயிரைக் காப்பாற்றுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள அவர்களுக்கும்— அண்ணா பிறந்த நாளில் பதக்கங்கள் வழங்கி

[திரு. ரா. சேதுநாதன்] [1998 மார்ச் 31

அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரே ஒரு கருத்தைச் சொல்லிவிடுகிறேன். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கடந்த ஆண்டு எனது தொகுதிக்கு கூட்டுறவு சர்க்கரை ஆலை கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். தனியார் சர்க்கரை ஆலை கொடுத்தார்கள். அங்கே, தனியார் சர்க்கரை ஆலை தொடங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனது திண்டிவனம் தொகுதியில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாமண்டூரிலிருந்து திண்டிவனம் வரை நான்கு வழிப்பாதை அமைப்பதற்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக எங்கள் மாவட்ட மக்களும், நாங்களும் என்றைக்கும் நன்றி உடையவர்களாக இருப்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, வீராணம் திட்டம் கொடுக்கப்படுமா என்று எதிர்பார்த்தோம், கொடுத்திருக்கிறார்கள். அத்திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. வரவு செலவுத் திட்டத்தை வாசிக்கும்போது எங்களுடைய தொகுதி மக்கள் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியடைந்தது. அத்தகைய வீராணம் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கடந்த ஆண்டு இம்மாமன்றத்தில் நான் ஒரு கேள்வியை எழுப்பினேன். இலட்சக்கணக்கான கட்டடத் தொழிலாளர்கள், தங்களுடைய உயிரைத் துச்சமாக மதித்து 10 மாடி, 20 மாடி என்று கட்டும் பணியில் அபாயகரமான நிலையில் வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் வேலையின்போது தவறி விழுந்தால் அவர்களைக் காப்பாற்றுவதற்கு இந்த நாட்டிலே யாரும் இல்லை என்ற நிலையில், தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்கள், அவர்களுக்கென ஒரு ஆணையத்தை ஏற்படுத்தி, பணியின்போது, அவர்கள் இறந்தால் ரூ. 50 ஆயிரம் கொடுக்கப்படும் என்று அந்த ஆணையத்தின் வாயிலாக ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்காக தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இலட்சக்கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் நன்றி செலுத்தக்கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.



1998 மார்ச் 31]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது மரியாதைக்குரிய, மாசற்ற மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களின் தலைமையிலுள்ள தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாக, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, சேலம் மக்களின் நீண்ட நாள் தேவையான பல்கலைக்கழகத்தை, தந்தை பெரியார் பெயரில் எனது ஓமலூர் தொகுதியில் தொடங்கிவைத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக ஒரு நிதிநிலை அறிக்கை வெளியாகிறது என்றால், நகர்ப்புறத்திலே இருக்கின்ற மக்களும் அரசு ஊழியர்களும்தான் அதைப் பற்றி பரபரப்பாகப் பேசிக் கொள்வார்கள். அனால், இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே கிராமப்புறங்களில் இருக்கின்ற பாமர மக்கள்கூட வரவேற்றிருக்கின்றார்கள் என்றால் அது எந்த அளவிற்கு பாட்டாளி மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்து இருக்கின்றது என்பது தெளிவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ரூ.10,563 கோடியாக இருந்த இந்த நிதி ஒதுக்கீடானது, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ரூ.25,000 கோடியாக உயர்ந்து உள்ளது. தமிழகத்திலே இருந்து சென்ற 9 மத்திய அமைச்சர்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது, நம்முடைய மாநிலத்தின் நலன் கருதி செயல்பட்டதன் விளைவுதான் இந்த நிதி ஒதுக்கீட்டிற்குக் காரணம். தற்போது புதிய மத்திய அரசிலே இடம் பெற்றிருக்கின்ற தமிழக அமைச்சர்களும் இதே பணியைத் தொடர்ந்து செய்வார்கள் என்று தமிழகம் எதிர்பார்க்கின்றது.,

மத்திய அரசாங்கத்தினுடைய மொத்த வருவாயில் மாநிலங்களுக்கு 29 சதவிகிதம் பகிர்ந்தளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது ரூபாய்க் கணக்கிலே எவ்வளவு என்ற விவரம் இல்லை. அதே போல வி.டி.ஐ.எஸ். திட்டத்திலே கிடைத்த ரூ.10,500 கோடி வருவாயில்

[திரு. ஆர்.ஆர். சேகரன்] [1998 மார்ச் 31

நமது மாநிலத்திற்கு எவ்வளவு கிடைக்கும் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை. வருவாயை எல்லாம் வைத்து நாம் பற்றாக்குறையை பெருமளவு சமாளிக்க முடியும். சுமார் 6 கோடி மக்கள் தொகை உள்ள நமது மாநிலத்தில் மொத்தச் செலவு ரூ.18,000 கோடியாக மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இது சராசரியாக தனி நபருக்கு ரூ.3,000 என்ற அளவிலே இருக்கின்றது.

சமுதாய முன்னேற்றத்திற்கு கல்வியறிவு அவசியம் என்ற பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் எண்ணத்தின்படி, இந்த அரசு கல்வித் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து ரூ.3,563 கோடி ஒதுக்கியுள்ளது. இதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அனைத்து குக்கிராமங்களிலும் தொடக்கப் பள்ளி என்ற அரசின் முடிவு வரவேற்கத்தக்க ஒன்றாகும். என்னுடைய ஓமலூர் தொகுதியிலே அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணிக வரியினைப் பொறுத்தவரையில் பல்வேறு பொருட்களுக்கு சலுகைகள் அளித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். குறிப்பாக, சமையல் எண்ணெய்க்கு அளிக்கப்பட்டிருக்கும், வரி விலக்கு தாய்மார்களின் உள்ளங்களைக் குளிரச் செய்யும். அதேபோல கட்டுமானப் பொருளான 'ஹாலோ பிளாக்ஸ்' (hollow blocks) மீதான வரி 4 சதவிகிதம் குறைக்கப்பட்டிருப்பது கட்டடத் தொழில்களின் வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பிற்கும் உறுதுணையாக இருக்கும். அது போல ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 20 இலட்சம் வரை விற்பனை செய்யும் வியாபாரிகளின் கணக்குகளில் 10 சதவிகிதம் தணிக்கைக்கு உட்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இது நடைமுறையிலே குழப்பத்தைத் தோற்றுவிக்கும். ஆகவே, 10 சதவிகிதம் என்ற அந்தத் தணிக்கை முறையை நீக்குவதோடு மட்டுமல்லாமல், இந்த உச்ச வரம்புத் தொகையை ரூ. 20 இலட்சத்திலிருந்து ரூ. 30 இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணிகச் சின்னம் பதித்த மசாலாப் பொடிகளுக்கு 11 சதவிகிதம் வரி விதித்து உள்ளீர்கள். இதை 4 சதவிகிதமாக குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கும் முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல கொப்பரைத் தேங்காய் போன்றவற்றிற்கும் முழுமையான வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 மார்ச் 31] [திரு. ஆர்.ஆர். சேகரன்]

நடப்பு ஆண்டிலே பல்வேறு புதிய தொழிற்சாலைகள் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டுடன் தொடங்க இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதோடு மட்டுமல்லாமல் பின்னி தொழிற்சாலை போன்ற மூடிக்கிடக்கின்ற தொழிற்சாலைகளையெல்லாம் திறக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, சாயத் தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகள் போன்றவைகளைத் திறக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே ரூ. 2 கோடி செலவிலே தொடங்க இருக்கும் சிறு தொழில் நுட்ப மையம் போல எல்லா மாவட்டங்களிலும் அதனை விரிவுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போல கனிமத் தொழில் சுரங்கத் தொழில் போன்றவைகளைப் பற்றியெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. கனிமப் பொருட்களை வெட்டி எடுக்கும் உரிமம் வழங்கும் நடைமுறையினை இன்னும் எளிதாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் பட்டா நிலங்கள் எடுக்கும் உரிமையை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமே வழங்கினால் இன்னும் சிறப்பாக இருக்கும். அது மட்டுமல்லாமல், மாசுக்கட்டுப்பாடு வாரியம், வனத் துறை, விவசாயத் துறை போன்ற துறைகளிலிருந்து என்.ஓ.சி. பெற வேண்டியிருக்கிறது. இந்த முறையையும் எளிதாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் 6,900 மெகாவாட் ஆக இருக்கும்போது, சுமார் 4,900 மெகாவாட் மட்டுமே தற்போது உற்பத்தியாகின்றது. கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு மட்டுமே மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. புதிய திட்டங்கள் ஏதுமில்லாமல் இருக்கின்ற மின் உற்பத்தி நிலையங்களை ஒழுங்காகப் பராமரித்து வந்தால் இப்போது நம்மிடமே உபரி மின்சாரம் இருக்கும். எனவே, இதற்கான காரணத்தைக் கண்டறிந்து சீர் செய்ய வேண்டுமென்று அரசினைக் கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியத்திலே ஒரு ஆலோசனைக் குழு ஒன்று இருக்கின்றது. இந்தக் குழு எப்படி நியமிக்கப்படுகின்றது, ஒரு வருடத்திற்கு எத்தனை முறை இந்தக் குழு கூடுகின்றது, இந்தக் குழுவின் முடிவுகள் என்ன, பரிந்துரைகள் என்ன, அவைகளின்மீது மின்வாரியம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை இந்த அவைக்கு வைக்க

[திரு. ஆர்.ஆர். சேகரன்] [1998 மார்ச் 31

வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆண்டில் பெய்த நல்ல மழையின் காரணமாக, விவசாயிகள் எல்லாம் தங்களுடைய நிலங்களிலே பயிரிட்டு இருக்கின்றார்கள். கிணறுகளிலே தண்ணீர் இருக்கின்றது. அப்படி இருந்தும்கூட, மின் பற்றாக்குறை காரணமாக அந்த விவசாயிகள் எல்லாம் வாடி வதங்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இந்த அரசு அந்த மின்வெட்டினைக் குறித்து போர்க்கால அடிப்படையிலே கவனம் செலுத்தி, இதற்கு ஒரு பரிகாரம் தேட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கு ரூ. 30 இலட்சம் என்று கொடுத்திருப்பதை ரூ. 50 இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். அதில் ஒரு தொகுதிக்கு ஒரு கிராமம் என்று இருப்பதை, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிராமம் என்ற அளவிலே உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அதேபோல, ஐ.ஆர்.டி.பி. கடன், தொகுப்பு வீடுகள் போன்ற அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரம் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களுடைய தேவைகள் குறித்து சட்டமன்ற உறுப்பினர்களிடம் கொடுக்கும் மனுக்கள் மீது இதனால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் போய்விடுகிறது. ஆகவே, இதுபோன்ற அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதற்கென்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம்-உளுந்தூர்பேட்டை மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி அறிவித்தமைக்கு சேலம் மாவட்ட மக்கள் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒசூரிலிருந்து கிருஷ்ணகிரி வரை அமைய இருக்கும் நான்கு வழிச் சாலையை தருமபுரி, ஓமலூர் வழியாக சேலம் வரை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், தென் மாநிலங்களிலிருந்து வட



1998 மார்ச் 31] [திரு. ஆர்.ஆர். சேகரன்]

மாநிலங்களுக்குச் செல்லும் அனைத்து லாரிகளும் இந்த வழியாகத்தான் செல்கின்றன. தோப்பூரிலே பல நேரங்களிலே போக்குவரத்துத் தடை ஏற்படுகிறது. ஆகவே, இந்தச் சாலையையும் நான்கு வழிச் சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓமலூர் நகரில் மேட்டூர் சாலையில் இரயில்வே கேட் ஒரு நாளில் பல மணி நேரம் மூடிவிடுகின்ற நிலை உள்ளதால், போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகிறது. இந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மேம்பாலப் பணியை இந்த நிதி ஆண்டிலே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு 3,200 புதிய பேருந்துகள் வாங்க ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டைப்போல இந்த ஆண்டும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இரண்டு புதிய வழித் தடங்கள் ஒதுக்கீடு செய்து, அதிலே புதிய பேருந்துகளை விடுவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது ஓமலூர் தொகுதியில் புளோரைடால் தண்ணீர் பாதிக்கப்பட்ட 50 கிராமங்களுக்கு மேட்டூர்-காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம். திட்டப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலாவது அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஏரிகளைச் சீரமைக்கும் திட்டம் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம். ஒரு தொகுதிக்கு ஒரு ஏரி என்பதை குறைந்தது ஒரு தொகுதிக்கு மூன்று ஏரிகள் என்று உயர்த்தி, தூர் வாருவதற்கு வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் மானாவாரி வேளாண்மை விளைச்சலை அதிகரிக்க டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையிலே திட்டம் செயல்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், திட்டத்தின் விவரம் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இருந்தபோதிலும், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது ஓமலூர் தொகுதியையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும், கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கும் விலையினை உயர்த்திக் கொடுக்க வேண்டும். நெல்லுக்கு, மூட்டை ஒன்றுக்கு ரூ.500/-ம், கரும்புக்கு, டன்

[திரு. ஆர்.ஆர். சேகரன்] [1998 மார்ச் 31

ஒன்றுக்கு ரூ.1000/-மும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓமலூர் தொகுதியிலே கரும்பு மற்றும் தக்காளி விளைச்சல் அதிகமாக இருப்பதால், கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை ஒன்றும், பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும் இந்த ஆண்டு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சிவானந்தம்.

***திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய 14-ஆவது வயது முதல் இன்று வரை தந்தை பெரியார் அவர்களுடைய சீடனாகவும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தம்பியாகவும் இருந்து, தமிழுக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், தமிழ் மக்களின் நல்வாழ்விற்காகவும் உழைத்துக் கொண்டிருக்கிறார் என்பது உலகறிந்த உண்மை. உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் எல்லாம் அவர்களுடைய நெஞ்சங்களில், தம்மைத் தலைவராக ஏற்றுக்கொண்டு நிலையை உணர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே அளித்திருக்கிறார்கள்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தருவதற்கு முன்பாகவே, விருந்திலே எப்படி, முதலாவதாக இனிப்பை வைப்பார்களோ, அதுபோல, கடந்த 23-ஆம் தேதி அன்றே, பஸ் கட்டணத்திலே இரண்டு பைசாவைக் குறைத்து, இனிப்பான செய்தியை மக்களுக்குத் தந்திருக்கிறார்கள். அதை மக்கள் போற்றி மகிழ்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1998-99-ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ.15,039.46 கோடியாகவும், வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18,048.04 கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ.3,008.58 கோடியாக உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு, வரவு-செலவுத் திட்டத்தின் அனைத்துக் கணக்குகளிலும்



1998 மார்ச் 31] [திரு. ஆர். சிவானந்தம்]

நிகரப் பற்றாக்குறை ரூ.876.67 கோடியாக அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய வரிகள் மூலம் பற்றாக்குறை ஈடுசெய்யப்படும் என்றும், இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் மீதான விற்பனை வரி 30 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாகவும், வெளிநாட்டில் தயாரிக்கப்படும் மதுவகை மீதான விற்பனை வரி 50 சதவிகிதத்திலிருந்து 70 சதவிகிதமாகவும் உயர்த்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், பான் மசாலா மீதான வரி 20 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதமாக உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

ஒப்பந்தப் பேருந்துகள் (Omni bus) மீதான வரி ஒரு காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ.1,500-லிருந்து ரூ.2,000-ஆக உயர்த்தி, நிகரப் பற்றாக்குறை ரூ.876.67 கோடியை மேற்கூறிய புதிய வரி விதிப்புகள் மூலம் ரூ.340 கோடி கூடுதல் வருவாயைக் கணக்கில் கொண்ட பின்பு, வரவு-செலவுத் திட்ட இறுதிப் பற்றாக்குறை ரூ.536.67 கோடியாக கொண்டுவரப்பட்டு, இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுள்ளது. இதன்மூலம் வரிச் சலுகையாக, தாய்மார்கள் அனைவரும் போற்றும் வகையிலே சமையல் எண்ணெய்களுக்கு முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது; கணினி மென்பொருளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது; காசினிக் கீரைக்கு, லென்ஸ் போன்றவற்றிற்கெல்லாம் முழுமையாக வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

பிற்பகல் 12-30

சாதனையாக 300 குக்கிராமங்களில் தொடக்கப் பள்ளிகளும், சத்துணவுத் திட்டத்தில் 15 நாட்களுக்கு ஒரு முட்டை என்று வழங்கப்பட்டதை ஒரு வாரத்திற்கு ஒரு முட்டை என்றும், சென்னையில் 100 கோடி ரூபாயில் வணிக மற்றும் நிதி மையம் ஆரம்பிக்கப்பட இருப்பதும், 605 கோடி ரூபாயில் சென்னையில் துரித இரயில் திட்டமும், 368 கோடி ரூபாயில் ரூபாயில் சென்னையில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டமும், ஆயிரம் மக்கள் தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகளும், ஒரு புதிய பன்னாட்டு விமான நிலையம் அமைப்பது குறித்தும், மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக உயர் ஊதியம், அதுவும் 1-1-1996 முதல் வழங்கியும்-இதனால் 10 இலட்சம் ஊழியர்கள் பயனடையும் வாய்ப்பையும் இந்த பட்ஜெட்டில் உருவாக்கி

[திரு. ஆர். சிவானந்தம்] [1998 மார்ச் 31

இருக்கிறார்கள். மேலும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியை 25 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தந்து இருக்கிறார்கள். விதவைகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், முதியோர்கள் ஆகியோருக்கு 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக ஓய்வூதியத்தை உயர்த்தி இருக்கிறார்கள். உள்ளாட்சி மன்றங்களில் அரசு மானியம் பெறும் பள்ளிகளில், ஏழை எளிய, வறுமைக் கோட்டுக்குக்கீழ் உள்ள தொழிலாளர்கள், நெசவாளர்கள், விவசாயிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு 1-வது முதல் 5-வது வரை படிக்கின்றவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தையும் உருவாக்கி இருக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் அனைத்தையும் நாட்டிலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும்—வல்லுநர்கள், நல்ல உள்ளம் கொண்ட அரசியல் தலைவர்கள், வியாபாரிகள், ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருமக்கள் ஆகிய அனைவருமே பாராட்டுகின்றார்கள். ஆனால், இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஒருசிலர்—அரசியல் அநாதையாக இருந்தவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, கருத்துக்களை இங்கே குவிக்கிறார்கள்; இது உப்பு சப்பு இல்லாத பட்ஜெட்; இது கவர்ச்சியான அறிக்கை என்றெல்லாம் சொல்கிறார்கள். இதுவா உப்பு சப்பு இல்லாத பட்ஜெட்? அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இதுவா கவர்ச்சியான அறிக்கை? அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆமாம், அவர்களுக்கு வேண்டுமானால் இது உப்பு சப்பு இல்லாமல் இருக்கலாம், ஏனென்றால், இங்கே ஒதுக்கப்பட்டு இருக்கிற நிதித் திட்டங்கள் எல்லாம் அனைத்து மக்களுக்கும் நேரடியாகப் போய்ச் சேருகின்றன. அதனால் மக்கள் முழுமையாகப் பலன் அடைகிறார்கள். இதைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், வயிற்றெறிச்சல்படுகிறவர்கள் இதை உப்பு சப்பு இல்லாத பட்ஜெட் என்று சொல்லுவார்கள். நான் கேட்டுக்கொள்கிறேன், இந்த பட்ஜெட்டிலே ஒதுக்கப்படுகின்ற பணம் எல்லாம் யார் வீட்டு தோட்டத்துக்காவது போகிறதா? எந்தத் திராட்சை தோட்டத்துக்காவது போகிறதா? எந்தத் தேயிலை தோட்டம் வாங்கவாவது போகிறதா? சுழல் மெத்தை, சமையல் அறை, ஏ.சி. ரூம், டி.வி. போன்ற சொகுசு பஸ்கள் எல்லாம் செய்வதற்கு பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட பணம் போகிறதா? எண்ணிப் பார்க்க வேண்டும். 720 ஜோடி செருப்பு வாங்கி ஏ.சி. ரூமில் வைப்பதற்கு இந்தப் பணம் போகிறதா? மக்களுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் மக்களுக்கு முழுமையாக நேரடியாகப் போய்ச் சேருவதால், அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மேலும், 28 கிலோ தங்க நகைகள் வாங்கவா இந்தப் பணம் போகிறது? 10,500 பட்டுச் சேலைகள்



1998 மார்ச் 31] [திரு. ஆர். சிவானந்தம்]

வாங்கவா இந்தப் பணம் போகிறது? எண்ணிப் பார்க்க வேண்டும். மனச்சாட்சி உள்ளவர்கள் இந்த பட்ஜெட்டை குறை சொல்லலாமா? சொல்ல முடியுமா? எனவேதான், அவர்களைப் பற்றி எல்லாம் மக்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்னும் ஒருவர் சொல்கிறார். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கு இந்த பட்ஜெட் பயன்படவில்லை என்று சொல்கிறார். நான் கேட்கிறேன், அவர் நினைக்கிற வறுமைக்கோடு எது? போயஸ் தோட்டத்திலே உள்ளவர்கள்தான் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் என்று எண்ணுகிறாரா? 1-வது முதல் 5-வது வரை படிக்கின்ற, அரசுப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் யார்? அவர்கள் எல்லாம் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? அவர்கள் எல்லாம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவா? இவர் நினைக்கிற வறுமைக்கோடு எது என்று புரியவில்லை. எனவேதான், அவர் தடுமாறிப் பேசுகிறார் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொருவர் சொல்கிறார், பாட்டாளி மக்கள் என்று பெயரை வைத்துக்கொண்டு, அந்தச் சமூகத்தினருக்காகப் பாடுபடுகிறேன், உழைப்பேன் என்றெல்லாம் சொல்லி, ஒரு காலகட்டத்திலே போராட்டங்களை நடத்தி, அடிதடிபட்டு, சிறையிலே அடைக்கப்பட்டு, 500 வழக்குகள் அவர் மீது போடப்பட்டு இருந்தது: தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறச் செய்து, அவர்கள் கேட்காமலேயே 20 சதவீத இட ஒதுக்கீட்டையும் தந்திருக்கின்றார்கள். இதையெல்லாம் அவர் எதிர்பார்க்கவில்லை. கலைஞராகவே அந்தச் சமுதாயத்திற்காக செய்யவேண்டுமென்று செய்தார். இதைத்தான் அவர் எதிர்பாராத பட்ஜெட் என்று சொன்னாரா என்று எனக்குப் புரியவில்லை. எனவே, இவைகளையெல்லாம் நாடு எந்த விதத்தில் எண்ணுகிறது என்பதை அவர்கள் உணர்ந்து பேசவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டைப் பொதுமக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள், பாராட்டாதவர்களே இல்லை. இவைகளைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய தொகுதியில் உள்ள ஒருசில கோரிக்கைகளை தமிழக முதல்வர் அவர்களிடம் உங்கள் மூலமாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆர். சிவானந்தம்] [1998 மார்ச் 31

பிற்பகல் 12-35

ஆரணி தொகுதியில் கண்ணமங்கலம், தேவிகாபுரம் என்ற இரண்டு கிராமங்களில் தீயணைப்பு நிலையங்கள் வேண்டும். இப்போது 20-25 கிலோ மீட்டர் தூரத்தில்தான் அதாவது 20 கிலோ மீட்டர் தூரத்தில் ஆரணியிலும், 20 கிலோ மீட்டர் தூரத்தில் சேத்துப்பட்டிலும், அதைப்போல 25 கிலோ மீட்டர் தூரத்தில் போளூரிலும்தான் தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. அதனால் நான் சொன்ன அந்தக் கிராமங்களில் தீ விபத்து ஏற்பட்டால், 20-25 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தீயணைப்பு நிலையங்களுக்குத் தகவல் சொல்லி அவர்கள் வருவதற்குள், எல்லாமே எரிந்து சாம்பலாகிவிடக்கூடிய நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கண்ணமங்கலம், தேவிகாபுரம் ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் தீயணைப்பு நிலையங்கள் உடனடியாக உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, என்னுடைய ஆரணி தொகுதியில் முள்ளன்டிரம் என்ற ஊரில் காவல் நிலையம் இல்லை. ஆரணி தொகுதியில் இப்போது இரண்டு காவல் நிலையங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் தாலுகாக்களிலேயே பெரிய தாலுகாவாக இருப்பது ஆரணி தாலுகாதான். அந்தத் தொகுதியில், அந்தத் தாலுகாவில் இரண்டு காவல் நிலையங்களே இருப்பதால், மக்களின் புகார்களைக் கவனிக்கவும், மக்கள் தொடர்பு கொள்ளவும் முடியாமல் இருக்கிற காரணத்தால், பொதுமக்கள் பிரச்சினைக்காக காவல் நிலையங்களை அணுக முடியாமல் இருக்கிற காரணத்தால், அந்த நிலையை மாற்ற முள்ளன்டிரம் அருகில் பாட்டைக்குளம் என்ற இடத்தில் ஒரு புதிய காவல் நிலையத்தை தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலமாக அறிவிக்கப்பட்ட கமண்டலம்-நாகல்நதி ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலத்தை அமைத்து அதன் மூலம் ஆரணி நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவேண்டும். அதுபோல ஆரணியில் பை-பாஸ் சாலை ஒன்றையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் கமண்டலம்-நாகல்நதி ஆற்றின் குறுக்கே பொதுப்பணித் துறையின் சார்பாக ஒரு 'டிவைடிங் டாம்' ஒன்றை அமைத்து அதன்மூலமாக 20 ஏரிகள் மற்றும் குளங்கள் பாசன வசதி ஏற்படுத்திக்கொள்ள ஏற்பாடுகளைச்



1998 மார்ச் 31] [திரு. ஆர். சிவானந்தம்]

செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன் வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. அ. வ. அப்துல் நாசர்.

***திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறும் இந்த விவாதத்தில் நான் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதற்கண் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையானது, பொதுமக்களின் அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்படுகின்ற ஒரு அறிக்கையாகத் தமிழக முதல்வர் அவர்களால் தரப்பட்டிருக்கிறது. ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் மாணவர்கள் என்று அனைத்துத் தரப்பினரையும் கருத்தில் கொண்டு அளிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை மக்கள் எல்லோரும் பாராட்டுகின்ற வேளையில், நான் சார்ந்துள்ள இந்திய தேசிய லீக் சார்பிலே நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கிற சில பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் இந்த மாமன்றத்தில் வைக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போது காவிரி டெல்டா பகுதியில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற ஆறுகளையும் வாய்க்கால்களையும் தூர் எடுப்பதற்காக பொதுப்பணித் துறை மூலம் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதை நாங்கள் வரவேற்கின்றோம். கிட்டத்தட்ட அதே போன்ற பிரச்சினைகள் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுகாவில் உள்ள விவசாயிகளுக்கும் இருக்கிறது. இந்த இரண்டு தாலுகாக்களிலும் உள்ள வாய்க்கால்களும் ஆறுகளும் தூர் வாரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். காவிரி டெல்டாவில் விவசாயிகள் கேட்டுக் செலவில் பொதுப்பணித் துறையால் ஆறுகள், 20 கோடி ரூபாய் செலவில் தூர் வாருகின்ற அதே நேரத்திலே, சிதம்பரம் வாய்க்கால்களில் தூர் வாருகின்ற அதே நேரத்திலே, சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுகாக்களில் இருக்கின்ற அனைத்து ஆறுகளையும் வாய்க்கால்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, குறைந்தபட்சம் பத்து கோடி ரூபாயாவது நிதி ஒதுக்கீடு செய்து, தூர் வார வேண்டுமென்பது அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கிறது. அதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ.வ. அப்துல் நாசர்] [1998 மார்ச் 31

*பிற்பகல் 12-40*

அதைப்போல வீராணம் வரத்துக் கால்வாய் தூர் வாரும் திட்டம் தொடங்கப்பட்டு 110 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதற்காக அந்தப் பகுதி விவசாயிகள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வீராணம் திட்டம் நிறைவேற்றப்படும்போது அந்த ஏரிகளுக்கு வரக்கூடிய வடவாறு ஆறு சுத்தம் செய்யப்படுகின்றது. அதிலிருந்து வரக்கூடிய வடிவாய்க்கால்களை, பாசன வாய்க்கால்களை எல்லாம் தூர் வாருகின்ற திட்டத்தை இந்த அரசு அந்தத் திட்டத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் எனது தொகுதியில் இருக்கக்கூடிய வெள்ளாறு, வெள்ள நேரத்திலே எல்லாம் அந்த ஆற்றின் கரைப் பகுதியிலே வசிக்கக்கூடிய மக்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், வெள்ளாற்றுக்கு வடக்குப் பகுதியிலேயுள்ள சேத்தியாத்தோப்பிலிருந்து கிட்டத்தட்ட பரங்கிப்பேட்டை வரை இருக்கக்கூடிய பகுதிகளிலெல்லாம் வெள்ளம் ஏற்படுகின்ற காலத்திலே அதிகமாக கரைகள் அரிக்கப்பட்டு அந்தப் பகுதி மிகவும் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால் அந்த வெள்ளாற்றில் தடுப்புச் சுவர் கட்டி வெள்ள அபாயத்திலிருந்து அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக எனது தொகுதியில் இருக்கக்கூடிய தையாக்குப்பம் என்ற கிராமம் சுமார் 50 மீட்டர் அளவுக்கு வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. ஏற்கெனவே நாடார் தெரு என்று ஒரு தெரு இருந்தது. அந்தத் தெருவே இன்றைக்கு வெள்ளத்தின் கொடுமையினால் இல்லாமல் ஆகிவிட்டது. இன்றைக்கும் அது மேலும் மேலும் அரித்துக்கொண்டு இருக்கின்ற காரணத்தினால் அந்த வெள்ளாற்றுக் கரையைச் சீரமைத்து அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே அதிகமாக கோவை வெடிகுண்டு சம்பவத்தைப் பற்றி அனேகமாக அனைத்து உறுப்பினர்களும் பேசினார்கள். ஆனால், கோவை வெடிகுண்டு சம்பவத்தில் ஈடுபட்ட தீவிரவாதிகள், சமூகவிரோதிகள், அப்படிப்பட்டவர்களை நாம் எல்லோரும் கண்டிக்கின்றோம். பொதுமக்களும் கண்டிக்கின்றார்கள். ஆனால் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலை என்னவென்றால்,



1998 மார்ச் 31] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

ஒட்டுமொத்தமான முஸ்லிம் சமுதாயமும் ஒரு குற்றவாளிப் பரம்பரை போல, குற்றவாளி சமுதாயம் போல, இன்றைக்கு அடையாளம் காட்டப்படுகின்றது. எனவே, அரசு அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றைக்கும் சோதனை என்ற பெயரிலே முஸ்லிம் வீடு என்று சொன்னாலே அவர் அந்தஸ்து மிக்க, மக்களால் மதிக்கப்படக்கூடிய ஒரு நபராக இருந்தாலும் அவரது வீடும் கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, அவரும் இக்கட்டுக்கு உள்ளாக்கப்படுகின்றார். இதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், சென்னையிலே மண்ணடிப் பகுதியிலே அலிம் ஹாஜியார் என்பவர் மிகவும் மதிக்கப்படக்கூடியவர், நல்லவர். அந்தச் சமுதாய மக்களால் மட்டுமல்ல அனைத்துச் சமுதாய மக்களாலும் மதிக்கப்படக் கூடியவர். அவருடைய வீடுகளெல்லாம் சோதனையிடப்பட்டு அவர் மிகவும் வேதனைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றார். எனவே, நீங்கள் அந்தச் சமூக விரோதிகளை, அந்தத் தீவிரவாதிகளைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்பதிலே எங்களுக்கு இருவேறு கருத்தில்லை. இருந்தாலும், அப்பாவிகளாக இருக்கக் கூடிய முஸ்லிம் பொதுமக்களும் இதில் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நீங்கள் தயவு செய்து கவனத்தில் கொண்டு, அந்த அப்பாவிப் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டும் அல்லாமல், அந்தக் கோவை வெடிகுண்டு சம்பவத்தைப் பற்றிச் சில பத்திரிகைகளிலே வந்த செய்திகளை நான் பார்த்தேன். அதாவது சசிகலா நடராஜன் என்பவரின் தூண்டுதலின் பேரில்தான் இந்தச் சம்பவங்கள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதைப் பத்திரிகை வாயிலாகக் கண்டேன். எனவே, அரசு அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து அந்த உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். திரு. அ.வ. அப்துல் நாசர், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

[1998 மார்ச் 31

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த நவம்பர் மாதம் 29-ஆம் தேதி கோவையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் மிகவும் கடுமையான விஷயங்கள். அங்கே காவல் துறையினால் கட்டவிழ்த்து விடப்பட்ட அந்தக் கொடுமையான சம்பவங்களின் பின்னணிதான் இன்றைக்கு இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கெல்லாம் காரணமாக இருந்திருக்கின்றது. எனவே, காவல் துறையினருக்கு ஒரு ஒழுங்குமுறையை வகுத்துத் தரவேண்டும். ஏனென்று சொன்னால் இப்படி அப்பாவிகளெல்லாம் கடுமையாக பாதிக்கப்படும்போது அதன் பின்விளைவுகள் வேறு மாதிரியாக இருந்துவிடக் கூடாது என்ற நல்ல அபிப்பிராயத்தில்தான் நான் இதைச் சொல்கின்றேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் இரண்டு வழித்தடங்கள் அளிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள். ஆனால் என்னுடைய தொகுதிக்கு ஒரு வழித்தடம் மட்டும்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னொரு வழித்தடத்தையும் அளித்து உத்தரவிட வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் இன்றைக்கு காவல் துறையினருக்கு சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆசிரியர்களுக்கு இணையான சம்பளம் வழங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அடுத்து, கள்ளச்சாராயம் இன்றைக்கு தமிழகத்திலே மிகவும் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கின்றது. எனது தொகுதியான பரங்கிப்பேட்டையை எடுத்துக் கொண்டால் அங்கே ஏற்படுகின்ற அனைத்துப் பிரச்சினைகளுக்குமே அடிப்படையாக இருப்பது இந்தக் கள்ளச் சாராயம்தான். அதுமட்டுமல்ல, புதுச்சத்திரம் காவல் நிலையத்திற்குட்பட்ட இடத்திலும் சரி, சேத்தியாதோப்பு காவல் நிலையத்திற்குட்பட்ட பகுதியாக இருந்தாலும் சரி, இந்தப் பகுதிகளில் எல்லாம் கள்ளச் சாராயம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. [illegible] காவல் துறையினர்தான் அவர்களுக்கு ஊக்கம் அளித்துக் [illegible] இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே [illegible] கடமைப்பட்டிருக்கிறேன்.



1998 மார்ச் 31] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

அதுமட்டுமல்ல, இன்றைக்கு பட்டா வழங்குவதற்கு நமது அரசு மிகவும் அதிகமான தொகையை ஒதுக்கி, பட்டா வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் 1992-லே பட்டா வழங்கப்பட்ட, பரங்கிப்பேட்டை, அகரம் வாழ் காலனியிலே இருப்பவர்களுக்கு இன்னும் பட்டா நிலங்கள் எல்லாம் அளந்து கொடுக்கப்படாமல் இருக்கின்றது. எனவே, அவர்களுக்கு எல்லாம் பட்டா நிலங்களை அளந்து கொடுக்கவேண்டும்.

மேலும், அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள், நெடுஞ்சாலையிலே இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து பரங்கிப்பேட்டைக்குச் சென்றுதான் படிக்க வேண்டி இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியிலே, அகரம் கிராமத்திலே ஒரு தொடக்கப்பள்ளியை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வளையமாதேவி என்ற ஊரிலே கிட்டத்தட்ட 10 வருடங்களாக பட்டா கொடுப்பதிலே பிரச்சினை செய்து கொண்டு இருக்கிறார்கள். இன்று வரையிலும் பட்டா வழங்கப்படவில்லை. 60 பட்டாக்கள் வழங்குவதற்கு நிலங்கள் எல்லாம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும், இதுவரைக்கும் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்கும், பட்டா வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நெசவாளர்கள் எல்லாம் இன்றைக்கு உண்ணாவிரதம் மற்றும் வேறு பல போராட்டங்களை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நெசவாளர்கள் பிரச்சினையில், விசைத்தறிக்கு என்று 11 இரகங்கள் சொல்லப்பட்டு, அதற்குமேல் உற்பத்தி செய்யக்கூடாது என்று ஒரு சட்டம் ஏற்கெனவே இருந்தது. ஆனால், அது இன்றைக்கு கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதனால்தான் இன்றைக்கு இவ்வளவு பிரச்சினைகள் எல்லாம் ஏற்படுகின்றன. ஒரு கைத்தறி நெசவாளி, ஒரு கைலி நெய்ய வேண்டும் என்று சொன்னால், அவர்களுக்கு 77 ரூபாய் அடக்கம் ஆகின்றது. ஆனால், அதேசமயத்தில், விசைத்தறிக்காரர்கள் உற்பத்தி செய்யக்கூடிய கைலிக்கு 50 ரூபாய்தான் அடக்கம் ஆகின்றது. இத்தகைய வித்தியாசத்தினால்தான், கைத்தறிகள் எல்லாம் தேக்கம் ஆகிக் கொண்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியில்கூட, சுமார் 15 இலட்சம் ரூபாய்க்கு மேலாக கைத்தறி கைலிகள், மற்றும் சேலைகள் எல்லாம் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றுக்கு எல்லாம் அரசு உடனடியாக ரிபேட் கொடுத்து, நெசவாளர்களுடைய பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, மரச் செக்குமூலம் எண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய சமையல் எண்ணெய்களுக்கு எல்லாம் இன்றைக்கு நாம் வரிவிலக்கு அளித்து இருக்கிறோம். ஆனால், மின்சக்தி பயன்படுத்தி மர செக்கு மூலம் எண்ணெய் உற்பத்தி செய்பவர்களை இன்றைக்கு, 'இண்டஸ்ட்ரியல் லிஸ்ட்டிலே' வைத்து இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு வரிச்சுமை அதிகமாக இருக்கின்றது. அவர்களுடைய மூலதனப் பொருட்களுக்கு ஏற்கெனவே வரியில்லாமல் இருந்தது. ஆனால் கடந்த ஆட்சியிலே வரி போட்டு, அவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, அந்த வரியை அரசு நீக்கி, அவர்களுக்கு வாழ்வளிக்கவேண்டும். மேலும் அவர்களுக்கு மூலதனப் பொருட்கள் என்ற வகையில், 80 கிலோ அளவிற்கு நாம் வழங்கிக் கொண்டு இருக்கிறோம். இன்றைக்குள்ள விலைவாசி ஏற்றத்தைக் கருத்தில் கொண்டு, அதை 100 கிலோவாக உயர்த்திக் கொடுத்து அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் மோட்டாரை இயக்குகின்ற இயக்குநர்கள் இன்றைக்கு 250 ரூபாய் சம்பளத்திலே வேலை செய்கிறார்கள். அவர்கள் நாள் ஒன்றுக்கு 9 மணி நேரம் வேலை செய்கிறார்கள். காலையில் 3 மணி நேரம் தண்ணீரை ஏற்றுகிறார்கள். மதியம் 3 மணி நேரமும், இரவு 3 மணி நேரமும் ஆக மொத்தம் 9 மணி நேரம் அவர்கள் வேலை செய்கிறார்கள். எனவே, அவர்கள் 250 ரூபாய் சம்பளத்தை வைத்துக் கொண்டு, வேறு வேலையை அவர்கள் இடைப்பட்ட நேரத்திலே பார்க்க முடியாத காரணத்தால், அவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பசிப்பிணி மருத்துவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையின் மீது இரண்டாவது நாளாக நடைபெறும் விவாதத்தில் கலந்து கொண்டு, கருத்துக்களைச் சொல்லக் கிடைத்த இந்த வாய்ப்புக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





'செயல்படுத்தப்படுவதற்குப் பல ஆண்டுகள் ஆகக்கூடிய பெருமிதப் பகட்டான திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்னுரிமை தருவதை விடுத்து, பொதுமக்களுக்கு அவசியமான உணவு, உடை, உறையுள், குடிநீர், சாலைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் மழைநீர் வடிகால் போன்ற அடிப்படை வசதிகளை விரைந்து வழங்கும் திட்டங்களுக்கே முக்கியத்துவம் அளிப்பது என்ற தலையாய கொள்கை முடிவை இந்த அரசு எடுத்துள்ளது' என ஆளுநர் உரையில் குறிப்பிட்டவாறு தலையாய கொள்கையிலிருந்து தடம் பிறழாமல், இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று முதல்வர் அவர்கள் இந்த அரசின் கொள்கை முடிவினை முதலிலேயே குறிப்பிட்டிருப்பது இந்த நிதிநிலை அறிக்கையின் சிறப்புப் பாயிரமாக அமைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களில் 60, 70 விழுக்காட்டினர், நடுத்தர மற்றும் அதற்கும் கீழே ஒருபடி, அதாவது Middle class and Lower middle class என்ற கணக்கில், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்கள் நன்றிப் பெருக்கால் 'நா' தடுமாற வரவேற்றுப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற, தகுதி வாய்ந்த நிதிநிலை அறிக்கையை முதல்வர் அவர்கள் அளித்துள்ளார்கள்.

பிற்பகல் 12-30

தொன்றுதொட்டு நம் தமிழகத்தில் பெரும்பாலான குடும்பங்கள் வாழும் முறைக்குத் துணையாக அமைந்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையை, ஒரு தலைவர், ஒரு முதல்வர் அளித்துள்ள பட்ஜெட் என்று சொல்வதைவிட ஒரு தாய் தன் மகளுக்கு வகுத்து, தொகுத்துக் கொடுத்துள்ள பட்ஜெட் என்று சொன்னால் அது மிகையாகாது என்றே நான் கருதுகிறேன்.

இம்மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், ஏறத்தாழ எல்லோரும், சமையல் எண்ணெய்க்கு முழு வரி விலக்கு அளித்தமைக்காக நன்றி சொல்லி அமர்ந்திருக்கிறார்கள். தமிழகத்தின் தாய்க் குலத்தின் சார்பில் ஒரு வரியில் நன்றி என்று சொல்லிவிடாமல் ஒரு இலக்கியப் பாடலை நடுவிலே சொல்லி நன்றி சொல்லலாம் என்று நான் கருதுகின்றேன்.

துணைத் தலைவர் அவர்களே, நடுத்தரக் குடும்பங்களின் வாழ்க்கை முறையைப் படம் பிடித்துக்காட்டும் ஒரு குறுந்தொகைப் பாடல்:

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇ
குவளையுள்கண் குய்புகைக் கமழ
தான் துதழ்தட்ட தீம் புளிப்பாகர்
இனிதெனா கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்தன்று ஒண்ணுதல் முகனே"

கெட்டித் தயிர் - அடர்த்தியின் காரணமாக மேற்புறத்தில் வெடித்து கூரிய முள்ளின் முனை போன்ற தோற்றத்தை அளிக்கின்றது. காந்தள் மலரின் இதழ்களைப் போன்ற, சிவந்த மென்மையான விரல்களால் வீட்டின் தலைவி அந்தத் தயிரைப் பிசைகின்றாள். அவளுடைய கவனமெல்லாம் கணவனுக்காகச் சமையல் செய்வது. ஆகவே தன் கைகளையேகூட கழுவ மறந்து அவசரத்தில் தன் புடவைத் தலைப்பிலேயே துடைத்துக் கொள்கிறாள். குவளை மலர் போன்ற அவளுடைய கண்கள், "வரி குறைக்கப்பட்ட மசாலாப் பொடிகளை அந்தத் தயிரில் அளவோடு கலந்து - வரி முழுவதுமாக நீக்கப்பட்ட எண்ணெயைவிட்டு, அவளுடைய சந்தோஷத்தின் வெளிச் சிதறல் போன்று, அதிலே அக்கடுகு வெடித்துச் சிதற தாளிதம் செய்ததால் வெளிப்படுகின்ற குய்புகை - மென்மையான புகையால் நீர்க்கோர்த்துக் கலங்குகின்றது. தான் செய்து முடித்த மோர்க் குழம்பு கணவனுக்குப் பரிமாறப்பட்டு, வயிறார உண்டபின் அவனும் இனிது இனிது என மகிழ்வோடு, நிறைவோடு பாராட்டுகின்றான். சமையல் செய்த களைப்பு கணவனின் பாராட்டினால் மறைய குடும்பத் தலைவி மகிழ்ச்சியடைகிறாள். இது எப்பொழுது சாத்தியம்? தலைவர் அவர்களே, (சிரிப்பு) தன் நிழலில் வாழ்கின்ற மக்களின் உண்மை நிலை உணர்ந்து செயல்படுகின்ற திட்டங்களை வகுத்துச் செயல்முறைபடுத்துகின்ற ஒரு அரசு இருக்கின்ற நாட்டில் மட்டுமே இது சாத்தியம்.

இந்த நிதிநிலை அறிக்கையைக் கொஞ்சம் அக்கறையோடு, ஆழ்ந்த சிந்தனையோடு படிக்கின்றபொழுதுதான் எவ்வளவு ஈடுபாட்டோடு இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்பது புரியும்.

1995-ல் 6% ஆக சமையல் எண்ணெய் மீது விதிக்கப்பட்டிருந்த வரியை 1996-ஜூன் மாதத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் 4% என்று ஆக்கினார்கள். 4 சதவீதமாக அந்த வரி மாற்றப்பட்டது. ஒரு



முதல்வர் நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்கின்றபோது இந்த 'கமர்ஷியல் டாக்ஸ் மெஷின்', ஓடவேண்டுமென்பதற்காக, வணிகவரி இயந்திரம் ஓடவேண்டுமென்பதற்காகவாவது 4% என்று விதிக்கப்பட்ட வரியை 2% என்று ஆக்கியிருக்கலாம். பக்கத்திலே இருக்கின்ற ஆந்திர மாநிலத்தில், கர்நாடகத்தில், பாண்டிச்சேரியில் எல்லாம் இன்னமும் Edible oil மீது வரி 2%, கேரளாவில் 4% என்றிருக்கின்ற நிலையில் 20-25 கோடி ரூபாய் சமையல் எண்ணெய்கள்மீது விதிக்கின்ற வரியால் மட்டும் அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கும் என்பதற்காக 4%ஐ 2% ஆகக் குறைத்து, டாக்டர் கலைஞர் வரி விதித்திருப்பார்கள் என்று சொன்னால், வழக்கமாகக் குறைப்பாட்டு பாடுகின்றவர்கள்கூட வாயைப் பொத்திக் கொண்டுதான் சும்மா இருந்திருப்பார்கள். ஆனால் குழம்பு செய்ய, அப்பளம் பொரிக்க, கறிகாய்கள் சமைக்க என்று ஒருநாள் சமையல் பட்டியலில் தவிர்க்க முடியாத இடத்தினை வகிக்கின்ற சமையல் எண்ணெய்கள் எல்லாவற்றிற்கும் முழுமையாக வரி விலக்கு அளித்து வாணிபத்திற்கு விதிக்கப்பட்டிருந்த, டி.ஓ.டி.- 'டர்ன் ஓவர் டாக்ஸ்' 2%, அதையும் இரத்து செய்து - நேரடியாக 4% மறைமுகமாக 6% என்று இந்த அத்தனை பலனும் நேரடியாகக் குடும்பத் தலைவிக்குச் சென்று சேரவேண்டும் என்று எண்ணி, தீர்மானித்து வரிவிலக்கு அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், இது தாயுள்ளமாக இல்லாமல் வேறு என்னவாக, வேறு எதுவாக இருக்கமுடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய சிந்தனைக்கே விட்டுவிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

தலைவர் அவர்களே, மனித இயல்பு, எதிர்பார்ப்பு என்பது பேரவை உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த ஒன்று. பொதுமக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள்? அந்த வரி விலக்கு வனஸ்பதிக்கு உண்டா, டால்டாவிற்கு உண்டா என்று எதிர்பார்க்கிறார்கள். இழுத்தவாறு கேட்கிறார்கள். சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள் அனைத்திற்கும் வரி விலக்கு என்று சொல்லும்பொழுது, Hydrogenated vegetable oil என்று அழைக்கப்படும் 'வனஸ்பதியை' இப்பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறார்கள். சராசரியாக 3-கிலோவிலிருந்து 4 கிலோ சமையல் எண்ணெய் ஒரு குடும்பத்தின் மாதத் தேவையாக இருக்கிறது என்று சொன்னால், இனிப்புப் பலகாரம் செய்ய, ஸ்பெஷல் ஐடெம்கள், பிரியாணி போன்ற ஸ்பெஷல் உணவு வகைகள் தயார் செய்ய ½ கிலோ, 1 கிலோ என்று வனஸ்பதி வாங்கப்படலாம். வனஸ்பதி நடுத்தர வர்க்கத்தின், ஏழைகளின் நெய்.

[1998 மார்ச் 31

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல பசி அதிகமாக இருக்கிற நேரத்திலே இவர்கள் பிரியாணி என்றெல்லாம் சொல்லி, இந்தப் பசியைக் கிளப்பிக் கொண்டு இருக்கிறார்கள். (சிரிப்பு)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செவிக்கு உணவு இல்லாதபோதுதானே வயிற்றிற்கும் சிறிது ஈயப்படும். இப்போது செவிக்கு உணவாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையினுடைய சாராம்சத்தை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எனவே, கனிவோடு அதனைக் கேட்க வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வனஸ்பதி, நடுத்தர வர்க்கத்தின், ஏழைகளினுடைய நெய் என்பதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இதற்கும் முழு வரிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

Sun Flower Oil, Cotton Seed Oil, Palm Oil ஆகியவற்றின் உருகுநிலை, உறைநிலை வெப்பத்தினைச் சரியான அளவுக்குக் கொண்டு வந்து Hydrogen செலுத்திக் கெட்டிப்படுத்தப்பட்டு வனஸ்பதி என்ற பெயரில் விற்கப்படும் எண்ணெய்க்கும் முழு வரிவிலக்கு அளித்து வீட்டுத் தலைவிகளுக்கு இன்னும் ஓர் இனிப்பு.....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர் நல்ல திறமையான டாக்டர் வனஸ்பதி ரொம்பக் கொழுப்பு நிறைந்த எண்ணெய் என்பது அவர்களுக்குத் தெரியும். (சிரிப்பு) அதற்குப்போய் இவ்வளவு வக்காலத்து வாங்கத் தேவையில்லை. (சிரிப்பு)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** Occasional-ஆக உபயோகிக்கப்படும்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களும் இனிமேல் வனஸ்பதியைக் குறைத்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு)

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** நான் வனஸ்பதியை உபயோகிப்பதே இல்லை. (சிரிப்பு) அந்தச் சுவையே எனக்குத் தெரியாது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளமில்லாத என்னுடைய உள்ளத்தின் காரணமாக, நான் இப்படி இருப்பதைத் தாங்கள்



1998 மார்ச் 31] [டாக்டர் காஞ்சனா கமலநாதன்]

தயவுசெய்து பரிகசிக்க வேண்டாம். (சிரிப்பு) ஒருபுறம் bying capacity, அதாவது வாங்கும் தகுதியை அதிகரிக்கும் வகையில் திருத்திய ஊதிய விகிதங்கள், நகர ஈட்டுப்படி with Retrospective Effect கொடுத்து மறுபுறம் தேவையான வரிவிலக்கு அளித்து அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் குறைத்து—Super !—யார் செய்வார்கள்? எந்த அரசு இதுவரையில் செய்திருக்கிறது? கைமாறு வேண்டாக் கட்டுப்பாடு அல்லவோ இது. 'மாமழையாய்த் தமிழக மக்களின் நலம் காக்கும் கழகத் தலைவர், முத்தமிழ் அறிஞர், தமிழக 'முதல்வர் டாக்டர் கலைஞர் வாழ்க' என வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தொகுதிப் பிரச்சினைகளுக்கு வருகிறேன். ரூ.250 கோடி மதிப்பீட்டில் 61 கிலோ மீட்டருக்கு கிருஷ்ணகிரியிலிருந்து ஓசூர் வரை செல்லும் தேசிய நெடுஞ்சாலை, நான்கு வழிச் சாலையை பாண்டிச்சேரியிலிருந்து கிருஷ்ணகிரி வரையில் உள்ள 171 கிலோ மீட்டர் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி அறிவிப்பு—என்ற அறிவிப்புகள் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஏற்கெனவே என்.எச் 7 என்றும், என்.எச் 46 என்றும் இரண்டு தேசிய பெரு வழித்தடங்கள் கிருஷ்ணகிரி வழியாகத்தான் செல்கின்றன. இந்த நான்கு வழிச்சாலை என்னும் சிறப்பும் சேர்ந்து எத்தனை பெரிய மையமாக கிருஷ்ணகிரி மாறும் என்பதை நான் சொல்லி அரசாங்கம் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. இத்தனை பெரிய ஊருக்கு இன்னமும்கூட ஒரு நல்ல பேருந்து நிலையம் இல்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகின்றேன். ஒரு நாளைக்கு 700 வாகனங்கள் கிருஷ்ணகிரி நகரத்திற்குள் வந்து போய்க் கொண்டிருக்கின்றன. நிலையான பேருந்து நிலையம் இல்லை. ஒரு மிகச் சிறிய பேருந்து நிலையத்தில் சகலவிதமான சங்கடத்திற்கும் பஸ் ஓட்டுநர்களும், பொதுமக்களும், ஆட்படுத்தப்பட்டு, கிருஷ்ணகிரியிலுள்ள தற்காலிகப் பேருந்து நிலையம் இயங்கி வருகின்றது. இந்த நிலையை மாற்றி ஊருக்கு வெளியே புறவழிச் சாலையையொட்டி, நகராட்சி எல்லைக்கு மிக அருகில் ஒரு பெரிய பேருந்து நிலையத்தை இந்த நிதி ஆண்டிலேயே கட்டித்தர வேண்டும் என்று மெத்தப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ரொம்ப முக்கியமான விஷயம், ஒரு நிமிடம் கொடுங்கள். இம்மாநிலத்தில் 1,408 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிரந்தரக் கட்டடங்களில் இயங்கும் என்ற அறிவிப்பும் நிதி ஒதுக்கீடும், அரசு மருத்துவமனைகளும், மருந்தகங்களும் பராமரிக்கப்படும் பணிக்கு

ரூ. 23.6 கோடி என்று நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளதும், மருந்துகளுக்காக நடப்பாண்டில் ரூ.106 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதும், மக்கள் நல்வாழ்வும், மருத்துவமும் டாக்டர் கலைஞர் ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு மகோன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது என்பதற்குச் சான்று பகர்கின்றனவாக உள்ளன.

இந்தத் துறையில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டியது அரசு மருத்துவமனைகளில் புற நோயாளிகள் அன்றாடம் கவனிக்கப்படும் பகுதி. Out-patient Department. இது குறித்து என் கருத்தை, நேரமில்லாத காரணத்தினால், அந்த மானியத்தில் நீங்கள் வாய்ப்புக் கொடுத்தால் நான் விரிவாகப் பேச விழைகிறேன். நான் நேற்று வினா நேரத்தில் கேட்டதுபோல், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் மகப்பேறுப் பிரிவிற்கு ஒரு புதிய கட்டடம் அவசியம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். மகளிர் மேம்பாட்டிற்காக நடப்பு ஆண்டில் ரூபாய் 55 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் ரூ.91.20 கோடியாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய நினைவுத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் வருமாண்டிற்கான ஒதுக்கீடு 60,000 பெண்கள் நிதியுதவி பெறும் வகையில் 60 கோடி ரூபாயாக அதிகப்படியாக ஒதுக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பும், பெண்ணின மேம்பாட்டிற்காகப் பாடுபடுவது டாக்டர் கலைஞர் அரசு என்பதற்கு அடையாளங்களாக உள்ளன என்று கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கையினுடைய 49 பக்கங்களைக் கொண்ட 180 அம்சங்களைக் கொண்ட இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்தேன். சுவைத்தேன். எங்கெங்கோ தேடினேன். காணாத ஒன்றை இங்கே நான் முன்வைக்க விரும்புகிறேன். 1989-லே தொடங்கப்பட்டு இன்று வரையிலே பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் வழியிலே இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 107 ஜாதி மக்களுக்காக இட ஒதுக்கீடு வழங்கி வருகிறார்கள். இந்த இட ஒதுக்கீட்டிலே அன்று சொன்ன மாதிரி அவர்கள் வழங்கிய சுவைமிகுந்த மாங்கனியைச் சுவைத்தோம். அதனுடைய குறைகளையும்



எடுத்துச் சொல்லி வருகிறோம். இப்படி இந்த இட ஒதுக்கீட்டிலே இருக்கக்கூடிய நீண்ட நாளைய குறையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணராதவர் இல்லை. ஏனென்று சொன்னால் சமூக நீதியைப் பற்றி நன்றாக அறிந்தவர். இந்தக் குறைகளை எல்லாம் அவர் போக்க வேண்டும் என்று சொல்லி நாங்கள் நீண்ட நாட்களாக கோரி வந்தாலும்கூட ஏனோ தெரியவில்லை இந்தக் குறைபாடுகள் களையப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 107 ஜாதி மக்களுக்கும் 20% போதாது என்ற நிலையிலே இன்னும் கூடுதலாக வழங்க வேண்டும் என்பது ஒரு கோரிக்கையாக இருக்கின்ற அதே நேரத்திலே இங்கே இந்த 20% .....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றைக்குப் பேசும்போதும் 107 ஜாதிகள் என்று சொன்னார்கள். இன்றைக்கும் அதைத் திருப்பிச் சொல்கின்றார்கள். அதைக் கேட்கும்போது 'ஏ அப்பா 107 ஜாதிகளுக்கு 20% தானா' என்று எண்ணத் தோன்றும். இந்த 107 ஜாதிகள் என்பதில் பெரிய சமூகமாக இருக்கின்ற சமூகம் வன்னியர் சமுதாயம். மிகவும் பிற்படுத்தப்பட்டவர் என்பதிலே உள்ள வன்னியர் சமுதாயம், பிறகு முக்குலத்தோர் பிரிவிலே உள்ள சீர் மரபினர், மற்ற வகுப்பினர் எல்லாம் 10,000 பேர், 2,000 பேர், 1,000 பேர், 500 பேர் என்றுள்ள பிரிவுகள் எல்லாம் இருக்கின்றன; ஜாதிகள் எல்லாம் இருக்கின்றன. எனவே அதையெல்லாம் வைத்து 107 ஜாதி, 107 ஜாதி என்று சொல்லி இதற்கு 20% தானா என்கின்ற ஓர் அங்கலாய்ப்பான நிலையை உருவாக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி ஏற்கெனவே பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே நான் விளக்கம் அளித்திருக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளைத்தான் இங்கே நான் மனமுவந்து எடுத்துச்சொல்ல வருகை தந்திருக்கிறேன். ஆகவே, இப்படி எண்ணிக்கையிலே குறைந்த சமுதாயத்தைக் கொண்டவர்கள் நிறைய பேர் இருந்தாலும்கூட 107 சமூக மக்களுக்கும் இங்கே சரியான நீதி கிடைக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. பெரும்பான்மையாக இருக்கக்கூடியவர்கள் சில இடங்களிலே சில நேரங்களிலே தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் பங்கு கிடைக்காமல் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். அதே நேரத்திலே

மிகவும் குறைந்த எண்ணிக்கையிலே இருக்கக்கூடிய சமுதாய மக்களும் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய பங்கு உரிமை கிடைக்கவில்லை என்று சொல்லி அவர்கள் பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையிலேதான் இந்த 20% என்பதை இன்னும் கூடுதலாக்கி அங்கே மக்கள் தொகை அடிப்படையிலே வழங்கினால் சாலப் பொருத்தமாக இருக்கும் என்ற அந்தக் காரணத்தினாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடப்பாண்டிலே கருணைகூர்ந்து வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே மீண்டும் இந்த 20% என்பதைக் கூடுதலாக்கி மக்கள் தொகை அடிப்படையிலே தனி ஒதுக்கீடாகவோ அல்லது தொகுப்பு ஒதுக்கீடாகவோ வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் - தலைமை)

அதேநேரத்திலே இந்த இட ஒதுக்கீட்டைப் பொருத்தவரையிலே அரசினுடைய வேலைவாய்ப்பிலே, கல்வித் துறையிலே பயன்படுத்துகின்ற அதேநேரத்திலே எல்லா நிலையிலும் பயன்படுத்தினால்தான் அது சமூக நீதியாகும். பதவி உயர்விலே சில துறைகளிலே பயன்படுத்தப்படுகிறது. அதேநேரத்தில் அரசு சார்பு நிறுவனங்கள் என்று சொல்லக்கூடிய போக்குவரத்துக் கழகங்கள், கூட்டுறவு துறை, மின்வாரியங்கள் போன்ற நிலைகளிலே இல்லை. ஆகவே நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் அது அரசுத் துறையாக இருந்தாலும் சரி, தனியார் தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் எதுவாக இருந்தாலும் சரி, நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா நிலைகளிலும், எல்லா இடங்களிலும் இட ஒதுக்கீடு வேண்டும் என்பதுதான். ஆகவே இந்த நிலையை உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலே எல்லா நிலைகளிலும் இட ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேநேரத்தில் இங்கே பிளஸ்-2 என்று வருகிறபோது மருத்துவப் படிப்பாக இருந்தாலும் சரி, பொறியியல் படிப்பாக இருந்தாலும் சரி, அங்கேதான் இட ஒதுக்கீடு அமலாக்கப்படுகிறது. ஆனால், அந்தப் படிப்புக்கு தயாராகின்ற பிளஸ்-1 வகுப்பில் I Group, II Group, Vocational Group என்று எல்லாம் பிரிக்கப்படுகிறார்கள். ஆகவே, இந்த இட





ஒதுக்கீடு என்பது பிளஸ்-1 வகுப்பிலே கொண்டுவர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மருத்துவப் படிப்பாக இருந்தாலும் சரி, எந்தப் படிப்பாக இருந்தாலும் மிகப் பெரிய நகரங்களில் படிக்கக் கூடியவர்களுக்குத் தான் அந்த வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆகவே, மக்கள் தொகை அடிப்படையில் மாவட்டவாரியாக இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கருத்தை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே மக்கள் தொகை அடிப்படையில் இடஒதுக்கீடு வேண்டுமென்ற சமூக நீதிக் கொள்கையை இங்கே இதற்கு முன்னால் வெங்கடகிருஷ்ணன் கமிஷன் அமைக்கப்பட்டு மக்கள் தொகை கணக்கிடப்பட வேண்டும் என்ற அந்தக் கமிஷன் இன்றுவரையில் நிலுவையில் இருக்கிறது. ஆகவே அது ஏன் என்று தெரியவில்லை. நிலுவையில் இருக்கக்கூடிய அந்த வெங்கடகிருஷ்ணன் கமிஷனைத் துரிதப்படுத்தி மீண்டும் இங்கே அமல் செய்வதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களாகச் சேருகிறவர்கள் ஒவ்வொரு ஊரிலும் அந்தந்த ஊரிலுள்ள மிகப்பெரும்பான்மையான சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகச் சேருவார்கள். ஒரு ஊரில் வன்னிய சமூகமே மிகுதியாக இருக்கிற இடத்தில் அந்தப் பள்ளியில் நூற்றுக்கு 90 மாணவர்கள், 80 மாணவர்கள் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சேருவார்கள். இராமநாதபுரம், சிவகாசியாக இருந்தால் முக்குலத்தோர் சமூகம்தான் 100-க்கு 90 பேர் சேருவார்கள். விருதுநகரில் நாடார்கள் 100-க்கு 80 பேர் சேருவார்கள். ஆகவே அது ஊரைப் பொறுத்து அமைவதால் எல்லோரும் படிக்கவேண்டும் என்ற பொதுக் கொள்கையைத்தான் வலியுறுத்த முடியுமே தவிர இந்த வகுப்புவாரி உரிமை நீதியில் எனக்கு நம்பிக்கை இருந்தாலும்கூட பள்ளிப் படிப்பில் அதைக் கொண்டுவந்து வலியுறுத்துவதற்கு இடம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவேதான் நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்வது, மக்கள் தொகை அடிப்படையில் அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்ப மக்கள்

தொகை அடிப்படையில் வழங்குவீர்கள் என்று சொன்னால் அது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மணி அவர்கள் இதற்கெல்லாம்கூட அரசாங்கத்லதை எதிர்பார்க்கத் தேவையில்லை. மக்கள் தொகையே அந்த அமைப்பை உண்டாக்கி விடுகிறது. ஊரில் இருக்கிற மக்கள் தொகையே அந்த நிலையை உண்டாக்கி விடுகிறது. ஒரு மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கு உரியவர்கள் கிடைப்பதில்லை. இன்னொரு மாவட்டத்தில் அதே தாழ்த்தப்பட்ட மக்கள் சற்று அதிகமான விகிதாச்சாரத்தில் நமக்குக் கிடைப்பார்கள். எனவே பணிகளுக்கு எடுக்கிறபோது விகிதாச்சார அடிப்படையிலே எடுக்கலாமே தவிர பள்ளிக்கூடங்களுக்கு, எல்லா இடத்திலும் வளரவேண்டிய கல்விக்கு, பரவலாக இடம் பெறவேண்டிய இப்படிப்பட்ட காரியங்களுக்கு இந்த ஏற்பாடுகள் செம்மையாக அமையாது.

இன்னும் சொல்லப்போனால் மலைவாழ் மக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். சில மாவட்டங்களில்தான் பள்ளிகளில் இடம் கொடுத்தால், கல்லூரிகளில் இடம் கொடுத்தால் வந்து சேரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. நீலகிரி மாவட்டத்திலே உள்ள மலைவாழ் மக்கள், அந்த மாவட்டத்தில் நம்முடைய விகிதாச்சார அடிப்படையில் இடம் பெற முடியாத நிலைமைக்குக்கூட சிலபேர் ஆளாகிறார்கள். ஆகவே, பொதுக் கொள்கை என்று வருகின்றபோது சில இடங்களில் சில இடர்ப்பாடுகள் ஏற்படும். ஆகவே, அரசாங்கமே இந்த விகிதாச்சாரத்தைக் கொண்டுவந்து புகுத்தினால் முறைகேடுகளுக்கு அதுவே இடம் ஆகிவிடும். ஆகவே, இயற்கையாகக் கிடைக்கக்கூடிய நீதியை நாம் ஏற்றுக்கொண்டு நீதி கிடைக்க முடியாத கட்டத்தில்தான் சமூக நீதி ஆணையை நாம் மேற்கொள்ளவேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக்காக நடந்து முடிந்த தொடர் சாலை மறியல் போராட்டத்திலே உயிர் நீத்த அந்தத் தியாக மறவர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். உங்களை



எல்லாம் அந்த ஒரு
மீண்டும் நான் கனிவோடு கேட்டுக்கொள்ளுவது உயர்த்தித்
இலட்சம் ரூபாயை நீங்கள் 5 இலட்சம் ரூபாயாக
தரவேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்னர் மொழிப் போர் தியாகிகளுக்கு, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு எல்லாம் நீங்கள் பட்டயங்கள் வழங்கி கௌரவித்திருக்கிறீர்கள். ஆகவே அந்த வகையில் இந்த நாட்டில் இருக்கக்கூடிய பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையான சமூக நீதிக்காகப் போராடிய, உயிர் நீத்த, சிறைச் சென்றவர்களை இங்கே சமூக நீதிப் போராட்ட தியாகிகள் என்று சொல்லி நீங்கள் அவர்களை கௌரவிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின் வாயிலாக உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். நமக்குள்ள ஒப்பந்தமே 5 நிமிடங்கள்தான். அதனால் நீங்கள் ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்களின் பதிலுரைகள் எல்லாம் வந்த காரணத்தால் சற்று நீட்டித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு மணிக்கு ஆரம்பித்தீர்கள். அதனால்தான் கூடுதலாகவே நேரம் கொடுத்திருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 8 ஆம் வகுப்பு வரையிலே கட்டாயக் கல்வித் திட்டம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அந்தக் கட்டாயக் கல்வித் திட்டமே சொல்லப்படவில்லை. ஆகவே, மீண்டும் இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம், பத்தாம் வகுப்பு வரையிலே கட்டாயக் கல்வி வேண்டும், அது—

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆண்டு ஓர் அரசாங்கம் ஒரு கொள்கையைச் சொல்லுமானால், அந்தக் கொள்கை தொடர்கிறது என்று பொருள். அதை நிறைவேற்றுவதிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம் என்று பொருள். ஆக, ஒவ்வோர் ஆண்டும் சொல்ல வேண்டியதில்லை. அது புதிதாக அறிவிக்கப்படுகிறபோதுதான் அந்த மாதிரி ஒரு கொள்கையைச் சொல்ல

வேண்டிய அவசியம் வரும். சமூக நீதிக் கொள்கையாக இருந்தாலும் சரி, மொழிக் கொள்கையாக இருந்தாலும் சரி, நடைமுறைத் திட்டங்களாக இருந்தாலும் சரி, ஓர் அரசு அறிவிக்கிற காரியத்தை, தொடர்ந்து மேற்கொண்டு, 3, 4 ஆண்டுகளில், 10 ஆண்டுகளில் அதை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கும். அந்த முறையில் இப்பொழுதும் முயற்சிக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** தமிழ்நாடு முழுவதும் இன்று ஓராசிரியர் பள்ளிகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அந்த ஓராசிரியர் பள்ளிகளையெல்லாம் மாற்றியமைத்து இன்னும் கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பிளஸ்-2 வரையிலே மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டது. அதேபோல, 10ஆம் வகுப்பு படித்து முடித்த பிறகு ஐ.டி.ஐ-க்குச் செல்லக்கூடிய மாணவர்கள் எல்லாம் இரண்டு ஆண்டுகள் படிக்கிறார்கள். அவர்களுக்கும் மேலும் இரண்டு ஆண்டுகள்தான் ஆகிறது. ஆகவே, இந்த ஐ.டி.ஐ. வரையிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினரைப் பொறுத்தவரையிலே, மற்றத் துறையினரைக் காட்டிலும், நேரம், காலம் பார்க்காமல் உழைக்கக்கூடிய பொறுப்பு காவல்துறையினருக்கு இருக்கிறது. அவர்களுக்கு ஓய்வு என்பதே கிடையாது. எந்த நேரத்திலும், எப்படிப்பட்ட பணிகள் வேண்டுமானாலும் வரலாம். ஆகவே, அந்த வகையிலே 24 மணி நேரமும் என்று இருக்கக்கூடிய காவல்துறை பணியாளர்களுக்குக் காலக்கெடு நிர்ணயிக்கக்கூடிய வகையிலே, கால அளவு குறிப்பிடக்கூடிய வகையிலே, குறைந்தது 8 மணி நேரமாவது என்று சொல்லக்கூடிய வகையிலே அவர்களுடைய கால அளவை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே காவல் துறை பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் குறைவாக இருக்கிறது. ஆகவே, எல்லா நிலைகளிலும் ஊதிய உயர்வு வழங்குவதோடு பத்தாண்டுகளுக்கு ஒருமுறை அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சத்துணவுப் பணியாளர்கள், நியாயவிலைக் கடைகளிலே பணியாற்றக்கூடிய பணியாளர்கள், வனத்துறை கடைநிலை ஊழியர்களெல்லாம் நிரந்தரம் ஆக்கப்படாமல் குறைந்த ஊதியம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களையெல்லாம் நிரந்தப்படுத்தி ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கவும்.

**திரு. ஜி.கே. மணி:** மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திலே மேற்பார்வையாளராக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்த 220 பேரும் பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள். ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுகிறார்கள். வரக்கூடிய செப்டம்பர் மாதத்தோடு அந்தத் திட்டம் முடிவடைகிறது. அவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். ஆகவே, மீண்டும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையிலே, தொடர்ந்து பணியாற்றுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல, சர்க்கரைத் துறையிலே பணியாற்றக் கூடியவர்கள், போக்குவரத்துக் கழகங்களிலே பணியாற்றக்கூடியவர்கள், மின் வாரியத்திலே பணியாற்றக்கூடியவர்களுக்கெல்லாம், அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதிய உயர்வை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பால் கொள்முதல் விலை உயர்வு மிகக் குறைவாக இருக்கிறது. விவசாயிகள், பால் உற்பத்தியாளர்களெல்லாம் மிகவும் வேதனையோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, பால் கொள்முதல் விலை உயர்வைக் கூடுதலாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மாண்புமிகு முதலமைச்சரவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த நாட்டிலே கிராமங்களிலே எங்குபார்த்தாலும் கூரை வீடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. அவை அடிக்கடி தீப்பிடித்து விடுகிறது; அல்லது கூரை வேயக்கூடிய நிலை மாறி மாறி ஏற்படக்கூடிய காரணத்தினால் சாதாரண மக்கள் மிகவும்

[திரு. ஜி.கே. மணி] [1998 மார்ச் 31

பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, நம்முடைய அரசாங்கம் கூரை வீடே இல்லாத ஒரு நிலையை உருவாக்கக்கூடிய வகையிலே, குறைந்தது இருபதாயிரம் ரூபாயை வழங்கி, பாதி மானியத்திலே கொடுப்போம் என்று சொன்னால் அவர்கள் ஒரு பாதுகாப்பான வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு வாய்ப்பும் இருக்கும். ஆகவே, அதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வாய்ப்பளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரு நிமிடத்திற்குள் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒரு நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள் என்று சொல்லியபிறகு 3 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது, (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தொகுதி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையிலே தொகுதியைப் பற்றிப் பேசுங்கள். திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. ஜி.கே. மணி:** ஒரே நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, மானியக் கோரிக்கையிலே பேசிக் கொள்ளுங்கள். மற்றவற்றை எழுதிக் கொடுங்கள். திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், பேசுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று மாண்புமிகு முதல்வரவர்கள் பத்தாவது முறையாக நிதி நிலை அறிக்கையைக் கொடுத்ததிலே பேசக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்து எனக்குத் தெரிந்த ஒருசில கருத்துக்களை உங்கள் முன்னாலே இந்த மாமன்றத்தில் வைக்கலாம் என்று நினைக்கின்றேன்.

குறிப்பாக, மத்திய அரசு அறிவித்த அதே அளவிற்கு மாநில அரசில் பணியாற்றக்கூடிய அதிகாரிகள், ஊழியர்கள், பணியாளர்கள் 13 இலட்சம் பேர்களுக்கு 9 ஆயிரம் கோடி ரூபாயைக் கடந்த ஆளுநர் உரையிலே, நிதிநிலை அறிக்கையிலே தந்து கல்வித்துறையாக இருந்தாலும், மின்சாரத் துறையாக இருந்தாலும், மற்ற துறையாக



1998 மார்ச் 31] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

இருந்தாலும் கிள்ளித்தான் கொடுக்க முடியும் என்று கூறிய முதல்வரவர்கள் இன்று மத்திய அரசுக்கு இணையாக இங்கே மாநிலத்திலே பணியாற்றக்கூடிய அத்தனைபேருக்கும். 9 ஆயிரம் கோடி ரூபாய்—வரக்கூடிய வருமானத்தில் 50 சதவீதத்தை—அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம், அரசு எடுக்கக்கூடிய முடிவுகளை, அரசு மக்களுக்குச் செய்ய வேண்டிய காரியங்களை, சமூக நோக்கத்தோடு செய்ய வேண்டிய பணிகளை, அதிகாரிகளும், பணியாளர்களும் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த மாமன்றத்தின் கருத்தாக, இந்த அரசினுடைய கருத்தாக, எதிர்காலத்திலே இனி செயல்பட வேண்டுமென்ற நம்பிக்கையின் அடிப்படையில் அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே, வரப்போகின்ற காலங்களில் எத்தனைதான் அரசு திட்டங்களைப் போட்டாலும், சிறப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று எண்ணினாலும், முழுமையாக அதிகாரிகளும், அவர்களுக்குக் கீழே பணியாற்றுகின்ற பணியாளர்களும், அத்தனைபேரும் நாடு, தேசம் என்ற எண்ணத்தின் அடிப்படையில், எதிர்கால இளைஞர்களுடைய வாழ்வு என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்பட்டால்தான் நாடு தலைநிமிர்ந்து நிற்க முடியும். அந்த எண்ணத்தில்தான் அரசுப் பணியாளர்களுக்கு 9 ஆயிரம் கோடி ரூபாயை, பாதியை அள்ளிக் கொடுத்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையை மறவாமல் மக்களுக்கு அரசுப் பணியாளர்களெல்லாம் சேவை செய்ய வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த மாமன்றத்தின் சார்பாக, அன்போடு கேட்டு ஒரு சில கருத்துக்களை கூறலாம் என்று நான் நினைக்கிறேன். பின்னர், நேரம் கிடைக்கின்றதோ இல்லையோ.

பிற்பகல் 1-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் 1-25 வரை கிடைக்கும். அதற்கு மேலே கிடைக்காது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** ஆகவே, இன்று பல்வேறு சலுகைகள், வரியே இல்லாத நிதிநிலை அறிக்கையை பாராட்டக்கூடிய அதே நேரத்தில், மக்கள் அன்றாடம் உபயோகிக்கக்கூடிய மசாலா பொடிகளுக்கெல்லாம் வரியை நீக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதிலே சின்னம் உள்ள மசாலா பொடி அல்லது குடிசைத் தொழிலாக செய்யக்கூடிய

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [1998 மார்ச் 31

மசாலா பொடி என்று இல்லாமல் மக்கள் அன்றாடம் உபயோகப்படுத்தக்கூடிய அந்த மசாலா பொடிகளுக்கு முழுமையாக வரியை நீக்கிக் கொடுக்க வேண்டும். அதற்கு பதிலாக ஐ.எம்.எப்.எல். போன்றது, சிகரெட் போன்றது, பான் மசாலா போன்ற பாக்குகளுக்கெல்லாம் இன்னும் சிறிது அதிகமாக வரியைக் கூட்டி இதைச் சரிகட்ட முடியும் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, குடிநீருக்காக, சாலை வசதிகளுக்காக, பள்ளிக்கூடம் கட்டுவதற்காக இப்படிப் பல்வேறு வேலைகளுக்காக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி கடந்த இரண்டு ஆண்டுகளாக பொறுப்பேற்ற பிறகு சிறப்பாகச் செய்த பிறகும்கூட, மக்களுக்கு கடந்த 15 ஆண்டுகளாக இல்லாத நிலை, இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக வேண்டிய இடங்களிலெல்லாம் சாலை வசதிகள், வேண்டிய இடங்களிலெல்லாம் குடிநீர் வசதிகள், வேண்டிய இடங்களிலெல்லாம் பள்ளிக்கூட கட்ட வசதிகள் இதையெல்லாம் செய்தும்கூட ஏன் இந்தத் தேர்தலில் நம்மை ஒதுக்கினார்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிய சூழ்நிலையிருந்தாலும், சொல்ல வேண்டிய கடமை என்ற எண்ணத்தின் அடிப்படையிலே உங்கள் முன்னாலே நான் இதை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, சிறு காரியமாக இருந்தாலும், 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பது போல, இந்த அரசு கடந்த 22 மாதங்களாக உண்மையிலேயே ரேஷன் கார்டுகள் இல்லாதவர்களுக்கு கொடுக்காதது ஒரு மாபெரும் குறை.

அதேபோலக் கடந்த காலங்களிலே இலவச வேட்டி, சேலை கொடுக்கின்றபோது முழுமையாக ஓரளவிற்கு எல்லோருக்கும் கொடுத்த நிலையெல்லாம் மாறி, தற்போது இலவச வேட்டி சேலை முழுமையாகக் கொடுக்காத சூழ்நிலை உள்ளது. குண்டுவெடிப்பு சம்பவங்கள் ஒருபுறத்திலே இருந்தாலும்கூட, இன்று மக்களுக்காக ஒரு வேலையை ஆரம்பித்து அந்த வேலைக்கு திட்டமதிப்பீடு தயாரித்து அனுமதி வருவதற்கு 9 மாதம் ஆகின்றது. இதை எதிர்காலத்திலே மூன்று மாதங்களாக செய்வதற்கு அரசு தீவிரமாக நடவடிக்கையெடுக்க வேண்டும்.

மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர், திரு. கோ.சி. மணி அவர்கள் தன் சக்திக்கு இயன்றவரை குடிநீருக்காகச் செயல்பட்டு வருகிறார். அப்படியிருந்தாலும்கூட இன்று பல்வேறு பகுதிகளிலே உள்ள கடந்த காலங்களிலே போட்ட பைப்புகள் எல்லாம் மேல்நிலைத்



1998 மார்ச் 31] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

தொட்டிகளிலே தண்ணீரை ஏற்றுகின்றபோது உடைந்து விடக்கூடிய காட்சியைப் பார்க்கிறோம். முழுமையாகத் திட்டம் தீட்டப்பட்டாலும்கூட, மக்களுக்குச் சேர வேண்டிய சூழ்நிலையில் தண்ணீர் எல்லாம் முழுமையாகச் சேருவதில்லை என்பதை அன்போடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்று பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு சொன்னதுபோல நமது தோழமை உணர்வு குறைந்த காரணத்தினாலே, ரேஷன் கார்டுகள் ஒழுங்காகக் கொடுக்காத காரணத்தினாலே இந்த நிலை. பகுதி நேரக் கடையை யாரும் நினைத்துப் பார்க்க முடியாது. 200 கார்டுகள் இருந்தால்தான் என்பதைவிட மலைப்பகுதியிலே, மற்றப் பகுதியிலே எல்லாம் 50 கார்டுகள் இருந்தாலும்கூட அங்கே பகுதிநேர நியாயவிலைக் கடையை ஏற்படுத்த வேண்டும் என்று உத்தரவு போட்டு, செயல்படுத்த வேண்டும் என்று நினைத்தாலும்கூட, முழுமையாக அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே மூன்று முறை நான் சொன்னேன். அதிகாரிகளிடத்திலே 50 முறை நான் சென்றிருக்கிறேன். ஈரோடு மாவட்டத்திலே 45 கடைகளிலே, பவானி சட்டமன்றத் தொகுதியிலே 21 கடைகள் ஆரம்பித்திருக்கின்றோம். ஆனால், இன்னும் 25 இடங்களிலே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டால் அந்த அதிகாரிகள் இதைச் சொல்லி, அதைச் சொல்லி மறுக்கிறார்களேயொழிய, நியாயத்தின் அடிப்படையில் செயல்படுவதில்லை. என்னுடைய தொகுதியிலே மட்டுமல்ல, தமிழகம் முழுக்க அதிகாரிகள் முனைப்போடு செயல்பட்டு மக்களை ஈர்க்கக்கூடிய வகையில் பகுதிநேர கடையை ஏற்படுத்தி, ரேஷன் கார்டுகளை, குடும்ப அட்டைகளை ஒழுங்காக விநியோகம் செய்ய வேண்டும். பல்வேறு அருமை நண்பர்கள் எல்லாம் என்னிடத்திலே சொல்கின்றபோதெல்லாம், 10,000 ரூபாய் வருமானம் எழுதப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கெல்லாம் இப்போது 25,000 ரூபாய், 30,000 ரூபாய் என்று எழுதி—மீண்டும் நம்மீது மக்கள் வெறுப்படையக்கூடிய சூழ்நிலையிலே—அதிகாரிகள் செயல்படுகின்றார்கள் என்று கூறினார்கள். இதை நீங்கள் தெள்ளத் தெளிவாகக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். 15,000 ரூபாய், 12,000 ரூபாய் என்றிருந்த நிலையை எல்லாம் மாற்றி....

[1998 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமானத்தின் அடிப்படையிலே அரிசி வழங்குவதில்லை. தமிழ்நாட்டிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது, அரிசி தேவை என்றால் அனைவருக்கும் கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். வருமானம் என்று எழுதுவது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுடைய எண்ணிக்கையை மத்திய அரசுக்குக் கணக்குக் காட்ட, கணக்கிடக்கூடிய ஒரே காரணத்திற்காகத்தான் வருமானமேயொழிய வேறு ஒன்றுமில்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் குறிப்பிடவில்லை. எதிர்காலத்திலே தையல் மெஷின் வாங்குவதற்கு, சலவைப் பெட்டி வாங்குவதற்கு இப்படிப்பட்ட பல்வேறு சூழ்நிலையிலே இந்தக் குடும்ப அட்டையைத்தான் அடிப்படையாக வைத்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் அரசிலே இருக்கக்கூடிய அதிகாரிகள். ஆகவே, குறிப்பிட்டுத்தான் நான் சொன்னேனேயொழிய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் எந்த அதிகாரி செயல்பட்டாலும் அதை உடனடியாக அரசின் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு வரலாம். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டதைப் போல் இந்த இரு வண்ண அட்டைகள் வழங்கப்படுவது எதற்காக என்றால், அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை ஏற்கெனவே எப்படிப் பெற்றார்களோ அதுபோலப் பெற விரும்புகின்றவர்கள் இளஞ்சிவப்பு வண்ண அட்டையைப் பெற்றுக்கொண்டு, கடைகளில் அதைப் பெற்றுக்கொள்ளலாம். அரிசி தேவையில்லை, எங்களுக்குக் கூடுதலாகச் சர்க்கரை வேண்டும் அல்லது கூடுதலாக மண்ணெண்ணெய் வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள், விரும்புகின்றவர்கள் மஞ்சள் அட்டையைப் பெற்று அதன்படி அந்தப் பொருட்களைப் பெறலாம். மஞ்சள் அட்டைக்கு அரிசி இல்லை. இளஞ்சிவப்பு அட்டைக்கு அரிசி உண்டு, மற்றப் பொருட்களும் உண்டு. எனவே, இதில் வருமான அடிப்படையிலே என்ற பேச்சுக்கே இடமில்லை.



1998 மார்ச் 31]

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. குறிப்பாக கைத்தறி நெசவாளர்கள் எல்லாம் முழுமையாக அதிருப்தியாக இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கின்றோம். இந்த ஜவுளிக் கொள்கையை ஏற்படுத்தி, முத்தரப்பு கமிட்டி என்றெல்லாம் போட்டு விரைவாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். முழுமையாக அவர்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தக்கூடிய அளவிற்கு, இன்று நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகள் மற்றும் நாட்டினுடைய முதுகெலும்பாக இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினைகளை முழுமையாகக் களைவதற்கு நாம் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கடந்த நிதிநிலை அறிக்கையிலே ஆளுநர் உரையிலேயெல்லாம் கார் தொழிற்சாலை - ஹூண்டாய் கார் தொழிற்சாலை மூலமாக 12,000 பேருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை கிடைக்கும் என்றும், அது அக்டோபரிலே ஆரம்பிக்கப்படும் சூழ்நிலை பற்றியும் நீங்கள் சொல்லியிருந்தீர்கள். அதேபோல், கண்ணாடி தொழிற்சாலை மூலமாக 5,000 பேருக்கு வேலை, பொள்ளாச்சியிலே மாட்டு இறைச்சி தொழிற்சாலை மூலமாக வெளிநாட்டுக்கு அனுப்பக்கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே அங்கே வேலை என்றெல்லாம் குறிப்பிட்டிருந்தீர்கள். அதை ஏன் இதிலே சொல்லவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. இதற்கு மேலாக கிராமப் பகுதியிலே, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திற்குள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகள் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சூழ்நிலையில் விவசாயத்தைச் சார்ந்த தொழிற்சாலையை அதிகமாக, மக்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய அளவிற்கு எதிர்காலத்திலே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, சாலை வசதிகளும், நிலவளமும், நீர் வசதியும், மின்சாரமும் இருந்தாக வேண்டும்.

இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சூழ்நிலை என்னவென்றால், மூன்று மாதங்களாக மின்சாரம் தடைப்பட்டு, தடைபட்டு, மக்களெல்லாம், பொதுமக்களாக இருந்தாலும் சரி, விவசாயிகளாக இருந்தாலும் சரி,

இங்கே தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேரும், ஏன் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டது என்று அவரவர்களுக்குள்ளாகவே கேள்வி கேட்டு, என்ன காரணத்தாலோ என்று அதனாலும் நம் மேல் தேர்தலுக்கு முன்பாக மக்கள் வெறுப்பு அடைந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1-25*

கடந்த நிதிநிலை அறிக்கையிலே மரியாதைக்குரிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் குறைந்தது எதிர்காலத்திலே 7,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், 20 தனியார் நிறுவனங்கள் மூலமாக அதிலே 9 பேருக்கு மட்டும் டெண்டர் விட்டு, 1,788 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற சூழ்நிலையை எண்ணூர், தூத்துக்குடி மற்றும் சமயநல்லூர் போன்ற பகுதிகளில் ஏற்படுத்திக் கொடுத்து, கடந்த நிதிநிலை அறிக்கையிலே சொன்னார்கள். இப்பொழுது எண்ணூரில் 1,000 மெகா வாட்.... (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஐந்து நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து நிமிடங்களெல்லாம் கொடுக்க முடியாது. இன்னும் ஒரு நிமிடம்தான் என்று சொன்னேன். இன்னும் 50 வினாடிகளில் உங்கள் உரையை முடிக்க வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த உறுப்பினரை நான் கூப்பிட்டு விடுவேன். எல்லா உறுப்பினர்களுக்கும் 10 நிமிடங்கள்தான் என்று சொல்லியும், ஆரம்பித்த திரு. ரங்கநாதனே 35 நிமிடங்கள் பேசியிருக்கிறார். இப்படியிருந்தால் நான் எப்படி அவையை நடத்துவது? அதனால் 10 நிமிடங்களுக்கு மேல் இனி அனுமதிக்க முடியாது. உங்கள் நேரம் முடிந்துவிட்டது, அவ்வளவுதான். அடுத்த உறுப்பினரை நான் அழைக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். திரு. மா. இராமச்சந்திரன், இவர் இன்றைக்குப் பேச ஆரம்பித்து நாளைக்கு முடிப்பார்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திற்குத் தந்திருக்கும் நிதிநிலை அறிக்கையின்மீது வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய புராணத்தை சேக்கிழார் பெருமான் அவர்கள் அவையிலே அளித்தபோது, அவருடைய அங்கமெல்லாம் வியர்வையில் நனைந்தபோது, தன்னுடைய துண்டை எடுத்து துடைத்துக்



கொண்டதாகச் சொல்வார்கள். அப்படி ஒரு அவையடக்கம் அப்பொழுது இருந்தது. எத்தனையோ ஆண்டுகாலம் இந்த அவையிலே இருந்து பழக்கப்பட்டவர், இந்த நாட்டுக்குப் பயன்பட்டவர், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த 10-வது நிதிநிலை அறிக்கையினை இந்த அவையிலே அளித்தபோது, அவருடைய அங்கமெல்லாம் வியர்த்ததைப் பார்த்தபோது, எங்களுக்கெல்லாம், அந்தச் சேக்கிழார் ஞாபகம்தான் வந்தது. அப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிதிநிலை அறிக்கையை அளித்தார்கள். எத்தனையோ ஆண்டுகாலம் இந்த அவையிலே இருந்தாலும், இந்த நாட்டு மக்களுக்குப் பயப்படுகின்ற ஒரு முதலமைச்சரை, இந்த நாட்டிலே யாரும் பார்த்திருக்க முடியாது, ஜனநாயகத்திற்கும், மக்களுக்கும் பயப்படுகின்ற ஒரு முதலமைச்சரை இந்த நாடு பெற்றிருக்கிறது என்றால், அது கலைஞர்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கை அத்தனை அமைச்சர் பெருமக்களுக்கும் ஒரு வழிகாட்டுதலை, guidelines-ஐ காட்டுகின்ற ஒரு நிதிநிலை அறிக்கை, எந்த இலாகாவாக இருந்தாலும், நீங்கள் இந்த இலாகாவை இப்படி இப்படி நடத்தவேண்டும். இப்படி, இப்படி இலாகாவை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வழிமுறைகளில், ஒவ்வொரு தலைப்பாகக் கொடுத்து, அந்தத் தலைப்புகளின்கீழ் இப்படி இப்படி இயங்கவேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி, நிதிநிலை அறிக்கையை இந்த நாட்டுக்குத் தந்திருக்கிறார்கள். இதுபோன்ற ஒரு அறிக்கையை இந்த நாட்டைத் தவிர, இந்தியாவில், ஏன் உலகத்தில் வேறு எங்கும் பார்க்க முடியாது. இந்த நிதிநிலை அறிக்கையில், வருவாய்த் துறையாக இருந்தாலும், கல்வித் துறையாக இருந்தாலும், உள்ளாட்சித் துறையாக இருந்தாலும், மீனளத் துறையாக இருந்தாலும், உணவுத் துறையாக இருந்தாலும், ஒவ்வொரு துறைக்கும் பகிர்ந்து, பகிர்ந்து அளித்து, அதற்கு தலைப்புகளைக் கொடுத்து, இதற்கு இவ்வளவு, அதற்கு இவ்வளவு என்று சொல்லி வகுத்தளித்த ஒரு முதலமைச்சரை இந்த மாநிலத்தில் தவிர வேறு எங்கும் பார்க்க முடியாது.

இங்கே பேசுகிறபோது 20 சதவிகிதத்தை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறீர்களே என்று சொல்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள் 107 சாதிகள் என்று. எங்களைப் போன்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், எங்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தில் சேர்த்துக்கொள்வீர்களா என்று

கேட்கின்ற ஆதங்கம் பிற்பட்ட சமுதாயத்தில் இன்னும் இருக்கிறது என்பதை நீங்கள் மறுக்க முடியாது. ஏனென்றால், 20 சதவிகிதத்தில் வருகின்றவர்கள் நிறைய பலனைப் பெறுகின்றார்கள். அது குறைவான மக்களைக் கொண்டிருக்கிறது. படித்த மக்களைக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தாலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகிதம் என்பது எந்த அளவுக்கு உபயோகப்படுகிறது என்பதை உங்களுடைய தலைவரே ஒரு தரம் மக்கள் மத்தியிலே படித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு 30 சதவிகிதம்தான் என்று வருகிறபோது, அதிலே எவ்வளவோ பேர் இருக்கிறார்கள், எத்தனையோ கோடி இருக்கிறார்கள் என்று சொல்லி, அந்தச் சமுதாயத்தில் தன்னையும் இணைத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு சமுதாயமும் முனைவதை நான் பார்க்கின்றவன். எனவே, 20 சதவிகிதம் என்பது உங்களுக்கு ஏராளம் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு யார், யாருக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று ஒவ்வொன்றாகச் சிந்தித்துத் தருகிறார்கள். 60,000 பேர்களுக்கு இன்றைக்கு திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவி தொகை தந்திருக்கிறார்கள். நாங்களெல்லாம் 10,000 ரூபாயை அதிகமாகத்தான் கருதுகிறோம். அதனை 5,000 ரூபாய் என்று ஆக்கி, 1,20,000 பேர்களுக்கு உதவலாமே என்று கருத வேண்டியிருக்கிறது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரையை நாளைக்குத் தொடருங்கள். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. சென்னைப் பெருநகர் நீங்கலாக, போக்குவரத்துப் பேருந்துகள் இயக்கப்படாத அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த ஊரகப்பகுதிகளில் "சிறு பேருந்துகளை" இயக்குபவர்கள் செலுத்த வேண்டிய வரியை ஒரு காலாண்டிற்கு, ஒரு இருக்கைக்கு ரூ.360/-லிருந்து ரூ.180/- ஆகக் குறைப்பது தொடர்பாக, உள் (போக்குவரத்து-III) துறையின் 20-01-1998-ஆம் நாளிட்ட 63-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

81. சென்னைப் பெருநகர் நீங்கலாக, போக்குவரத்துப் பேருந்துகள் இயக்கப்படாத அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த ஊரகப் பகுதிகளில், "சிறு பேருந்துகளை" இயக்குபவர்கள் செலுத்த வேண்டிய வரித்தொகை மீது 25 சதவீத மேல்வரி விதிப்பது தொடர்பாக உள் (போக்குவரத்து-III) துறையின் 02-02-1998-ஆம் நாளிட்ட 117-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1971) 25(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

82. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்ற (நடைமுறை) விதிகளை நீக்குவது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 17-11-1997-ஆம் நாளிட்ட 517-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

83. வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 20-02-1990-ஆம் நாளிட்ட III(2) வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறை/966 (எண்.1)ஆம் எண் அறிவிக்கையில் திருத்தம் செய்தது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 19-12-1997-ஆம் நாளிட்ட 590-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

84. தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றத்தின் தலைவராக நீதிபதி திரு. ஜே. கனகராஜ், துணைத் தலைவராக நீதிபதி திரு. வி. ரெங்கசாமி மற்றும் நிருவாக உறுப்பினராக திரு. எல். பழமலை, இ.ஆ.ப. ஆகியோர் நியமிக்கப்பட்டது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத்துறையின் 03-02-1998-ஆம் நாளிட்ட 37-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு வரி வழக்கு தனித் தீர்ப்பு மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1992) 23(2) பிரிவின் கீழ் பேரவைமுன்வைக்கப்பெற்றது].

85. 1996-97-ஆம் ஆண்டிற்கான தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும் (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

86. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

87. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள்-காகித நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

88. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

89. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).





**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

40. 1996-97-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

41. 1997-98-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும்.(தமிழ், ஆங்கிலம்)

42. 1997-98-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானிய கோரிக்கைகளுக்கான அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

43. 1997-98-ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

V211, 31'N98
N98.41.3
218452

D
V2H,31'N98
N98.41.3

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

284452

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.